தொகையில் பெரும் வீழ்ச்சி
பக்கம் 15

24
பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

# உதயன்

பக்கம் 13

சுடர்: 29 கதிர்: 230 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 30, திங்கள் 14.07.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

32°C
தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04


காஸாவில் போர்நிறுத்தம் மேற்கு நாடுகள் முயற்சி 7


நிதி நிலைமை உயரும்போது வரிகள் மேலும் குறையும் 8


இலங்கையின் பிடிக்குள் சிக்கியுள்ள ஆஸி.அரசு 14


ஆர்ஜென்ரீனா அணிக்கு 7 கோடி ரூபா அபராதம் 18

# 13ஆவது திருத்தம் தேவையில்லை சமஷ்டி அரசியல் தீர்வே வேண்டும்

### தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளரும் பேராசிரியருமான சி.க.சிற்றம்பலம் வலியுறுத்துகின்றார்



யாழ்ப்பாணம், ஜூலை 14
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 13 ஆவது திருத்தத்தை முன் வைத்து இந்தியாவுடன் பேச்சு நடத்தக் கூடாது. சமஷ்டியை அடிப்படையாக வைத்தே பேச்சு நடத்த வேண்டும்- இவ் வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளரும், பேராசிரியரு மான சி.க.சிற்றம்பலம்.
முன்னாள் எதிர்கட்சித் தலை வரும், இலங்கைத் தமிழரசுக்

22 ஆம் பக்கம் பார்க்க

## சம்பந்தனின் வதிவிடத்தை சல்லடையிட்ட இராணுவம்

### டெங்கு நுளம்புகளையே தேடினராம்



யாழ்ப்பாணம், ஜூலை 14
தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் கொழும்பு வதிவிடத்தின் கழிப்பறை முதல் சகல இடங்களை யும் இராணுவத்தினர் சல்லடை போட்டு சோதனையிட் டுள்ள னர் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது.
1976ஆம் ஆண்டு அணிசேரா மாநாட் டுக்காக கட்டப்பட்ட தொடர்மாடியின் இரண்டாவது தளத் தில், இரா. சம்பந்தன் கூட்டம் ஒன்றை நடத் திக் கொண்டிருந்த போதே இந்த தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.
கூட்டம் நடந்துகொண்டி ருந்த போது அவரது வதி விடத்தின் கதவு தட்டப்பட் டது. எனினும், கூட்டத்தில் அவர்கள் கவனம் செலுத் தியிருந்ததால் கதவைத் திறக்கவில்லை. மீண்டும் மீண்டும் கதவு தட்டப்பட் டதை அடுத்து, உதவியா ளர் .ஒருவர் கதவைத் திறந்தார். இராணுவத் தின் இளம் அதிகாரி ஒரு வர் இரா. சம்பந்தன் முன் வந்து நின்று, மரியாதை செய்தார்.
தொடர்மாடியை தாம் சோதனையிட வேண்டும் என்றும், டெங்கு நுளம்பு களைக் கண்டுபிடிக்கும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம் என்றும் அந்த அதிகாரி கூறினார். சம்பந்தன் அதற்கு இணங் கினார். அதையடுத்து இரா ணுவக் குழுவினர் படுக் கையறை மற்றும் கழிப்

22 ஆம் பக்கம் பார்க்க

## சவாரி போட்டியை நிறுத்தியது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 14
கிளிநொச்சி மாவட்டத்தில் அக் கராயன் பிரதேசத்தில், கிளை மோர் தாக்குதலில் கொல்லப் பட்ட பிரதேச செயலர் நந்த குமார் ஞாபகார்த்தமாக நேற்று நடத்தப்படவிருந்த மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி இறுதி நேரத்தில் பொலிஸா ரால் தடுத்து நிறுத்தப்பட்டுள் ளது. மேலிடத்திலிருந்து இன் னமும் அனுமதி கிடைக்க வில்லை என்று தெரிவித்தே பொலிஸார் இந்தப் போட்டி யைத் தடுத்து நிறுத்தியுள் ளனர்.
அக்கராயன் பிரதேசத்தில் ஸ்கந்தபுரம் நாகதம்பிரான் கமக்கார அமைப்பினால், நேற்றுப் பி.ப 2 மணிக்கு, குறித்த மாட்டு வண்டிச் சவா ரிப் போட்டியை நடத்துவதற் குரிய ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டிருந்தன. துணுக்காய் பிரதேச செயலாளராக கடமை யாற்றி மக்கள் மனதில் நீங் காத இடம்பிடித்த ந.நந்தகு மார் ஞாபகார்த்தமாகவே இந்த மாட்டுவண்டிச் சவாரி ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.
2007 ஆம் ஆண்டு இடம் பெற்ற கிளைமோர் தாக்குத லில் நந்தகுமார் கொல்லப் பட்டிருந்தார். அக்கராயன் பிரதேசம், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, ஆழ ஊடுரு வும் படையினர் நடத்திய கிளைமோர் தாக்குதலிலேயே அவர் கொல்லப்பட்டிருந்தார்.

22 ஆம் பக்கம் பார்க்க

## சந்திரசிறியின் பதவி நீடிப்பு தவறான முன்னுதாரணம்

### இராஜதந்திரி தயான் ஜயதிலக சுட்டிக்காட்டுகிறார்



கொழும்பு, ஜூலை 14
இராணுவ ஆட்சி நிலவும் பாகிஸ்தானில்கூட சிவில் ஆளு நர்களே பதவி வகிக்கின்றனர் என்று சுட்டிக்காட்டியுள்ள அர சியல் விமர்சகரும் முன்னாள் இராஜதந்திரியுமான தயான் ஜயதிலக, வடக்கில் ஆளுந ராக முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வாவை ஜனாதிபதி நியமித்திருக்க வேண்டும் என வும் குறிப்பிட்டுள்ளார்.
முன்னாள் இராணுவ அதி காரியான ஜி.ஏ.சந்திரசிறி வட மாகாண ஆளுநராக இரண் டாவது முறையாகவும் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவால் பதவி நீடிக்கப்பட்டுள்ளார்.
இந்த நியமனத்துக்கு வடக்கை ஆளும் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பினர், பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினர் மற்றும் சிவில் அமைப்புகள் என அனைத் துத் தரப்பினரும் எதிர்ப்பையே வெளியிட்டு வருகின்றனர். இதுகுறித்துக் கருத்துத் தெரி விக்கும்போதே தயான் ஜய

22 ஆம் பக்கம் பார்க்க

## பிரெஞ் நிறுவனம் தன்னுடைய கடனுதவியை நிறுத்தவில்லை

### யாழ்.- இரணைமடு குடிதண்ணீர் திட்டத்திற்கானது



யாழ்ப்பாணம், ஜூலை 14
இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிதண் ணீர் வழங்கும் திட்டத்துக்கு கடனுதவி வழங்கும் தமது முடிவில் இருந்து விலகுவதாக இது வரையில் முடிவெடுக் கப் படவில்லை என்று பிரெஞ் மேம்பாட்டு முகவர் (ஏ.எவ்.டி) நிலை யம் உதயனுக்குத் தெரிவித்தது.
யாழ்ப்பாணம் - இரணைமடு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்திற்கு மூன்று நிறுவனங்கள் நிதி உதவி வழங்குகின்றன. ஆசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அரசு மற்றும் பிரெஞ் மேம் பாட்டு முகவர் நிலையம் என்ற அந்த மூன்று நிறுவனங் களில் சிறிய பகுதி நிதியை ஏ.எவ்.டி. கடனாக வழங்குகிறது.

22 ஆம் பக்கம் பார்க்க

## மீனவர் பேரணியை நிறுத்துமாறு பொலிஸாரிடம் 10 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 14
தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தால் நாளை யாழ். மாவட்டத்தில் ஏற்பாடு செய் யப்பட்டுள்ள கண்டனப் பேர ணியை நிறுத்துமாறு கோரி யாழ்.பொலிஸ் நிலையத்தில் பத்து முறைப்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. வடக்கு மாகாண சபைத் தேர்தலில், ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணி சார் பில் போட்டியிட்டு தோல்விய டைந்த நா.பொன்னம்பலம் என்பவராலேயே இந்த முறைப் பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்தக் கண்டனப் பேரணி யாழ்.மத்திய பேருந்து நிலை யத்தில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி, யாழ்.மாவட்டச் செயலகத்துக்குச் சென்று மனுக் கையளிப்பதுடன் முடி வுறும். மீள்குடியமர்வு, காணா மற்போனோர் விவகாரம் மற் றும் மீனவர்கள் எதிர்நோக்

22 ஆம் பக்கம் பார்க்க

## கிளர்ச்சியாளர் தாக்குதலில் உக்ரைன் படையினர் சாவு

பக்கம் 7

## இலங்கை வருவதற்கு அனுமதி கோருகிறார் ஐ.நா. அதிகாரி

கொழும்பு, ஜூலை 14
நீதிக்குப் புறம்பான படுகொலை கள் மற்றும் தன்னிச்சையான தூக்குத் தண்டனைகள் தொடர் பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் கிறிஸ்ரொப் ஹெய்ன்ஸ் இலங்கைக்கு வருவதற்கு மீண்டும் அனுமதி கோரியுள்ளார்.
கடந்த ஆண்டும் அவர் இலங் கைக்கு பயணம் மேற்கொள்ள முயன்ற போதிலும், அந்த

22 ஆம் பக்கம் பார்க்க



கொழும்பு சுதந்திர சதுக்க இரண்டாம் கட்ட அபிவிருத்தித் திட்டங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். இது 100 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்ட பரந்த திறந்த வெளிகளையும் மற்றும் பாரம்பரிய கட்டடங்களையும் அபிவிருத்தி செய்யும் ஒரு திட்டமாகும். முதற்பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## அளுத்கம சம்பவத்தை சர்வதேச மயப்படுத்தாதீர்

### முஸ்லிம் சமூகத்திடம் அரசு கோரிக்கை



கொழும்பு, ஜூலை 14

அளுத்கம சம்பவத்தை சர்வதேசமயப்படுத்தவேண்டாமென அரசு முஸ்லீம் சமூகத்தை கோரியுள்ளது. இலங்கை முஸ்லீம் கவுன்சிலுடனான சந்திப்பின்போதே வெளிவிவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அளுத்கம சம்பவம் துரதிஷ்டவசமானது, அதேவேளை உள்நோக்கம் கொண்ட சில சக்திகள் அதை அளவுக்குகதிகமாக பெரிதுபடுத்தப் பார்க்கின்றன எனவும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

அளுத்கம சம்பவத்தினை சர்வதேசமயப்படுத்த முனைந்தால், தமிழ் மக்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் தங்களது நோக்கங்களை சர்வதேச மயப்படுத்தியதால் உண்டான விளைவு கள் போன்ற நிலை உண்டாகலாம் என்றும் அமைச்சர் பீரிஸ் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அளுத்கம சம்பவங்கள் குறித்து ஜெனீவாவிற்கு அரசு அளித்த விளக்கம் குறித்து அரசிடமிருந்து தெளிவை பெறுவதற்காகவே இலங்கை முஸ்லிம் கவுன்சில் வெளிவிவகார அமைச்சரை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

## பிறருக்கு அடித்தமைக்காக 48 பேர் கைது



பி.விமலசேன

யாழ்ப்பாணம், ஜூலை 12

பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் கடந்த வாரம் 48 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

"சட்டவிரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 18 பேரும், சந்தேகத்தின் பேரில் 14 பேரும், மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 3 பேரும், மது போதையில் கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் 3 பேரும், விபத்து ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 4 பேரும், திருட்டுத் தொடர்பில் 6 பேரும், திருட்டு மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் 10 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

## 2022ஆம் ஆண்டுவரையும் மஹிந்தவே ஜனாதிபதியாம்

### அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு வரை நாட்டின் ஆட்சித் தலைவராக விளங்குவார். அதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்று தெரிவித்துள்ளார் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

கடுகண்ணாவையில்நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது ஊவா மாகாண சபை கலைக்கப்பட்டு தேர்தலுக்கு தயாராகியுள்ளோம். இந்தத் தேர்தலில் அரசு வெற்றி பெறுவது உறுதியாகும். இந்தத் தேர்தல் முடிந்த பின்னர் சில மாதங்களில் ஏதாவது ஒரு தேர்தலுக்கு செல்ல வேண்டியுள்ளது.

இது குறித்து நான் ஜனாதிபதிக்கு தெரிவிக்கின்றேன். அடுத்து ஜனாதிபதி தேர்தலுக்கே செல்ல வேண்டும். 2022 ஆண்டு வரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நாட்டின் தலைவராக இருக்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## கோண்டாவில் வாள்வெட்டு; ஒருவர் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

கோண்டாவில் பகுதியில் இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப் பட்ட இருவரில் ஒருவரை பிணையில் விடுவித்த நீதி மன்றம், மற்றையவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத் தரவிட்டது.

இந்த வழக்கு கடந்த வியாழக்கிழமை யாழ்.நீதிமன்றில், நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப் பட்டது. அப்போது, வெட்டிக் கொல்லப்பட்டவரது உறவினர் இருவரில் ஒருவர் தலா ஒவ்வொரு லட்சம் ரூபா பெறுமதியான மூன்று ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டார். மற்றையவருக்கு எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. வாளால் வெட்டிய குற்றச்சாட்டில் கைதானவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

கோண்டாவிலைச் சேர்ந்த பாடசாலை மாணவனான ரவீந்திரன் சுகிர்தன் (வயது 20) என்பவரே வாள் வெட்டில் உயிரிழந்தார். இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட சிறு பிரச்சினையே வாள்வெட்டில் முடிந்தது. வாள்வெட்டுக்கு இலக்கான சுகிர்தன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். (ற-4)

## ரயில் மோதி ஒருவர் காயம்

கிளிநொச்சி, ஜூலை 14

நிறுத்தப்படாத ரயிலில் ஏற முற்பட்ட ஒருவர், ரயில் மோதுண்டு காயங்களுக்குள்ளாகியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் கிளிநொச்சி ரயில் நிலையத்தில் நடந்துள்ளது. கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் (வயது-56) என்பவரே காயமடைந்தவராவார்.

பளையில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் ரயில், கிளிநொச்சி ரயில் நிலையத்துக்கு வந்தபோது அங்கிருந்த பயணிகள் ரயில் ஏற முண்டியடித்தனர். ரயில் நிறுத்தப்படுவதற்கு முன்னதாக ரயிலில் ஏற முற்பட்டபோதே குறித்த நபர் மீது ரயில் மோதியுள்ளது. அவர் தற்போது கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-426)

## லொறி மீது துப்பாக்கிச் சூடு: ஒருவர் காயம்

கொழும்பு, ஜூலை 14

பொலிஸாரின் கட்டளையை மீறி கொஸ்கொட யாலேகம பகுதியில் பயணித்த லொறி ஒன்றின் மீது மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். காலியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த சட்டவிரோதமாக மாடுகள் கொண்டு செல்லப்பட்ட லொறி மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொஸ்கொட பொலிஸ் நிலைய உத்தியோகஸ்தர்கள் நேற்றுக் காலை கடமையில் இருந்த போது பயணித்த லொறியை நிறுத்துவதற்கான கட்டளையிட்ட போதும் , பொலிஸாரின் கட்டளையை மீறி லொறியை ஓட்டிச் சென்றார் என்றும் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

சம்பவத்தில் காயமடைந்த சந்தேகநபர் பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவத்தின் போது லொறியிலிருந்த இரண்டு சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். எனினும் பின்னர் அவர்கள் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)

## மலையகத்தில் கடும் காற்று 800 வீடுகளுக்கு பாதிப்பு

கொழும்பு, ஜூலை 14

மலையகத்தின் பல பகுதிகளிலும் வீசிய கடும் காற்றால் சேதமடைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கை 800ஆக அதிகரித்துள்ளது. பதுளை மாவட்டத்திலேயே அதிக சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி, நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் காற்றினால் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும், 23 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

குறித்த மாவட்டங்களில் இரு தினங்களாக வீசும் பலத்த காற்றின் காரணமாக ஒரு உயிரிழப்பு பதிவாகியுள்ளதுடன் 15 பேர் காயமடைந்துள்ளனர். பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரண உதவிகள் உரியவாறு வழங்கப்பட்டு வருகின்றது என்றும் இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, நாட்டிலும் நாட்டை சூழவுள்ள கடற்பிராந்தியங்களிலும் மணிக்கு 70 கிலோமீற்றர் தொடக்கம் 80 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவு பகுதிகளிலும், நாட்டை சூழவுள்ள கடற்பிராந்தியங்களிலும் பருவக் காற்றின் வேகம் இடைக்கிடையே அதிகரிக்க கூடும் என திணைக்களத்தின் வானிலை அதிகாரி கே.சூரியகுமாரன் தெரிவித்துள்ளார். (ற)



பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 30 திங்கட்கிழமை (14.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 230

# உறுதியான ஆதாரங்கள் கிடைத்தால் விசாரணை

## டக்ளஸ்,கருணா, பிள்ளையான் ஆகியோருக்கு எதிராக நடத்தப்படும் என்கிறது ஜனாதிபதி ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஜூலை 14

**தமிழ் மக்கள் கடத்தப்பட்டமை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் (கருணா), கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) ஆகியோருக்கு எதிராக உறுதியான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றால், மூவருக்கு எதிர ாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற் கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்துள்ளார்.**

அத்துடன் இறுதிக் கட்டப்போரின் முடிவில் இராணுவத் தினரிடம் சரணடைந்தவர்கள் தொடர்பில் உறுதியான சாட்சியங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

காணாமற்போனோர் தொடர்பில் 5 பகிரங்க அமர்வுகளை ஆணைக்குழு இதுவரை நடத்தியுள்ளது. கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொரு தடவைகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு தடவைகளும் ஆணைக்குழுவின் பகிரங்க அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவுக்கு இது வரையில் 19 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள போதும் 750 முறைப்பாடுகளே இது வுரையில் விசாரித்து முடிக்கப் பட்டுள்ளன. ஆணைக்குழுவின் காலப் பகுதி அடுத்த மாதத்துடன் நிறைவடைய வுள்ளது. எனவே எஞ்சிய முறைப்பாடுகளைவிசாரிப்பதற்கு கால நீடிப்பு அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கடந்த காலங்களில் கடத்திச் செல்லப்பட்டமை தொடர்பில் தற்போதைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோருக்கு எதிராக உறுதியான ஆதாரங்கள், சாட்சியங்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டால், அவை தொடர்பில் ஆணைக்குழு மூவரையும் விசாரணைக்கு உட்படுத்தும்.

மேலும் போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினரிடம் நேரடியாக கையளிக்கப்பட்டவர்கள் மற்றும் சரணடைந்தவர்கள் தொடர்பிலும் உறுதியான சாட்சியங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்த முறைப்பாடுகள் குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்தினூடாக மேலதிக விசாரணைகள் மேற் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் இன்னும் இரண்டு அல்லது மூன்று சுற்று அமர்வுகளை நடத்த வேண்டியுள் ளது. அத்துடன் அடுத்து மன்னார் மாவட்டத்திலும், திரு கோணமலை, சியம்பலண் டுவ, வெலிஓயா, வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் அமர்வுகளை நடத்த வுள்ளது - என்றார். (ஐ-5)

## சீன விமான தளம் குறித்து பீரிஸிடம் சுஷ்மா கேள்வி

கொழும்பு, ஜூலை 14

சீனக்குடாவில், விமானத்தள பராமரிப்பு நிலையத்தை அமைக்க சீன நிறுவனத்துக்கு, இலங்கை அரசு அனுமதி அளித்த விவகாரம் குறித்து, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கேள்வி எழுப்பியுள்ளார்.

புதுடில்லியில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சந்திப்பின் போது இது குறித்து சுஷ்மா சுவராஜ் கேள்வி எழுப்பினார் என்று, புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

விமானத்தள பராமரிப்பு நிலையம் குறித்து முறைப்படி அறிவிக்கப்படாத போதும், சீனாவின் தேசிய வான் தொழில்நுட்ப கூட்டுத்தாபனத்துக்கு சீனக்குடாவில் இலங்கை அரசு அனுமதி அளித்துள்ளது குறித்து பீரிஸிடம், சுஷ்மா சுவராஜ் கேள்வி எழுப்பினார்.

இலங்கை விமானப்படையிடம் உள்ள சீனத் தயாரிப்பு விமானங்களைப் பராமரிப்பதற்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## இ.போ.ச - தனியார் பஸ் சாரதிகள் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை வழித்தடல் தனியார்பஸ் சாரதிக்கும், இலங்கை போக்குவரத்து சபை சாரதிக்கும் இடையில் மோதல் ஏற்பட்டு சம்பவம் யாழ். பொலிஸ் நிலையம் வரை சென்றது.

இந்த மோதல் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஊர்காவற்றுறை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக யாழ். மத்திய பஸ் நிலைய நிர்வாகத்தினரிடம் இபோச பஸ் சாரதி தெரியப்படுத்தியுள்ளார்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீனவர்கள் 57 பேரை விடுவிக்க இந்திய அரசு உத்தரவு

டில்லி, ஜூலை.14

இந்தியச்சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 57 இலங்கை மீனவர்களையும் 9 படகுகளையும் விடுவிக்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இன்னும் ஓரிரு தினங்களில் அவர்கள் கொழும்பை வந்தடைவர் என்று கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியக்கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தமைக் காக இந்தியக் கடலோரக்காவல் படையினரால் தென்னிலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டு இந்தியச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிக்கக் கோரி கடற்றொழில் அமைச்சினால் பலதடவைகள் கோரிக்கை விடப்பட்டது.

இதற்கமைவாக மீனவர்களை தண்டப்பணம் செலுத்தி விடுவிக்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. அத்துடன் 9 படகுகளும் விடுவிக்கப்படவுள்ளன.

ஆந்திரா சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 41 மீனவர்களும், கேரளா சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 மீனவர்களுமாக 57 மீனவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர். இதனைவிட தமிழ்நாடு சிறைகளில் 12 மீனவர்களும், ஒரிஸா சிறைகளில் 5 மீனவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் விடுதலை தொடர்பில் தகவல் இன்னும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-14)

## அரசியல் நோக்கம் எமக்கு இல்லை என்கிறது அமெ.

கொழும்பு, ஜூலை 14

அமெரிக்கா அரசியல் நோக்கத்துடனேயே சமூக ஊடக பயிற்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றது என்று ஆளும் கட்சி அமைச்சர்கள் சிலர் சுமத்திய குற்றச்சாட்டை, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ஒருவர்,

அமெரிக்கத் தூதரகத்தினால், தொண்டு அடிப்படையில் சமூக ஊடகங்கள் குறித்து அளிக்கப் படும் தொழில்நுட்பப் பயிற்சிகளுக்கு எந்த அரசியல் உள் நோக்கமும் கிடையாது. இலங்கையில் கருத்து வெளிப்பாடு மற்றும் ஊடக சுதந்திரத்துக்கான எமது நீண்டகால ஆதரவை வெளிப்படுத்தும் வகையிலேயே இந்தப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன' என்று தெரிவித்துள்ளார்.

5 ஆயிரம் இளைஞர்களுக்கு அமெரிக்கத் தூதரகம், சமூக ஊடகங்கள் தொடர்பான பயிற்சியை அளித்து வருகின்றது என்றும், இது ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சதி என்றும் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட அமைச்சர்கள் பலரும் குற்றம்சாட்டியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## 17ஆம் திகதி யாழ். பஸ் நிலையம் அருகில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

இரணைமடு குடிதண்ணீர் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட பெரும் தொகை நிதி திரும்பிச் செல்வதை வடமாகாண சபை உடனடியாக தடுக்க வேண்டும் என்று கோரி எதிர்வரும் 17 ஆம் திகதி தாம் யாழ். பஸ் நிலையத்துக்கு அருகில் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தப்போவதாக முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் தலைவர் எம்.விஜயகாந்த்

(22 ஆம் பக்கம் பார்க்க)

**அரியவாய்ப்பொன்று கை நழுவப்போகின்றது**

**முதன்முறையாக விசா வெற்றி என்கின்ற**

**உறுதிப்பாட்டுடன் செங்கன் விசா ஆலோசனை**

சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி உட்பட

26 ஐரோப்பிய நாடுகளுக்கு 2 வருடம் தொடக்கம்

4 வருடங்கள் வரை விசா வெல்ல ஆலோசனை

கல்வித்தராதரம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.

பலரது வேண்டுகோளின் பிரகாரம்.

நேர்முகத் தேர்வு - 15.07.2014

இதன் பின்னர் எக்காரணத்திற்காகவும் இது நீடிக்கப்படாது.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**

175, பருத்தித்துறை வீதி,

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (49976)



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மராணி (ராணி) செல்வவிநாயகமூர்த்தி



பளையைப் பிறப்பிடமாகவும், கருவேலடி ஒழுங்கை கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மராணி செல்வவிநாயகமூர்த்தி (12.07.2014) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மிக்கேல்-மேரி கிறிஸ்டின் தம்பதியரின் மகளும், செல்வவிநாயக மூர்த்தி (பவா) அவர்களின் மனைவியும், சுஜிகரன், றஜிகரன், பபிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகோகிலனின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2014) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்
077 126 5677, 077 570 0490

(49970)(7.8.3)

## 'சீல்' வைத்து மூடப்பட்டன சுகாதாரக் கேடான உணவகங்கள்

புளியங்குளம், ஜூலை 14

வவுனியா புளியங்குளம் புதூர் நாகதம் பிரான் ஆலயத்தின் திருவிழாவின் போது சுகாதாரச் சீர்கேடான வகையில் இயங்கிய நான்கு உணவகங்களுக்குச் சீல் வைக் கப்பட்டது.

அண்மையில் புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நடைபெற்றது. இதில் பல மாவட்டங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வருகை தந்திருந்தனர். பக்தர்களின் நலன்கருதி இந்தப் பகுதியில் 50 இக்கும் மேற்பட்ட உணவகங்கள் அமைக்கப்பட்டிருந்தன. வவுனியா வடக்கு சுகாதார பணிமனையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பார்வையிட்ட போது நான்கு உணவகங்கள் சுகாதாரச் சீர் கேடான வகையில் இயங்கியமை கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக அந்தக் கடைகளுக்குச் சீல் வைக்கப்பட்டது.

உடனடியாக கடைகளின் உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டு வவுனியா மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதுவிசாரணையை மேற்கொண்ட நீதிவான் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இங்கு இடம்பெறும் ஆலயங்களில் திருவிழாக்களின் போது சுகாதாரச் சீர்கேடான வகையில் உணவகங்கள் இயங்கி வருகின்றமை குறித்து பலரும் முறைப்பாடுகள் தெரிவித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-422)

## கண்ணீர் அஞ்சலி



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பொது நூலகத்தில் நூலகராகக் கடமையாற்றும் க.ஈஸ்வரன் அவர்களின் அன்புச் சகோதரன்

### கந்தசாமி சத்தியமூர்த்தி

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

தவிசாளர், செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
பிரதேசசபை, பளை.

(19967)
(12.3.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### சதாசிவம் பரமேஸ்வரன்

திதி : திருதியை 14.07.2014



பிறப்பு 06 . 08 . 1949

இறப்பு 26 . 06 . 2013

அன்பு நிறை அப்பாவே ஆண்டவனைத் தொழும்போது
நாளும் இங்கு தெரிவதோ உங்கள் முகம்
ஏற்றமுறும் எம்வாழ்வில் ஏணியாய் இருந்தவரே
பண்புடனே பார்போற்ற தரணியிலே மகிழ்வுடனே வாழ்ந்தீரே!
ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லை எம்சோகம்
எப்போது மீள்வீரோ எமக்காக மீண்டும் இங்கு.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தெய்வபதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கனகராசா



மாவிட்டபுரம், வீமன்காமம் பளையைப் பிறப்பிடமாகவும், மாகியப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கனகராசா நேற்றுமுன்தினம் (12.07.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கனகமணியின் அன்புக் கணவரும், தர்சன் (லண்டன்), தர்சினி (பிரான்ஸ்), பபிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், மதன், உதயபுத்திரன் ஆகியோரின் அன்பு மாமனும், மர்வினின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி சந்தி,
மாகியப்பிட்டி.

(49969) (45.6.3)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# என்றும் நீங்கா நினைவுடன் ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

## யோகராஜா ஸ்ரீகாந்

தோற்றம் 09.05.1981

மறைவு 25.06.2013

திதி: அபரபக்க திருதியை (14.07.2014)

"துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று''

பன்னிருமாதங்கள் உருண் டோடினாலும்
அழியாத அன்பான எண்ணங்கள் - என்றும்
தாங்காத துயரோடு நிலைத்திருக்கும்
விதியின் விளைவை நோவதை - தவிர
வேறு பயனில்லை
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி - சிந்துஜா ஸ்ரீகாந்
யாழ்ப்பாணம்.

# வாள் கலாசாரத்துடன் தொடர்புடையவர்களை இனங்கண்டு நீதிமன்றுக்கு விவரம் அறிவியுங்கள்

## கிராம சேவகர்களுடனான சந்திப்பில் சாவகச்சேரி மாவட்ட நீதிவான் தெரிவிப்பு

தென்மராட்சி, ஜூலை 14

தென்மராட்சிப் பிரதேசத்தில் சட்டவிரோத செயற்பாடுகளுடன் தற்போது வாள் கலாசாரமும் தலைதூக்கியுள்ளது. இதனை ஆரம்பத்தில் கட்டுப்படுத்தாவிடின் பெண்களும் வாள் கலாசாரத்தில் இறங்கி விடுவார்கள். வாள் கலாசாரம் உருவாக பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றபோதிலும் அதனைக் கட்டுப்படுத்த பொலிஸார் மட்டுமன்றி அந்தந்த கிராம அலுவலர்களும் தமது நாளாந்த கடமைகளுடன் வாள் கலாசாரத்தை நம்புபவர்களை இனங்கண்டு அவர்கள் குறித்த விவரங்களை நீதிமன்றுக்கு அறிவிக்க வேண்டும். இவ்வாறு தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர்களுடனான கலந்துரையாடலில் சாவகச்சேரி மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உரையாற்றினார்.

பொது மக்களுக்கு அயலில் உள்ளவர்களுடன் நல்லுறவு பேணப்படாததாலும் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை அருகியதாலும் இவ்வாறான வெறுக்கத்தக்க செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. சமூக அமைப்பில் உள்ளவர்களின் ஏனோதானோ என்ற வாழ்க்கை முறையே இன்றைய துர்ப்பாக்கிய நிலைக்கு காரணம் என்று நாம் காண்கின்றோம். எதிர்காலச் சந்ததியினரை சிறந்த பிரசைகளாக மாற்ற கிராம அலுவலர்கள் சமூகத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டிய கடப்பாடு இன்று காணப்படுகிறது.

ஒவ்வொரு பிரிவிலும் குற்றச் செயல்கள் நடைபெறாமல் தடுக்க பிரிவு மக்களும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும். வாள் இருக்கும் வீடுகளை அறிந்து அது தொடர்பான விவரங்களை கிராம அலுவலருக்கு அறிவிக்க முன் வரவேண்டும். அவ்வாறு கிடைக்கும் தகவல்களை கிராம அலுவலர்கள் நீதிமன்றுக்கு அறிவிக்க வேண்டும். இன்றைய இளைஞர்களின் தவறான வழி நடத்தல்கள் மக்களுக்கு பல்வேறு சிரமங்களை ஏற்படுத்தி வருகின்றன. இவ்வாறானவர்களை இனங்கண்டு அவர்களின் எதிர்கால நலன்கள் குறித்து அவர்களை நல்வழிப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். இது கிராம அலுவலர்களின் கடமைகளுக்கு அப்பாற்பட்ட விடயமாக இருந்தாலும் அதனைச் செய்ய வேண்டிய நிலையில் நாம் உள்ளதை மறக்கக் கூடாது. தவறான வழிகளில் செல்வோரைத் திருத்த நடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டும்.

சம்பந்தப்பட்டவர்களின் பெற்றோர், உறவினர், ஊர்ப் பிரமுகர்களை அழைத்து அவர்களிடம் அந்த நபரின் நடத்தைகளால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் கூற வேண்டும். அந்த நபர் எதிர்காலத்தில் வேலை வாய்ப்புக்கள், வெளிநாட்டு பயணங்கள் போன்றவற்றுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் பற்றிய விவரங்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

பிரதேச மட்டத்தில் தீர்க்கப்பட வேண்டிய பல விடயங்கள் நீதிமன்றுக்கு கொண்டு வரப்படுகின்றன. நீதிமன்றுக்குள் வரும் எந்தவொரு வழக்கும் சட்டப்படியே நடத்தப்படும். குறிப்பாக பணம், காசோலை மோசடி போன்ற வழக்குகள் நீதிமன்றுக்கு கொண்டு வரப்படுகின்றன. அவற்றுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது - என்றார். (வ-9)

## மத்திய நிலையம் திறந்து வைப்பு

கிளிநொச்சி, ஜூலை 14

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் வடமாகாணத்துக்கான மத்திய நிலையத் திறப்பு விழா நாளை முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள திருநகரில் (அரச அதிபர் இல்லத்துக்கு அருகில்) இடம்பெறவுள்ளது.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இந்த மத்திய நிலையத்தைத் திறந்து வைப்பார். இன்று 14 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 20 ஆம் திகதிவரை நாடளாவிய ரீதியில் சமூக ஒருமைப்பாட்டு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த நிலையம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## முத்தமிழ் விழா

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் முத்தமிழ் விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெறுமென தமிழ் மன்றத்தினர் அறிவித்துள்ளனர். தமிழ் மன்றத் தலைவர் செல்வி ர.அறிவழகி தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) திருமதி மீரா அருள்நேசனும், கௌரவ விருந்தினராக செ.திருமாறனும் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

## சந்தைகளில் பனங்கட்டி

தென்மராட்சி, ஜூலை 14

ஆடிப் பிறப்பை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச சந்தைகளில் பனங்கட்டி விற்பனை செய்யப்படுகிறது. பெருமளவு பனங்கட்டி உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை கொண்டு வந்துள்ளதால் 20 ரூபா தொடக்கம் விற்பனை செய்யப்படுவதைக் காணமுடிகிறது. (ஓ-9)

## விளையாட்டு விழா

நந்தாவில் மனோன்மணி சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் மனோன்மணி பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா நந்தாவில் மனோன்மணி ஆலய முன்றிலில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை ஆசிரியர் செல்வி பெ.ஜெயந்தினி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச சபையின் உப தவிசாளர் திருமதி கோமதி ரவிதாஸ் கலந்து கொள்வார். (ஓ)

## வருடாந்தப் பொங்கல் விழா

ஓமந்தை அரசபதி கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை அபிஷேகப் பூசைகளுடன் ஆரம்பமாகவுள்ள இந்தப் பொங்கல் விழாவில் மாலையில் சிறப்புப் பொங்கல் நிகழ்வும், அம்மன் வீதி உலா வரும் போது உலங்கு வானூர்தி மூலம் மலர் தூவும் காட்சியும், தென் இந்தியக் கலைஞர்களின் இன்னிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (க-421)

## பயிற்சி நிலையத்துக்கு விண்ணப்பங்கள்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் (Computer Hardware Technician) பயிற்சி நெறியில் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழைப் பெற யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க பொ.த. (சா/த) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-35 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர் NAITA, இல.44 சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும். (க)


TOSHIBA
Leading Innovation >>>
e-STUDIO

யாழ்ப்பாணத்தில்
TOSHIBA பிரதியெடுக்கும்
இயந்திரங்களுக்கான இலவச பரிசோதனை*
ஜூலை 14ஆம், 15ஆம் திகதிகளில்

பிரசாத் 077 3060627 அல்லது ஜெரி 077 3956616 ஊடாக விபரங்களைப் பெற அழையுங்கள்



e-Studio 2006 20 PPM | A3 - A5 | 250 Sheet Cassette 512MB RAM | USB Print | USB Colour Scan

அலுவலகப் பாவனைக்கான தரமுயர்ந்த அச்சிடும் மற்றும் நிழற்படப் பிரதியெடுக்கும் இயந்திரங்களை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கு அதிகாரம் பெற்ற ஒரேயொரு வியாபார நிறுவனமாகிய ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (JKOA) தனது உன்னதமான பராமரிப்புச் சேவையை விஸ்தரித்து, வலுப்படுத்தும் முகமாக JKOA வாடிக்கையாளர்களின் TOSHIBA நிழற்பட பிரதியெடுக்கும் இயந்திரங்களை இலவசமாகப் பரிசோதிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் பராமரிப்புச் சேவையை வழங்கவும் JKOA தொழில்நுட்பவியலாளர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகிறார்கள். யாழ்நகரிலுள்ள எங்கள் முகவராக நோர்த் லிங்க் என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் இயங்குகின்றது.

உங்களுக்கான மாறுபட்ட மாதிரிகளில் ரூ. 85,000/- (+VAT) இலிருந்து!

*நிபந்தனைகளுக்கு உட்படும்

ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஒட்டோமேஷன் (பிறைவேட்) லிமிட்
90, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 313 000 | தொலைநகல்: 2 431 745
மின்னஞ்சல்: jkoa@keells.com
தகவல்தளம்: www.jkoa.com

நோர்த் லிங்க் என்ஜினியரிங்
யாழ்ப்பாணம்
021 222 4099 / 0777 448 133

புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு
அஷோக் 0773 182 838 அல்லது
0777 725 241 மூலம் அழையுங்கள்

(சி.14665)



வலி. கிழக்கு வடபகுதி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி (வ-து)

**பதவி வெற்றிடம்**

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை சங்க வேலை நாள்களில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர், வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி என்ற முகரிக்கு 31.07.2014 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும்.

பதவி விவரம் : கிளை முகாமையாளர்
வெற்றிட எண்ணிக்கை : 09

1) பதவிப் பெயர் : கிளை முகாமையாளர்
(சம்பளக் குறியீட்டு இல 208/15)

சம்பள அளவுத்திட்டம் : 9450 - 11000 / 75×10 - 80×10 (சுற்று நிருப இல. 66/2006 இன்படி)

(இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் இதர படிகளும் வழங்கப்படும்)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :

அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 14ஆவது சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்டதுறை பதவியொன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 15ஆவது சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்டதுறைப் பதவியொன்றில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (சாதாரணதர) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரண தரம்) சான்றிதழ் 2 அமர்வுகளுக்கு மேற் படாது. எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம் /தூய கணிதம், தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 6 பாடங்களிலான சித்தி சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொது நிபந்தனைகள்:

4) வயது 31.07.2014ஆம் திகதி 18 வயதிற்கு குறையாதவர்களாயும் 45 வயதிற்கு மேற்பட்டாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
5) கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தல் நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
6) நியமனத்தின் போது சுற்றுநிருபத்திற்கமைவாக ரொக்கப்பிணை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.
7) ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
8) சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

இளையதம்பி சந்திரன்
தலைவர், வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.சங்கம்
அச்சுவேலி (வ-து)

12.07.2014 (சி/14971)(7.6.3)

## பழுதடைந்த சோஸ் போத்தல்களை விற்க முயன்ற மூன்று பேர் கைது



கொழும்பு, ஜூலை.14

வத்தளை - ஹெந்தல பிரதேசத்தில் காலாவதியான சோஸ் போத்தல்களை விற்பனை செய்ய முற்பட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுகர்வோர் சேவைகள் அதிகார சபைக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் எலகந்த பகுதியில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 15,000 சோஸ் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக நுகர்வோர் சேவைகள் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

அவற்றின் பெறுமதி சுமார் 41 இலட்சம் ரூபா என்று நுகர்வோர் சேவைகள் அதிகார சபையின் கம்பஹா அலுவலக பிரதானி ரஞ்சித் வீரவர்த்தன தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களை வத்தளை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ)

# பிரதேச செயலகங்களை மதிப்பிட அமைச்சால் விசேடகுழு நியமனம்

கொழும்பு, ஜூலை 14

பொதுமக்களுக்கான சேவை முறையாக மேற்காள்ளப்படுகின்றதா என்பது குறித்து பிரதேச செயலகங்களை மதிப்பீடு செய்வதற்காக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு மிகவும் சிறந்த சேவையை வழங்கும் பிரதேச செயலகங்களை கண்டறிந்து அவற்றை வகைப்படுத்தும் நோக்கில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்னவின் ஆலோசனையின் பேரில் இந்த மதிப்பீடு செய்யப்படவுள்ளது.

முதன்முதலாக மொனராகலை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் நாடு முழுவதிலும் விஸ்தரிக்கப்படும்.

இந்த மதிப்பீட்டை அடுத்து பொதுமக்களுக்கு சிறந்த சேவையாற்றிய பிரதேச செயலகங்கள் தரப்படுத்தப்படும்.

பிரதேச செயலகங்களில் பொதும்மக்களுக்கு சிறந்த சேவை வழங்கப்படுகின்றதா? பிரதேச செயலகங்களின் அலுவலக முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படுகின்றதா?, அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றதா?, காணி தொடர்பான விடயங்களும் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகள் முறையாக கையாளப்படுகின்றனவா?, பிரதேச செயலாளர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களின் பரிபாலனம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இந்த மதிப்பீட்டுக்குழு மதிப்பீடுகளை நடத்தும்.

எந்தவித முன்னறிவித்தலுமின்றியே பிரதேச செயலகங்களுக்கு செல்லுமாறும் இந்த மதிப்பீட்டுக்குழுக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிராம சேவை அதிகாரிகளின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு பொதுநிர்வாக உள்நாட்ட லுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன பணிப்புரை விடுத்துள்ளார். (வ)

## மர்ம நோயால் 2 குழந்தைகள் சாவு; இழுத்து மூடப்பட்டன 10 முன்பள்ளிகள்

### பத்தேகம பகுதி பெற்றோர் மத்தியில் அச்சம்

காலி, ஜூலை 14

பத்தேகம மற்றும் வெலிவிட்டிய திவிதுர் பிரதேசங்களில் முன்பள்ளிகளுக்குச் செல்லும் பிள்ளைகள் இருவர் இனங்காணப்படாத மர்ம நோய் காரணமாகக் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளனர்.

இந்தப் பிள்ளைகளின் இறப்பை அடுத்து பாதுகாப்பு நடவடிக்கையாக பத்தேகம பிரதேசத்திலுள்ள 10 முன்பள்ளிகள் மூடப்பட்டுள்ளன.

காய்ச்சல், தலையிடி, வாந்தி, வயிற்றோட்டம் போன்ற நோய் அறிகுறிகள் காரணமாக பத்தேகம மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பிள்ளைகள் ஐவர் மேலதிக சிகிச்சைக்களுக்காக காலி கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

அவர்களில் இரு பிள்ளைகளே வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளதாக பத்தேகம பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவிக்கிறது.

ஒரே தினத்தில் ஒரே வயதில் உள்ள பிள்ளைகள் இருவர் உயிரிழந்திருப்பது தொடர்பாக வைத்திய நிபுணர்களின் குழு ஒன்றினால் பரிசீலனைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் பத்தேகம வைத்தியசாலையின் வைத்தியர்கள் தெரிவித்துள்ள்னர்.

இவ்விதம் உயிரிழந்திருந்த 4 வயதான ஷனுள் ஷத்துஷவுக்குச் சில தினங்களாக தலையிடி ஏற்பட்டிருந்ததாகவும் காலையில் முன் பள்ளிக்குச் சென்றிருந்ததன் பின்னர் நெஞ்சுவலி ஏற்பட்டு பத்தேகம மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அங்கு அனுமதித்ததாகவும் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கராப்பிட்டிய போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டதாகவும், அந்த வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டு வந்த போதும் 24 மணித்தியாலங்களுக்கு பின்னர் உயிரிழப்பு ஏற்பட்டதாகவும் சிறுவனின் தந்தையான ஹீகனகே மதுரங்க தெரிவித்துள்ளார்.

> ஒரே தினத்தில் ஒரே வயதில் உள்ள பிள்ளைகள் இருவர் உயிரிழந்திருப்பது தொடர்பாக வைத்திய நிபுணர்களின் குழு ஒன்றினால் பரிசீலனைகள் ஆரம்பிக்கப்பட்டனர்.

ஏனைய சிறுமியின் பெற்றோர்கள் தெரிவிக்கையில், தமது மகளின் உடல்நிலை மோசமடைந்து வந்ததன் காரணமாக ஜூலை 7 ஆம் திகதி காலையில் பத்தேகம வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதிக்கப்பட்டார்.

மேலதிக சிகிச்சைக்காக பின்னர் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற நிலையில் மறுநாள் உயிரிழந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த இரு இறப்புகள் சம்பந்தமாக பிரதேச உயிர் கொல்லி நோய் மருத்துவ நிபுணர்கள் குழு ஒன்று பரிசீலனைகளை நடத்தி வருவதோடு, முன் பள்ளிகள் சிலவற்றுக்கு நீர் பெறப்படும் இடங்களில் நீர் மாதிரிகளைப் பெறப்பட்டிருப்பதாகவும் வைத்திய நிபுணர்களில் ஒருவரான ஶ்ரீயானி ஜயசூரிய தெரிவித்துள்ளார். (ஒ-22)

# நன்றி நவிலலும் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும்




### அமரர்

## சிற்றம்பலம் சின்னத்தம்பி

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் (A.O),
ஆதார வைத்தியசாலை,
பருத்தித்துறை)

கடந்த 17.06.2014 செவ்வாய்க்கிழமை எமது தந்தையார் எம்மைவிட்டு சடுதியாகப் பிரிந்த போது உடனிருந்து ஆறுதல் அளித்து எல்லாவழிகளிலும் உதவிகள் புரிந்த அயலவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலக சமூகத்தினர், மக்கள் வங்கி சமூகத்தினர், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை சமூகத்தினர், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.
அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (15.07.2014) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 17.07.2014 வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கரம்பைக்குறிச்சி, வரணி. (49923)(3.6.4) குடும்பத்தினர்.



ஸ்பெயினில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காளை விரட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் 4 பேர் காயமடைந்துள்ளனர். அந்நாட்டின் வடக்கிலுள்ள பாம்ப்லோனா நகரில் கொண்டாடப்பட்ட 'சான் ஃபெர்மின்' என்ற இந்தக் காளை விரட்டு நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் தங்களது வீரத்தை சோதித்துப் பார்க்கும் முயற்சியாக 6காளை மாடுகளை விரட்டிச் சென்றனர். ஸ்பெயினைச் சேர்ந்த நாவலாசிரியர் எர்னெஸ்ட் ஹெமிங்வே 1926ஆம் ஆண்டு வெளியிட்ட 'தி சன் ஆல்சோ ரைஸஸ்' என்ற நாவலைத் தழுவி இந்தக் காளை விரட்டு விழா ஆண்டு தோறும் 9 நாள்கள் கொண்டாடப்படுகிறது. (ற)

## காஸாவில் போர்நிறுத்தம் மேற்கு நாடுகள் முயற்சி

நியூயோர்க், ஜூலை 14
காஸா பகுதியில் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் இடையே போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவது குறித்து அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் விவாதிக்க உள்ளதாகப் பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார்.

அவர் இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரியுடன் அவர் விரிவாகப் பேச்சு நடத்த உள்ளார். அத்துடன் பிரான்ஸ், ஜேர்மனி ஆகியவற்றின் வெளியுறவு அமைச்சர்களுடனும் விவாதிக்க உள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்;



*காஸா பகுதி மீது இஸ்ரேல் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளது. இஸ்ரேல் எல்லைப் பகுதியில் இருந்து காஸா நோக்கி கடும் ஏறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.*

"ஈரானின் அணுசக்தித் திட்டம் குறித்த பேச்சு நடைபெற உள்ளது. அதற்கு இடையே, காஸாவில் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் இடையே நடைபெறும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்தும் நாங்கள் விவாதிப்போம்' என்று தெரிவித்துள்ளார். (ற)

## அமெரிக்காவில் கடும் புயல்

நியூயோர்க், ஜூலை 14
கடும் புயல் காரணமாக அமெரிக்காவின் வெர்ஜினியா மாகாணத்தில், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. புயலால் ஏற்பட்ட விபத்துகளில் இதுவரை 10 பேர் காயமடைந்துள்ளனர். பல வீடுகள் சேதமடைந்துள்ளன. புயல் காரணமாக வீதிகளில் மரங்கள் விழுந்துள்ளதால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர். (ற)

## பிடல் காஸ்ரோவை சந்தித்து புடின் பேச்சு



மொஸ்கோ, ஜூலை 14
கியூபா சென்றுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், பிடல் காஸ்ட்ரோவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்தக் கலந்துரையாடலில், இருநாட்டு உறவுகள், சர்வதேச விவகாரங்கள் மற்றும் உலக பொருளாதார சூழல் குறித்து விவாதிக்கப்பட்டது.
அதன் பின்னர் தமது கியூபா பயணத்தை முடித்து கொண்டு விடைபெற்ற புடினை, அந்த நாட்டு ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோவழிஅனுப்பிவைத்தார்.(ற)

## லிபியாவிலிருந்து வெளியேறும் ஐ.நா. சபையின் அதிகாரிகள்




நியூயோர்க், ஜூலை 14
லிபியாவில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக அந்த நாட்டில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள் வெளியேறி வருகின்றனர். இதுகுறித்து செய்தி நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டியளித்த ஐ.நா.வின் செய்தி தொடர்பாளர்களில் ஒருவரான, சமிர் கட்டாஸ்
"இதுவரை 200 அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்"- என்று தெரிவித்துள்ளார்.
ஆயினும் குறைந்த அளவிலான ஐ.நா. அலுவலர்கள் லிபியாவில் தொடர்ந்து பணியாற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## கிரீஸில் பரவும் பெரும் காட்டுத் தீ கட்டுப்படுத்த பெரும் போராட்டம்

கெரடியா, ஜூலை 14
கிரீஸ் நாட்டில் ஏற்பட்டுள்ள காட்டு தீ கட்டுக்கடங்காது பரவி வருகின்றது. தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அந்த நாட்டுத் தீயணைப்புத்துறை கடுமையாகப் போராடி வருகின்றது.
ஏதென்ஸ் நகரிலிருந்து 30 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மலை கிராமமான கெரடியா என்னுமிடத்தில் ஏற்பட்ட தீ, வேகமாக வீசி வரும் காற்றால் மேலும் பல இடங்களில் பரவி வருகிறது.
குடியிருப்பு பகுதிகளை தீ நெருங்கி வருவதால் அதனை கட்டுக்குள் கொண்டு வர தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர்.
2 விமானங்கள், 2 ஹெலிகாப்டர்கள், 46 தீயணைப்பு வாகனங்கள் மூலம் 100க்கும் மேற்பட்ட வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.
தீயை அணைக்க இராணுவத்தின் உதவியும் நாடப்பட்டுள்ளது. பாதுகாப்புக்காக அருகிலுள்ள குடியிருப்புகளில் வாழும் மக்கள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றனர். கிரீஸில் கோடைக்காலங்களில் வெப்ப நிலை 40 டிகிரி செல்ஷியஸிற்கும் அதிகமாக உயர்வதால் இதுபோன்ற காட்டு தீ விபத்துகள் அதிகரிப்பது வழமையாகி வருகின்றது. (ற)

## கிளர்ச்சியாளர் தாக்குதலில் உக்ரைன் படையினர் சாவு


கீவ், ஜூலை 14
உக்ரைனின் கிழக்குப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய ரொக்கெட் தாக்குதலில் அரச படையைச் சேர்ந்த 19 பேர் உயிரிழந்துள்ளனர்.
லுகான்ஸ்க் பகுதியில் இந்த தாக்குதல் நடந்துள்ளது என்று அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. அரசப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அந்த நாட்டு ஜனாதிபதி பெட்ரோ போரோ ஷென்கோ கண்டனம் தெரிவித்துள்ளார். (ற)



# நிதி நிலைமை உயரும்போது வரிகள் மேலும் குறையும்

## நிதி அமைச்சர் அருண் ஜெட்லி தெரிவிப்பு

புதுடில்லி, ஜூலை 14
நிதி நிலை உயரும்போது வரிகள் மேலும் குறைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் நிதி அமைச்சர் அருண் ஜெட்லி. நாட்டின் பொருளாதாரம் உயரும்போது வரிகள் மேலும் குறைக்கப்படும் என்று உறுதியளித்துள்ள அருண் ஜெட்லி, தற்போதைய வரவு- செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வரிகுறைப்புபோல், சுதந்திர இந்தியாவில் ஒருபோதும் வரிக் குறைப்பு செய்யப்பட்டதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.வரிசெலுத்தும் மக்கள் நடுத்தர பிரிவினரானாலும், உயர் பிரிவினரானாலும் குறைந்த பட்சம் ஆண்டுக்கு 50 ஆயிரம் ரூபா அளவுக்கு வரி குறைக்கப்பட்டிருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். அதன் மூலம், வரி செலுத்துவோர், கூடுதலாக சேமிக்கவும், செலவு செய்யவும் வழி உருவாகியுள்ளது என்று தெரிவித்த அவர், நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு இது நிச்சயம் உதவும் என்றும் தெரிவித்துள்ளார். (ற)



# பிரேஸில் சென்றார் இந்தியப் பிரதமர்

புதுடில்லி, ஜூலை 14
இந்தியப் பிரதமர் மோடி பிரிக்ஸ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரேஸிலுக்கு தனி விமானத்தில் புறப்பட்டு சென்றுள்ளார்.
பிரிக்ஸ் எனப்படும் பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய 5 நாட்டு தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாடு பிரேஸில் நாட்டின் வட கிழக்கு கடற்கரை நகரமான போர்டாலிசாவில் நடைபெற உள்ளது.
அதில் கலந்துகொள்வதற்காகவே பிரதமர் மோடி கலந்து பயணம் மேற்கொண்டுள்ளார். பிரதமருடன் மத்திய வர்த்தகத்துறை இணை அமைச்சர் நிர்மலா சீதாராமன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர், ஏ.கே. தோவால், வெளியுறவுச் செயலாளர் சுஜாதா சிங், நிதித்துறை செயலாளர் அரவிந்த் மாயாராம் ஆகியோர் அடங்கிய உயர் நிலைக் குழுவும் செல்கிறது.
மாநாட்டில் பங்கேற்கும் பிரதமர் மோடி, பிரேஸில் அதிபர் தில்மாரூசேப், ரஷ்ய அதிபர் புதின், சீன அதிபர் ஜீஜின்பிங், தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் ஜுமா உள்ளிட்ட தலைவர்களைத் தனித்தனியாகச் சந்தித்து இரு நாட்டு உறவு மற்றும் வர்த்தகம் பற்றி பேச்சு நடத்தவுள்ளார். இந்த மாநாட்டில், பிரிக்ஸ் வளர்ச்சி வங்கியின் தலைமையகத்தை எங்கு அமைக்கலாம் என்பது பற்றி இந்த மாநாட்டில் முடிவு எடுக்கப்படுகிறது. சீனாவின் ஷாங்காய் நகர் அல்லது இந்தியத் தலைநகர் டில்லியில் பிரிக்ஸ் வங்கி அமைக்கப்படும் வாய்ப்புகள் தொடர்பாகவும் மாநாட்டில் ஆலோசனை நடத்தப்படவுள்ளது. (ற)

# டில்லியில் மீண்டும் தேர்தல்?

புதுடில்லி, ஜூலை 14
டில்லி சட்டசபைக்கு தேர்தல் நடத்துவதா, அல்லது மாற்று ஏற்பாடுகள் மூலம் அரசை ஏற்படுத்துவதா என்பது குறித்து கட்சியின் மூத்த, முக்கிய தலைவர்களுடன் ஆலோசனை நடத்திய பின்னர் முடிவெடுக்கப்படும் என்று டில்லி பா.ஜ.க. தலைவர் சதீஷ் உபாத்தியாயா கூறி உள்ளார். (ற)




இந்திய நாடாளுமன்றில் பா.ஜ.க. தலைமையிலான அரசு வரவு - செலவுத் திட்ட அறிக்கையைச் சமர்ப்பித்துள்ள நிலையில், கொல்கத்தாவை சேர்ந்த சூசி என்ற அமைப்பின் ஆர்வலர்கள் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சட்டசபைக்கு தாமதமாக வந்தால் ரூ.500 அபராதம்

## ராஜஸ்தான் முதல்வர் அதிரடி

ஜெய்ப்பூர், ஜூலை 14
சட்டசபை கூட்டத்துக்கு தாமதமாக வரும் பா.ஜ.க. உறுப்பினர்களுக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்படும் என்று அதிரடியாக அறிவித்துள்ளார் ராஜஸ்தான் முதல்வர் வசுந்தரா ராஜே சிந்தியா.
ராஜஸ்தானில், முதல்வர் வசுந்தரா ராஜே சிந்தியா தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி நடக்கிறது. சட்டசபை கூட்டத்தொடருக்கு உறுப்பினர்கள் தாமதமாக வருவது அங்கு வழமையாகவுள்ளது. ஆளும் கட்சி உறுப்பினர்கள்தான் தாமதமாக வருகின்றனர்.
இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக, முதல்வர் வசுந்தரா அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார். "பா.ஜ.க. உறுப்பினர்கள் சட்டசபைக்கு தாமதமாக வந்தால், 500 ரூபா அபராதம் செலுத்த வேண்டும்" என்று அறிவித்துள்ள அவர், நேற்று முன்தினம் நடந்த பட்ஜெட் கூட்டத்துக்குத் தாமதமாக வந்த பா.ஜ.க. உறுப்பினர்கள் 15 பேரிடம் தலா 500 ரூபா அபராதம் வசூலித்துள்ளார். இதுகுறித்து, பா.ஜ.கவின் மூத்த சட்டசபை உறுப்பினரான ரஜவாத் கூறுகையில், "முதல்வரின் இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது. நம்மை தேர்வு செய்து, சட்டசபைக்கு அனுப்பி வைத்த மக்களின் நம்பிக்கையைச் சிதறடிக்கக்கூடாது. சட்டசபை நடக்கும் ஒவ்வொரு நிமிடமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று தெரிவித்தார். (ற)

# துணை சபாநாயகர் அந்தஸ்து அ.தி.மு.கவுக்குக் கிடைக்கலாம்

புதுடில்லி, ஜூலை 14
இந்திய நாடாளுமன்றத்தில் துணை சபாநாயகர் பதவி அ.தி.மு.கவுக்கு வழங்கப்பட உள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
நாடாளுமன்ற மரபுப்படி எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்களுக்கு துணை சபாநாயகர் பதவி வழங்கப்படுவது வழக்கம்.
பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்து காங்கிரஸ் கட்சிக்கு வழங்கப்படாத நிலையில், நாடாளுமன்றத்தில் 2ஆவது பெரிய எதிர்க்கட்சியான அ.தி.மு.கவுக்கு துணை சபாநாயகர் பதவி வழங்க பா.ஜ.க. முடிவு செய்துள்ளது என்று டெல்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
பா.ஜ.கவுக்கு பெரும்பான்மை இருப்பதால் துணை சபாநாயகர் தேர்தல் நடைபெறுமா? என்ற கேள்வியும் எழ வில்லை.
எனவே அ.தி.மு.கவுக்கு துணை சபாநாயகர் பதவி வழங்க வாய்ப்பு உள்ளது. இது பற்றி சபாநாயகர் சுமித்ரா மகாஜன் ஆலோசனை நடத்தி முடிவு எடுப்பார் என்று கூறப்படுகிறது. (ற)

# மோடியின் சகாப்தம் ஆரம்பம்

புதுடில்லி, ஜூலை 14
அமித் ஷா பா.ஜ.கவின் தேசியத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின் அகமதாபாத் விமான நிலையத்தில் அவருக்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.
அதன்போது கருத்துத் தெரிவித்த அமித் ஷா,
"இந்தியாவில் பா.ஜ.கவின் சகாப்தமும், மோடியின் சகாப்தமும் தொடங்கிவிட்டது. இந்த சகாப்தத்தில் நாடு வளர்ச்சியில் மிக உயர்வான இடத்தை அடையும். மோடியின் அரசு மத்தியில் மிக நல்ல முறையில் செயலாற்றி வருகிறது.
அதற்கு உதாரணம் வரவு- செலவுத் திட்டம். கட்சியின் உறுப்பினர் என்ற முறையில் நம்முன் மிகப்பெரிய பொறுப்பு உள்ளது.
நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் நாம் சென்றடைய வேண்டும். மக்களுக்கும் அரசுக்கும் இடையே மிகப் பெரிய இணைப்பை நாம் உருவாக்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# 75 நாள்களில் மங்கள்யான் செவ்வாயில்

புதுடில்லி, ஜூலை 14
செவ்வாயை ஆய்வு செய்வதற்காக இஸ்ரோவால் கடந்த நவம்பர் மாதம் 5ஆம் திகதி விண்ணில் ஏவப்பட்ட, மங்கள்யான், தனது பயணத்தில் 80 சதவீதத்தை முடித்துள்ளது. இன்னும் 75 நாள்களில் (செப்ரெம்பர்- 24) அது செவ்வாயை அடையும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது. (ற)



மும்பையில் தொடர்ந்து மூன்றாவது நாளாக கனமழை பெய்வதால் வீதிகள் எங்கும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்றது. அதனால் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை எதிர்வரும் 48 மணி நேரத்தில் மும்பை மற்றும் கொங்கன் பகுதிகளில் கனமழை தொடர வாய்ப்புள்ளதாக மும்பை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. (ற)

# ஊவா மாகாண சபைத் தேர்தல்; சமருக்கு தயாராகின்றன கட்சிகள்

கொழும்பு,ஜூலை 14
ஊவா மாகாண சபை வெள்ளிக்கிழமை நள்ளிரவுடன் கலைக்கப்பட்டதையடுத்து தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு வியூகம் அமைக்கும் பணியில் பிரதான கட்சிகள் யாவும் தீவிரமாகக் களமிறங்கத் தயாராகி வருகின்றன. இந்த நிலையில், வேட்பு மனுத் தாக்கல் குறித்த திகதி அறிவிப்பை தேர்தல் ஆணையாளர் எதிர்வரும் 18 ஆம் திகதிக்குள் அறிவிப்பார் என்றும், செப்ரெம்பர் முற்பகுதியில் ஊவா மாகாண சபைக்கு தேர்தல் நடைபெறும் எனவும் அறியமுடிகின்றது.

அதேவேளை, தேர்தல் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக பிரதான கட்சிகள் யாவும் இந்தவாரம் முக்கிய சந்திப்புகளை கொழும்பில் ஏற்பாடு செய்துள்ளன.

அதன் பின்னர் மாவட்ட ரீதியிலும் தேர்தல் ஆயத்தக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

ஊவா மாகாண சபைக்குரிய ஆசனப்பங்கீட்டு முறையில் மாற்றம் வருமா என்பது குறித்து இன்னும் சில தினங்களில் தேர்தல் ஆணையாளர் விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளார் செயலாளர்களுடன் நடைபெற்ற சந்திப் பின்போது அவர் இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

### மூன்று ஆசனங்கள் குறைப்பு

சனத்தொகையின் அடிப்படையில் பதுளை மாவட்டத்தில் 3 ஆசனங்கள் குறைக்கப்பட்டு அவற்றை மொனராகலை மாவட்டத்துக்கு வழங்குவது சம்பந்தமாக தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் அடுத்து நடைபெறவுள்ள தேசிய மட்டத்திலான தேர்தலொன்றின்போது அதில் ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் தாக்கம் செலுத்துமென்பதால், இந்தத் தேர்தலில் நமது பலத்தை வெளிக்காட்டவேண்டிய கட்டாய சூழ்நிலை அரசியல் கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால், ஊவாவில் இந்த முறை கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக, தமிழ் வாக்குகளைக் குறிவைத்து பிரதான கட்சிகளிலிருந்து தமிழ் வேட்பாளர்கள் தேர்தலில் களமிறங்கவுள்ளதால் அந்த வேட்பாளர்களுக்கு இடையே பலமுனைப் போட்டி நிலவவுள்ளது.

### 12 தேர்தல் தொகுதிகள்

அந்தவகையில் ஊவா மாகாணத்தில், பதுளை, மொனராகலை ஆகிய இரு மாவட்டங்களிலும் 12 தேர்தல் தொகுதிகள் இருக்கின்றன. இதில் பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை, வியலுவ, பசறை, பதுளை, ஹாலி-எல, ஊவா-பரணகம, வெலிமட, பண்டாரவளை, அப்புத்தளை ஆகிய தேர்தல் தொகுதிகளும், மொனராகலை மாவட்டத்தில் பிபில, மொனராகலை, வெல்லவாய ஆகிய தொகுதிகளும் இருக்கின்றன.

இவற்றில் பசறை, ஆலி-எல, அப்புத்தளை, பதுளை, பண்டாரவளை ஆகிய தொகுதிகளில் கணி சமானளவு தமிழ் வாக்காளர்கள் வாழ்கின்றனர். பதுளை மாவட்டத்திலுள்ள ஏனைய தொகுதிகளிலும் தமிழ் வாக்காளர்கள் உள்ளனர்.

ஊவா மாகாண சபைக்கு கடந்த முறை தெரிவான 3 தமிழ் வேட்பாளர்களும் பதுளை மாவட்டத்திலிருந்தே தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

### 2009 தேர்தல் ஒரு பார்வை

| கட்சிகள் | பெற்றவாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 418,906 | 72.39 | 25 |
| ஐ.தே.க. | 129,144 | 22.32 | 7 |
| ஜே.வி.பி. | 14,639 | 2.53 | 1 |
| ம.ம.மு. | 9,227 | 1.59 | 1 |
| மு.கா. | 4.150 | 0.72 | - |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 875,456 | | |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 613,133 | | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 34,424 | | |
| செல்லுபடியான வாக்குகள் | 578,709 | | |

## 30 ஆயிரம் சுற்றி வளைப்புகள்

கொழும்பு,ஜூலை 14
இந்த வருடத்தில் - கடந்த 6 மாதங்களில் மட்டும் 30 ஆயிரம் சுற்றிவளைப்புக்கள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அதன் மூலம் 75 மில்லியன் ரூபா வரையில் தண்டப் பணம் பெறப்பட்டது என்றும். நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றில் பெரும்பாலானவை காலாவதியான பொருள்கள் தொடர்பானவை ஆகும் என்றும் மேலும், அதிகமான சுற்றிவளைப்புக்கள் கொழும் பைச் சூழவுள்ள பகுதி களிலேயே மேற்கொள்ளப்பட்டன என்றும் நுகர்வோர் அதிகார சபை கூறியுள்ளது. (ஓ)

## இரு துப்பாக்கிகள் வைத்திருந்த நபர் புத்தளத்தில் கைது



கொழும்பு,ஜூலை 14
உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் இரண்டை வைத்திருந்த ஒருவர் புத்தளம் - கச்சிமடு பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே குறித்த நபர் கைதாகியுள்ளார்.

மிருகங்களை வேட்டையாடவே இந்தத் துப்பாக்கிகளைத் தாம் வைத்திருந்ததாகச் சந்தேக நபர் விசாரணையில் தெரிவித்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவரைப் புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஓ)



இரத்மலானை விமானப்படைத் தளத்தில் நடைபெற்று வரும் ரணவிரு ரியல் ஸ்டார் பாகம் IV. நிகழ்வின் இறுதிச் சுற்றில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் சேவா வனிதா பிரிவின் தலைவி அயோமா ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டனர். ரணவிரு ரியல் ஸ்டார்' நிகழ்ச்சியானது. உலகிலேயே முதற்தடவையாக இராணுவத்தினரின் கலைத் திறமைகளை வெளிக்கொண்டுவரும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சியாகும்.

## தெற்கு கடும் போக்காளர்களை திருப்திப்படுத்தவே ஆளுநர் நியமனம்

### நீதி அமைச்சர் ஹக்கீம் கருத்து

கொழும்பு,ஜூலை 14
தெற்கின் கடும் போக்காளர்களைத் திருப்திப்படுத்தவே வடமாகாண ஆளுநரான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு கூறியுள்ளார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

வடக்கு கிழக்கில் போர் முடிவுக்கு வந்துள்ள போதும் இராணுவப் பிடியைத் தக்க வைத்துக் கொள்ளவே அந்த மாகாணங்களுக்கு இராணுவ அதிகாரிகளை நியமிக்கும் போக்கு தொடர்கிறது என்றும் ஹக்கீம் கூறினார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

வடக்கில் மட்டுமன்றி கிழக்கிலும் படை அதிகாரிகளே ஆளுநர்களாக உள்ளனர். இந்த பாரம்பரியம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். ஏற்கனவே அரசு பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. அதனைக் காப்பாற்ற நல்லெண்ண சமிக்ஞையாக இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தியிருக்கலாம். எனினும் அது தவறவிடப்பட்டுள்ளது.

இதனிடையே இராணுவ அதிகாரிகளைத் தூதுவர்களாகவும் ஆளுநராகவும் நியமிக்கும் அரசின் போக்குவரவேற்கத்தக்கதல்ல- என்றார். (ஓ)

## கார்ட்போட் பெட்டியில் 1 ½ மாத குழந்தை



*கோப்புப்படம்*

கொழும்பு,ஜூலை 14
கட்டுநாயக்க வல்பொல வீதியில் கார்ட்போட் பெட்டியில் இடப்பட்ட நிலையில் சிசு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

சுமார் ஒன்றரை மாதச் சிசுவே மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

மீட்கப்பட்ட சிசு நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சந்தேகநபர் யாரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஓ)

## அமெ. தூதரகம் நிராகரிப்பு

### அமைச்சர்களின் குற்றச்சாட்டுக்களை

கொழும்பு,ஜூலை 14
இலங்கையின் பல அமைச்சர்கள் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களை அமெரிக்கத் தூதரகம் அடியோடு நிராகரித்து விட்டது. இலங்கையில் இளைஞர்கள் மத்தியில் சமூக ஊடகப் பயிற்சிகளை அமெரிக்கத் தூதரகம் வழங்கி வருகின்றமை தொடர்பில் அமைச்சர்கள், அமெரிக் கத் தூதரகம் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றனர். இது அரசியல் நோக்கம் கருதிய செயற்பாடு என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு பதிலளித்துள்ள அமெரிக்க தூதரகப் பேச்சாளார், தமது தூதரகம் மேற்கொண்டு வரும் பயிற்சிகள் அரசியல் நோக்கற்றவை என்று தெரிவித்துள்ளார்.

தமது தூதரகத்தை பொறுத்தவரை பேஸ்புக், யூரியூப், இன்ஸ்டாகிராம் ஆகியவை தொடர்பிலான தொழில்நுட்ப விடயங்களையே போதிப்பதாகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். இது நீண்டகால சுதந்திர ஊடகத்துறைக்கான பயிற்சிகளே என்றும் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசுக்கு எதிராகச் செயற்படுவதற்காக சுமார் 5 ஆயிரம் இளைஞர்களைஅமெரிக்கத்தூதரகம் இணைத்துள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## இந்தியத் தூதரகத்துக்கு கொழும்பில் புதிய கட்டடம்

கொழும்பு,ஜூலை 14
இந்தியத் தூதரகத்துக்கு கொழும்பில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்படவுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளதாக, இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதேசமயம் மலேசியாவின் கோலாலம்பூரிலும், இந்தியத் தூதரகத்துக்காக புதிய கட்டடத்தை இந்திய வெளிவிவகார அமைச்சு அமைக்கவுள்ளது.

கொழும்பில் எந்த இடத்தில் புதிய இந்தியத் தூதரகத்துக்கான புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது என்று விபரம் ஏதும் வெளியிடப்படவில்லை. (ஓ)

## எயிட்ஸ் தாக்கத்துக்குள்ளான 72 குழந்தைகள் பிரசவிப்பு

கொழும்பு,ஜூலை 14
கடந்த பதின்மூன்று வருட காலப் பகுதியில் எயிட்ஸ் நோய்த் தொற்றுக்குள்ளான தாய்மார்கள் மூலமாக அந்த நோய்த் தாக்கத்துக்குள்ளான 72 குழந்தைகள் பிறந்துள்ளதாக தேசிய பாலியல் நோய்கள் தடுப்பு மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சிசிர லியனகே தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்;




கடந்த 2001 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் பிறந்த அவ்வாறான குழந்தைகளில் நூற்றுக்கு நாற்பது வீதம் வரையில் உயிரிழந்துள்ளன.

அதேபோல சென்ற வருடம் எயிட்ஸ் நோய்த் தொற்றுக்குள்ளான தாய்மார்களிடமிருந்து பன்னிரெண்டு குழந்தைகள் பிறந்துள்ளன. மகப்பேற்றின் போது தாய்மாரின் இரத்த மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகள் செய்யப்பட வேண்டும்.

எனவே, மேல் மற்றும் தென் மாகாணங்களில் இதுவரை குழந்தைகளைப் பிரசவிக்கும் தாய்மார்களிடமிருந்து இரத்த மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

2015 ஆம் ஆண்டளவில் நாடளாவிய ரீதியில் பிரசவத்தின் போது தாய்மார்களின் இரத்த மாதிரிகளைப் பெற்று பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குறிப்பாக அந்தச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் போது இந்தப் பரிசோதனைகள் மீதான தாய்மாரின் விருப்பத்தை அறிதல் இன்றியமையாததாகும். ஆகவே தாய் மார்களின் விருப்பத்தை அறிந்த பின்னரே இரத்த மாதிரிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றார். (ஓ)




சாதாரண மணலை மூலப்பொருளாகக் கொண்டே இதன் செயற்பாடு அமைந்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## மணலைக் கொண்டு பற்றரியின் செயற்றிறன் அதிகரிப்பு

தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் பற்றரிகளிலும் பார்க்க மூன்று மடங்கு செயற்றிறன் மிக்க பற்றரியை கலி போர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் குழு கண்டறிந்துள்ளது. சாதாரண மணலை மூலப்பொருளாகக் கொண்டே இதன் செயற்பாடு அமைந்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இலித்தியம் அயன்களைக் கொண்ட இந்த பற்றரியில் சிலிக்கன் நனோ நுட்ப முறையில் பயன்படுத்தி காபனுக்கு மாற்றீடாகப் பயன்படுத்தும் ஆராய்ச்சியும் நடைபெற்று வருகிறது.

# தற்கொலைப்படையாகவும் போரிடுமாம் டொல்பின்கள்



டொல்பின் ஒரு விநோதமான கடல் உயிரினமாகும். மனிதனிடத்தில் மிக நெருக்கமாகப் பழகும் தன்மை கொண்ட இந்த டொல்பின்களை, உக்ரைன் தங்கள் நாட்டில் கடற்படையில் தற்கொலைப்படைகளாகப் பயன்படுத்தியுள்ளது.

உக்ரைன் கடற்படையால் தயார்ப்படுத்தப்பட்ட இந்த டொல்பின்களை கிரிமியாவை கையகப்படுத்தியபோது, ரஷ்யா தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது. கருங்கடல் பகுதியில் சேவாஸ்டோபோல் நகரத்தைக் கடந்து செல்ல முயன்றபோது ரஷ்ய படைகள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இந்த டொல்பின்களைக் கொண்டு வந்துள்ளது.

சோவியத் காலகட்டத்தில், பனிப்போருக்காகத் தயார் செய்யப்பட்ட இந்த டொல்பின்களுக்கு, சோவியத் மற்றும் அமெரிக்கக் கப்பல்களை அடையாளம் கண்டு கொண்டு அதை தாக்கும் வகையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்புறம் மற்றும் தலைப்பகுதியில் கத்தி போன்ற கூர்மையான ஆயுதங்களை ஏந்திச் சென்று நீச்சலில் வரும் எதிரிகளை இனம் கண்டு, தாக்குவதற்கு, வெடிகுண்டுகளைச் சுமந்துகொண்டு சென்று எதிரி நாட்டு கப்பல்களைத் தகர்த்து தற்கொலைப் படையாக செயற்படவும் டொல்பின்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் தனி நாடாக ஆனபோது இந்த டொல்பின்களை உக்ரைன் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு சென்றது. ஆனால் தற்போது இந்த டொல்பின்களை ரஷ்யா தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு சென்றுள்ளது.

இந்த டொல்பின்களை சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் உக்ரைன் பயன்படுத்தவில்லை. எனினும் இந்த பயிற்சி பெற்ற டொல்பின்களை எப்படியும் திரும்பப் பெறவேண்டும் உக்ரைன் விரும்புகிறது.

உக்ரைனிடம் இருந்து கைப்பற்றிய இராணுவப் பொருள்களை ரஷ்யா திரும்ப அந்நாட்டுக்கு வழங்கி விட்டது. ஆனால் இந்த டொல்பின்களை வழங்கவில்லை. எனவே டொல்பின்களுக்கு விதிவிலக்கில்லாமல் அதையும் திரும்ப வழங்க வேண்டும் என்று உக்ரைன் கோருகிறது. கிரிமியா அருகில் தற்போது டொல்பின்கள் வைக்கப்பட்டுள்ளன. கோடைகாலத்தில் வேறு இடத்தில் தங்க வைக்க முறையான இராணுவ இல்லமும் தயார் நிலையில் உள்ளது.

இந்த டொல்பின்களை, ரஷ்ய பெரிய திட்டங்களுக்குப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

# விரைவாகத் துடிக்கும் பெண்களின் இதயம்



இதயத்துடிப்பின் வேகம் உடம்பின் அளவைப் பொறுத்து அமையும். பெண்களின் இதயம் ஆண்களின் இதயத்தை விட வேகமாகத் துடிக்கிறது. சுண்டெலி, மூஞ்சூறு போன்றவை மிகச் சிறிய பிராணிகள். அவற்றின் இதயம் நிமிடத்துக்கு ஆயிரம் தடவை துடிக்கிறது. திமிங்கிலம் மிகப்பெரிய விலங்கு; அதன் இதயம் நிமிடத்துக்கு 5 முறைதான் துடிக்கிறது. வயது வந்த ஒரு ஆணின் இதயத்தின் எடை 284 கிராமில் இருந்து 430 கிராம் வரை இருக்கும். வயதுக்கு வந்த பெண்ணின் இதயம் 227 கிராமில் இருந்து 340 கிராம்வரை இருக்கும். குளிர் காலத்தை விட கோடை காலத்தில் இதயத்துடிப்பு அதிகம் காணப்படும்.

இரத்தத்தில் உள்ள ஒட்சிசனில் 70 சதவீதத்தைத்தான் உபயோகத்துக்கு இதயம் எடுத்துக்கொள்கிறது. இதயம் துடிப்பதற்கு இவ்வளவு ஒட்சிசன் தேவைப்படுகிறது. பொதுவாகவே ஆண்களின் இதயத்தை விட பெண்களின் இதயம் வேகமாகத் துடிக்கிறது. சாதாரண மனிதனின் இதயம் நிமிடத்துக்கு 72 முறை துடிக்கிறது. ஒரு மணித்தியாலத்துக்கு 1,03,680 தடவை துடிக்கிறது. இதுவே ஒரு வருடம் என்று எடுத்துக் கொண்டால் 37 கோடியே 83 லட்சத்து 120 தடவை துடிக்கும்.

இதயத் துடிப்பு சாதாரணமாக காலையில் குறைவாக இருக்கும். பிற்பகலில் அதிகரிக்கும்.

100 மில்லி இரத்தத்தில் 20 முதல் 45 மில்லி கிராம் புரதமும், 50 முதல் 80 கிராம் வரை குளுகோஸும், 700 - 750 மில்லி கிராம் வரை குளோரைட்டுகளும் உள்ளன. ஒரு ஆணின் இரத்தம் ஒரு கன மில்லி மீற்றரில் 4.5 - 6.5 மில்லியன் சிவப்பு அணுக்கள் கொண்டதாக உள்ளது. அதே அளவு கொண்ட பெண்ணின் இரத்தத்தில் 4.0-5.5 மில்லியன் சிவப்பு அணுக்களே இருக்கின்றன.

ஹீமோகுளோபினை எடுத்துக் கொண்டால் ஆணின் இரத்தத்தில் 13.5 - 18.0 வரை உள்ளது. பெண்ணின் இரத்தத்தில் 11.5 முதல் 16.5 வரையே உள்ளது. பொதுவாக மனித இரத்தத்தில் 100 மில்லியன் லீற்றர் அளவில் 125-300 மில்லி கிராம் கொழுப்பு உள்ளது. 17-40 மில்லி கிராம் யூரியா உள்ளது. 1-4.5 மில்லி கிராம் யூரிக் அமிலம் உள்ளது.

# உலகின் மிகப்பெரிய பறவையின் புதைபடிமம்

## அமெ.விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

இந்த பறவையின் மிகப்பெரிய உருவமும் எடையும் அது நிலத்திலி ருந்து வானத்துக்கு மேலெழும்பும் போதும் வானில் இருந்து நிலத்துக்கு கீழிறங்கும்போதும் அதற்கு கடும் சிரமத்தைக் கொடுத்திருக்கக்கூடும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.



இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பறவை இனங்களிலேயே மிகப்பெரிய பறவையின் புதைபடிமத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட புதை படிமத்தை விரிவாக ஆராய்ந்ததில், மிகப்பெரியதொரு பறவையின் பாதுகாக்கப்பட்ட எச்சங்களை அதில் இவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தப் பறவைகள் தமது இறக்கைகளை விரித்தால் அதன் அகலம் 6 மீற்றர் முதல் ஏழரை மீற்றர்வரை இருந்திருக்கும் என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டிருக்கிறார்கள். அதாவது 20-24 அடி அகல இறக்கைகளைக் கொண்டதாகஇந்தப் பறவை இருந்திருக்கும்என்பது விஞ் ஞானிகளின் கணக்கு.

தற்போது உயிர்வாழும் பறவைகளிலேயே அல் பட்ராஸ் என்னும் கடற் பறவை தான் மிகப்பெரிய பறவையாக அறியப்படுகிறது. இவற்றின் இறக்கைகளின் அகலம் அதிகபட்சம் 3 மீற்றர் என்று கணக்கிடப்படுகிறது. அப்படிப் பார்க்கும் போது இந்தப் புதைபடிம பறவை அல் பட்ராஸைவிட இரண்டு மடங்கு பெரிய பறவையாக இருந்திருக்கும் என்பது இந்த விஞ்ஞானிகளின் கணக்கு. இரண்டரை கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கணக்கிடப்படும் இந்தப் பறவையின் உருவத்தை விஞ்ஞானிகள் கணினி மூலம் மாதிரி வடிவை உருவாக்கிப் பார்த்தபோது அந்த பறவை வானில் பறக்கும் போது மிகச்சிறப்பாகவும், கம்பீரமாகவும், லாவகமாகவும் பறந்திருக்கக் கூடும் என்று கணித்திருக்கிறார்கள். ஆனாலும் இந்தப் பறவையின் மிகப்பெரிய உருவமும் எடையும் அது நிலத்திலிருந்து வானத்துக்கு மேலெழும்பும்போதும் வானில் இருந்து நிலத்துக்கு கீழிறங்கும்போதும் அதற்கு கடும் சிரமத்தைக் கொடுத்திருக்கக்கூடும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள். பெலகோர்னிஸ் சந்தெர்ஸி (Pelagornis sandersi) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இந்த பறவையின் புதைபடிமம் தெற்கு கரோலினா கடற் பரப்பில் கண்டெடுக்கப்பட்டது. இது கடல்நாரையின் முன்னோர்களில் ஒன்றாக இருந்திருக்கக்கூடும் என்பது விஞ்ஞானிகளின் நம்பிக்கை.



# உலகின் மிகப்பெரிய விற்பனைக் கூடம்

ஏற்கனவே உலகின் மிக உயரமான கட்டடத்தைக் கொண்டுள்ள டுபாயில் தற்போது உலகின் மிகப்பெரிய விற்பனைக் கூடம் அமையவுள்ளது

இந்தத் திட்டம் சில தினங்களுக்கு முன்னர் ஐக்கிய அரபு இராச்சியத்தின் பிரதமர் Mohammed bin Rashid Al Maktoum ஆல் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தக் கட்டடத் தொகுதி சுமார் 743, 224 சதுர மீற்றர் பரப்பளவை உடையதாக அமையவுள்ளதுடன் 100 விடுதிகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு என்பவற்றுடன் 20,000 வரையான விடுதிகளில் அறைகளும் அமைக்கப்படவுள்ளன.

# பெண் விடுதலை சாத்தியமாகட்டும்



பூங்கொடி

பெண் விடுதலையை வென்றெடுப்பதற்கு பெண்கள் அமைப்புக்களின் செயற்பாடுகள் மட்டும் போதாது. பெண்ணடிமைத்தனம் என்பது பெண்களுக் கான குறைபாடு மட்டுமல்ல இது ஒரு சமூகக் குறைபாடேயாகும். இதனால் பாதிப்படைபவர்கள் பெண்கள் உள்ளிட்ட முழுச் சமூகமே ஆகும். எனவே பெண் விடுதலையை முன்னெடுப்பதற்கு முழுச்சமூகமும், அரசும் கூடச் செயற்பட வேண்டும். சமூகம் என்கின்றபோது தனிநபர்கள் பல துறைசார்ந்தவர்கள் நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள், கலை இலக்கிய வாதிகள் ஆசிரியர்கள் அனைவருமே அடங்குவார்கள்.

பெண் விடுதலையை வென்றெடுப்பதற்கான வாசற்கதவு திறந்திருக்கிறது. ஆனால் இங்கு யாருமே வருகிறார்கள் இல்லை. இதுதான் இன்றைய பெண்ணிய செயற்பாட்டின் நிலை என்றால் அது தவறான கூற்றாகாது. பெண் உரிமை அமைப்புக்கள் உருவான அளவுக்கு அவற்றின் செயற்பாடுகள் துரிதமாக எடுத்துச் செல்ல முடியாமைக்கு பல்வேறு காரணங்களைக் கூறமுடியும்.

பெண்ணுரிமை இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பெண்களின் வாழ்வில் சில மாற்றங்கள் ஏற்பட்டுத்தான் உள்ளன. கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்க்கைத்தரம் என்பவற்றின் உயர்வோடு புதிய தலைமுறைகளிடையே பெண்ணியம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளமை சாதகமான பலாபலன்கள் ஆகும். ஆனாலும் பெண் விடுதலை தொடர்பான நடவடிக்கைகள் திட்டமிடாமல் இடம்பெறுவதால் சில எதிர்வினைகளும் ஏற்பட்டுள்ளன. பாற்கடலைக் கடைந்தபோது அமிர்தமும் நஞ்சும் தோன்றியதைப் போன்று பெண் உரிமை இயக்கங்களின் செயற்பாடுகளினால் நன்மை, தீமை என இரண்டுமே ஏற்பட்டுள்ளன.

இன்று உலகில் மிகப் பரவலாக பெண்ணுரிமை தொடர்பான சட்டதிட்டங்கள் விவாதிக்கப்படுகின்றன. பால்நிலை சமத்துவம் பற்றிய கருத்தாடல்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றமை ஆரோக்கியமான சூழ்நிலைதான். ஏனெனில் பால்நிலை சமத்துவம் என்பதை ஏற்றுக் கொள்வது இன்னமும் இறுக்கமாகவே காணப்படுகின்றது. பெண்களின் வாழ்வியலில் உள்ள, நிதர்சனமாக அடிமைத்தனமும் சமத்துவமின்மையும் ஆண்களால் மட்டுமன்றி பெண்களாலும்கூட புரிந்துகொள்ளப்படாமை வேதனைக்குரியது. பெண்களின் வாழ்வைப் பின்தள்ளுகின்ற கசப்பான உண்மைகளும் அவற்றின் உள்ளிருக்கும் அவலமான துன்பங்களும் மட்டுமன்றி பெண்கள் மதிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணரவிடாதபடி மரபு, பண்பாடு, பழைமை, சமயம், சடங்கு, சம்பிரதாயங்கள் என்பன திரையிட்டு மூடிமறைக்கின்றன. பெண்களின் நிலைமையை மாற்றியமைக்க விரும்பும் புதிய பார்வைகளையும் மதிப்பீடுகளையும் ஏற்றுக்கொள்ளத் தயங்கி நிற்கும் போக்கும் பரவலாக அவதானிக்கப்படுகிறது. பாமர மக்கள் மத்தியில் மட்டுமன்றி படித்த மேலோர் மட்டத்திலும் பெண்விடுதலை பற்றி சுமுகமாக ஆராயமுடியாதுள்ளது. பெண்ணின் சிந்தனைகள் பற்றிய கருத்தியல் ரீதியான புரிதலுக்கும் தெளிவடைதலுக்கும் தயார் நிலையில் இல்லாத மந்த தன்மையும் ஆர்வமின்மையும் மாத்திரமன்றி இன்னும் சிலர் மத்தியில் வெறுப்பும் பரிசாகமும் கூட அவதானிக்கப்படுகிறது. இத்தனைக்கும் மத்தியில் எதிர் நீச்சல் போட்டுத்தான் பெண்களின் திறமை, ஆற்றல், வெளிப்பாடு, ஆளுமை விருத்தி மற்றும் சுதந்திரம் என்பன வெளிப்படுத்தப்படுகின்றன.

ஒரு குடும்பத்தில் ஆண், பெண் இருவருக்குமிடையே புரிதலும், பகிர்தலும், இருந்துவிட்டால் சுதந்திரத்தின் பாதைகள் தானாகவே திறந்து விடும். இதை ஏற்றுக்கொண்டு குடும்பத்திலும், சமூகத்திலும் இருபாலாரும் தமக்குரிய பொறுப்புக்களை உதறித் தள்ளாமல் செயற்படுதல் மிகவும் முக்கியமானதாகும். கல்வியும், பொருளாதார நிலையையும் மேம்படுத்தல் பெண்ணுக்கு மிகவும் அவசியமானவையாகும். சீதனம் என்கின்ற அசுரத்தனம் களையப்பட வேண்டும். ஆண்கள் தமது அந்தஸ்தை உயர்த்திக் காட்டவே பெரும்பாலும் அதிக சீதனம் கேட்கின்றனர். இதனை முற்றாக ஒழித்தல் வேண்டும்.

வரதட்சணைப் போராட்டத்தில் மெல்லவும் முடியாமலும் விழுங்கவும் முடியாமலும் திணறிக்கொண்டிருக்கும் பெண்களுக்கு சில பெண்களின் துணிச்சலான செயற்பாடுகள் பெண்விடுதலை என்ற நம்பிக்கைத் தீபத்தை ஏற்றி வைக்கின்றது.

சிறப்பான பெண்ணியல் ஆய்வுகளும் விவாதங்களும் வினைத்திறன் செயற்பாடுகளும் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் மற்றும் ஏனைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மத்தியிலும் கொண்டு செல்லப்படுதல் காலத்தின் தேவையும் கட்டாயமும் ஆகும். ஊடகங்களிலும் கலை இலக்கியங்களிலும் ஊடாக அணுகும் அதேவேளை நேரில் சென்று அழைப்புக்களைப் பரவலாக ஏற்படுத்தி செயலாக்கம் பெறுவது முக்கியமானதே. இந்தச் செயற்பாட்டில் ஆண்களையும் இணைத்துச் செயற்படுத்த வேண்டும்.

பெண்ணியம் பேசுபவர்கள் பெண்விடுதலை அல்லாத விடயங்களைச் செய்வதும் இதுவரை யாரும் பேசாத விடயங்களைப் பேசுவதும்தான் பெண்ணியம் என்று சொல்வது கண்டிக்கத் தக்கது. எனவே பெண்களுடைய பிரச்சினைகள் என்பது அவர்களுக்கு மாத்திரமல்ல அவை சமூகத்தின் பொதுப்பிரச்சினைகளாகும். சமூக மேம்பாட்டை நேசிக்கும் ஒவ்வொருவரும் ஈடுபாட்டுடன் பங்காற்றினால்தான் பெண்விடுதலையை எட்டமுடியும். இதற்கு அனைவரது பங்களிப்பும் அவசியமாகின்றது. இந்தப் பிரச்சினை பற்றிய எண்ணத்தை எல்லா மட்டத்திலும் ஏற்படுத்த வேண்டும். செயல் ஊக்கம் பெற உழைக்கவும் வேண்டும்.

குழந்தை வளர்ப்பில் தொடங்கி பாடசாலையிலும் சமத்துவம் பேணப்படுதல், கற்பிக்கப்படுதல் அவசியமான ஒன்றாகும். பாடத்திட்டங்களிலே ஆணாதிக்க சிந்தனைகள், இனவாத சிந்தனைகள் அகற்றப்பட வேண்டும். குடும்பத்திலும் கலாசாரம் என்பவை மாறாவிதிகள்



என்ற புரிதலை ஏற்படுத்த வேண்டும். நல்ல மாற்றங்கள் அடிப்படை அம்சங்கள் மாறா வகையில் வரவேற்கப்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக பெண்களே பெண்களுக்கு மாறாகப் பெண் விடுதலையை மறுத்துச் செயற்படுகின்றமை அவசரமாகவும், அவசியமாகவும் களையப்பட வேண்டியது முக்கியமாகும்.

---

## பெண் கல்வி

இனியவள்

ஊதுகுழலைக் கையில்
எடுக்கும் பெண்கள்
எழுதுகோலைக்
கையில் எடுக்க வேண்டும்!
ஓடு தயாரிக்கும் பெண்கள்
கையில் இனி
ஏடு மட்டுமே இருக்க வேண்டும்!
அரிவாளால் மரம்
வெட்டும் கைகளுக்கு
அறிவால் வெல்ல
வழி மொழிவோம்
பள்ளிக்கு அனுப்புவோம்
ஐந்தறிவு கொண்ட ஆடு
மாடு மழைக்கு பயந்து
பள்ளிக் கட்டடம் குடையாக்க
ஆறறிவு கொண்ட பெண்
அறியாமைக்கு பயந்து கல்வி
வேண்டி பள்ளிக் கட்டடம்
குடையாக்குவது
நிஜமாகட்டும்

வாய்ப்புக்கள் கொடுப்போம்
குடும்பப் பாங்கான
பெண் அவளோடு
குடும்பப் பாங்காய்
இருக்க கல்விச் சீரே
முதன்மைச் சீராகக்
கேட்க வேண்டும்
சிந்திக்கும் மூளை
அவளுக்கும் உண்டு
நிந்திக்க வேண்டாம் அவள்
திறமையை
சொல்வார்கள் சொல்லட்டும்
அவள் செவ்வாய் செல்ல
வேண்டும் சீக்கிரம்
பூமிக்கு வழி தேடி
சரஸ்வதி வந்த போது
தன் வீணை விட்டுச்
சென்றாள்
நான் மீண்டும்
வருவேன் வீணைக்காக
மட்டுமல்ல பெண்கல்வி
நூறு சதம் நிறைவு பெற்ற
நாளைக் கொண்டாட
என சொல்லிவிட்டுச் சென்று
விட்ட அவளுக்கு சீக்கிரம்
அழைப்பிதழ் அனுப்ப
முயல்வோம்!!



## வெற்றி நிச்சயம்

வாழ்க்கை ஓட்டப்
பந்தயம்! ஜனனம்
தொடக்கம் மரணம் இலக்கு!
மன நிறைவே வெற்றி...
ஆசை
தோல்வியின் முதற்படி
சிலரது வாழ்க்கை
100மீ. பந்தயம்
துரிதமாய் தொடங்கி
சிகரம் எட்டி
சட்டென முடியும்.,
பாரதி போல்
சிலருக்கு
தொடர் ஓட்டம்
உடல் தளர்ந்து
இலக்கடையும்
நீண்ட ஓட்டம்
தலைமுறை தாண்டி
அனுபவம் சுமந்து
அடுத்தவர் ஓடும்
அயராத ஓட்டம்..
இலக்கடைவது
நிச்சயம்...
வெற்றிக்கனி
சிலருக்குத்தான்....
தடைகள் இடற
தள்ளாடும் ஓட்டம்..
வெற்றி வேண்டுமா?
மீண்டும் எழுக!
ஆசை
கோபம்
பொறாமை
தடைகள் கடந்து
தாண்டிச் செல்க!
இலக்கடை கையில்
வெற்றி நிச்சயம்...





வீதியைக் கடந்து செல்வது தொடர்பான செயல் விளக்கம்

# வயற் காணிகளை விடுவிக்குமாறு கேப்பாபிலவு விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 14

முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபிலவு வாவெட்டிக் குளத்தின் கீழ் உள்ள இதுவரை விடுவிக்கப்படாத சுமார் 160 ஏக்கர் வயற்காணிகளை விடுவித்து பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான அனுமதியைப் பெற்றுத் தருமாறு பல்வேறு தரப்பினருக்கும் இந்தப் பகுதி விவசாயிகள் மனுக்கள் மூலமாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கேப்பாபிலவு பகுதியில் பொது மக்களுக்குச் சொந்தமான சுமார் ஆயிரத்து 500 ஏக்கர் காணியை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ள அதே

**எஞ்சியுள்ள ஐம்பது விவசாயிகளுக்குச் சொந்தமான இந்தக் குளத்தின் கீழ் உள்ள 160 ஏக்கர் காணி இதுவரை விடுவிக்கப்படவில்லை.**

வேளை இந்தப் பகுதி மக்கள் வேறு இடங்களில் உள்ள மாற்றுக் காணிகளில் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் கேப்பாபிலவு வாவெட்டிக்குளத்தின் கீழான இரு நீர்ப்பாசன வாய்க்கால்களிலும் உள்ள வயற்காணிகளில் குறிப்பிட்ட ஒரு பகுதி இதுவரை விடுவிக்கப்படவில்லை எனவும் இதனால் தமது விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இரு மாதங்களுக்கு முன்னர் குறித்த குளத்தின் கீழ் உள்ள 24 விவசாயிகளுக்குச் சொந்தமான நெற்செய்கைக் காணிகள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவினால் கையளிக்கப்பட்டன.

எஞ்சியுள்ள ஐம்பது விவசாயிகளுக்குச் சொந்தமான இந்தக் குளத்தின் கீழ் உள்ள 160 ஏக்கர் காணி இது வரை விடுவிக்கப்படவில்லை. குறித்த வயற்காணிகளை பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் தமக்குப் பெற்றுத்தருமாறு மாவட்ட அரச அதிபர், பிரதேச இராணுவத் தளபதி, பாதுகாப்புச் செயலர் ஆகியோருக்கு பாதிக்கப்பட்ட விவசாயிகள் மனுக்களைக் கையளித்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-55)

# வீதிப் போக்குவரத்துகள் தொடர்பான கருத்தரங்கு

மன்னார், ஜூலை 14

வீதிப் போக்குவரத்து ஒழுங்கு முறை குறித்து வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பூஜித ஜெயசுந்தரவின் ஏற்பாட்டில் வவுனியாவில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

வவுனியாவில் அண்மைக் காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதையடுத்து வவுனியா பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் வட மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பூஜித ஜெய சுந்தர வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், சைவப்பிரகாச மகா வித்தியாலயம் இலங்கைத் திருச்சபை, தமிழ்க் கலவன் பாடசாலை, சர்வதேச பாடசாலை, இறம்பைக்குளம் மகளிர் பாடசாலை மாண வர்கள் உட்பட சுமார் 700 க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்து ஒழுங்கு முறை குறித்த விளக்கவுரையாற்றினார்.

இதன்போது வீதியில் மஞ்சள் கோட்டு பகுதியால் கடக்கும் முறை, சைக்கிள், ஓட்டோ ஆகியவற்றில் பயணிக்கும் போது கடைப்பிடிக்கும் வழிமுறைகள் என்பன தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. முற்பகல் 11 மணி முதல் 12.30 மணி வரை இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது. (க-402-421)



கிளிநொச்சியிலுள்ள கோணாவில் பாடசாலைக்கு வருகை தந்த வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா பாடசாலையின் தற்போதைய நிலை தொடர்பாகக் கேட்டறிகின்றார். (க-18)

# குடிதண்ணீர் நெருக்கடி தொடர்பாக மனு

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சி அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் நெருக்கடி தொடர்பாக மக்கள் கிளிநொச்சி அரச அதிபரிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளார்.

தற்போது அக்கராயன் பகுதியில் நிலவும் கடுமையான வறட்சி காரணமாக குடிதண்ணீருக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அக்கராயன் மகா வித்தியாலயச் சூழல் கெங்காதரன் குடியிருப்பு, இம்மாஸ்நகர், 50 வீட்டுத் திட்டம் உட்பட இந்தப் பகுதி முழுவதும் குடிதண்ணீருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்தக் குடிதண்ணீர் நெருக்கடியைத் தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

# மோசமான வீதியால் பலருக்கும் பாதிப்பு



மோசமான நிலையில் உள்ள வீதி

வவுனியா, ஜூலை 14

வவுனியா காத்தார் சின்னக் குளம் வீதி மோசமான நிலையில் காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுமார் 1500 குடும்பங்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றன. காத்தார் சின்னக்குளம் அ.த.க. பாடசாலை. அண்ணாநகர் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர். குண்டும் குழியுமான இந்த வீதியில் மழைகாலங்களில் மாணவர்கள் வீதி விபத்துக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியூடாகச் செல் லும் வாகனங்களும் பழுதடைவதைக் காண முடிகின்றது. இந்த வீதியை இனியும் தாமதிக்காது புனரமைக்குமாறு காத்தார் சின்னக்குளம், அண்ணாநகர் பாடசாலை மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், கிராம மக்கள் உட்படப் பலரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

# ஒலிபெருக்கிச் சாதனங்கள் அன்பளிப்பு

வவுனியா, ஜூலை 14

வவுனியா கல்நாட்டியகுளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் ஏற்பாட்டில் ஒலிபெருக்கிச் சாதனம் வழங்கப்பட்டது.

கடந்த 10 ஆம் திகதி பாடசாலை அதிபர் என்.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின்போது அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் ப.சத்தியசீலன் ஒலிபெருக்கிச் சாதனங்களைப் பாடசாலை அதிபரிடம் கையளித்தார். (க-421)



கோப்புப்படம்

# நிலக்கடலை பயிர்களுக்கு பாதிப்பு

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சி வன்னேரிக்குளம், திக்காய் குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்டுள்ள நிலக்கடலைப் பயிர்கள் குளத்தில் நீர் முற்றாக வற்றியதன் காரணமாக பாதிப்பை எதிர் கொள்ளத் தொடங்கியுள்ளன.

சுமார் ஐந்து ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் குளத்திலிருந்து நீர் கிடைக்காததால் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (க-18)



# மன்னார் பாலத்தில் நடமாடும் கழுதைகளால் விபத்துகள்

மன்னார், ஜூலை 14

மன்னார் பிரதான பாலத்தில் கழுதைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் விபத்துக்கள் ஏற்பட்டு வருவதாகவும், அங்கு கழுதைகளின் நடமாட்டத்தைக் குறைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் மன்னார் மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் பிரதான பாலத்தின் நுழைவாயில் பகுதியில் தினமும் பெருந்தொகையான கழுதைகள் நடமாடித்திரிகின்றமை. கழுதைகள் கூட்டம், கூட்டமாக பிரதான பாலத்தைக் கடந்து செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.



கழுதைகள்

இதனால் பிரதான பாலத்தி னூடாக மன்னாருக்குள் வாக னங்களில் வருபவர்களும், மன்னாரில் இருந்து வெளியில் செல்லுபவர்களும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பிரதான பாலத்தின் நுழை வாயிலில் பொலிஸாரின் சோதனைச்சாவடி ஒன்று அமைந்துள்ள போதும் பொலிஸார் அவற்றைக் கண்டும் காணாத வாறும் நடந்து கொள்வதாகவும் மக்கள் விசனம் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை மன்னார் 'டயஸ் போராலங்கா" என்ற அமைப்பு பல லட்சம் ரூபா செலவில் கழுதையைப் பயன்படுத்திப் பயனடைய பல்வேறு வேலைத் திட்டங் களை ஆரம்பித்திருந்த போதும் எதுவுமே நடைமுறைக்கு வந்ததாகத் தெரியவில்லை.

உரிய அதிகாரிகள் கழுதைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமென இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-56)

## பழநுகர்வு ஊக்குவிப்பு வாரம்

தென்மராட்சி, ஜுலை 14
விவசாயத் திணைக்களத்தினர் இலங்கை பழநுகர்வு ஊக்குவிப்பு வாரத்தை இன்று திங்கட்கிழமை தொடக்கம் அனுஷ்டிக்கவுள்ளனர்.
இதற்கான விளம்பரப் பதாகைகளை அந்தந்த இடங்களில் காட்சிப்படுத்தியுள்ளனர்.
ஹெறண பழப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினர் உள்ளூர் பழ நுகர்வுகளை மேம்படுத்தி பழ உற்பத்திகளை தொழில்மயமாக்கும் நோக்குடன் பழ நுகர்வு ஊக்குவிப்பு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவபாலசுந்தரம் அறிவித்துள்ளார். (வ-9)



டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி சாவகச்சேரி நீதிமன்றப் பணியாளர்கள் கடந்த வியாழனன்று நீதிமன்ற வளாகத்தில் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். இதேவேளை, பிரதி வியாழக்கிழமைகளில் பிற்பகலில் நீதிமன்ற வளாகத்தில் நீதிமன்றப் பணியாளர்களால் சிரமதானப் பணிகள் இடம்பெறும் என்று பதிவாளர்கள் தெரிவித்தனர். (வ-9)

## ஊர்காவற்றுறையிலுள்ள 52 குளங்களில் நீரில்லை



யாழ்ப்பாணம், ஜுலை 14
ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கமநல சேவைகள் நிலையம், பிரதேச சபை மற்றும் தனியாருக்குச் சொந்தமான 52 குளங்களும் சிறிதளவு நீர்கூட இன்றி வறண்டுகிடக்கின்றன.
கிணறுகளும் நீர் வற்றிக் காணப்படுகின்றன. இதனால் அங்குள்ள மக்கள் தமக்குத் தேவையான குடிதண்ணீரை மட்டுமன்றி இதர தேவைகளுக்கும் தண்ணீர் இன்றி கஷ்டப்படுவதாகத் தெரிவித்தனர்.
குடிப்பதற்கு மட்டும் பவுஸர்கள் மூலம் நீர் வழங்கப்படுகிறது. பிரதேச செயலகத்தால் தொடர்ந்தும் பவுஸர் மூலம் நீர்வழங்க யாழ்.செயலகம் நிதி வழங்கவுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் தெரிவித்தார். (வ-7)

## போரினால் சிதைவுண்ட வட பகுதிக்கும் வருமாறு பாப்பரசருக்கு அழைப்பு

### பொது நிலையினர் கழகம் விடுத்தது

கொழும்புத்துறை, ஜுலை 14
இலங்கைக்கு அடுத்த வருடம் ஜனவரியில் வருகைதரவுள்ள பாப்பரசர் பிரான்சிஸை போரினால் சிதைவுண்ட வடபகுதிக்கும் வருமாறு யாழ்.மறை மாவட்ட பொது நிலையினர் கழகம்வேண்டு கோள் விடுத்துள்ளது.
குறித்த கழகம் பாப்பரசருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் வழங்கவும் நிரந்தர.அரசியல் தீர்வை நோக்கி அரசை உந்தவும் வடபகுதி நிலவரங்களை நேரில் அவதானிக்கவும் வட பகுதிக்கு வருகைதர வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றோம்.
சர்வதேச சமூகத்தின் தொடர் அழுத்தங்களின் மத்தியிலும் இலங்கை அரசானது நீதி வழங்குவதிலும், நிரந்தர தீர்வைக் காண்பதிலும் ஆர்வமின்றி செயற்படுகிறது.
இந்த நிலையில் இலங்கை வரும் திருத்தந்தையின் ஆசீரும் அவர் வெளிப்படுத்தும் செய்தியும் எமக்கு நல்லதொரு அமைதித் தீர்வைப் பெற்றுத்தர வழிகோலும் என நம்புகிறோம் - என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-135)

## வர்த்தகர்கள் 6 பேருக்கு தலா 1,000 ரூ. அபராதம்

தென்மராட்சி, ஜுலை 14
வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஊழியர் சேமலாப செலுத்தாத தென்மராட்சி பிரதேச வர்த்தகர்கள் ஆறு பேருக்கு அரச செலவாக தலா ஆயிரம் ரூபா செலுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டது.
யாழ். மாவட்ட தொழில்திணைக்களத்தால் தாக்கல் செய்யப் பட்ட வழக்குகள் நேற்றுமுன் தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை விசாரித்த நீதிவான் பணியாளர்களின் நலன்களில் வர்த்தகர்கள் அக்கறை கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கை செய்யப்பட்டனர்.
செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்துவது தொடர்பாக அடுத்த தவணையில் விசாரிக்கப்படுமெனக் கூறி வழக்குகளை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை ஒத்திவைத்ததுடன், அரசசெலவாக தலா ஆயிரம் ரூபா செலுத்த வேண்டுமெனவும் உத்தரவிட்டார். (வ-9)

## சட்டவிரோதமாக வெட்டப்படும் கால்நடை கழிவால் துர்நாற்றம்

### தென்மராட்சி கிழக்கு மக்கள் விசனம்

தென்மராட்சி, ஜுலை 14
குடியிருப்புகளை அண்டிய பகுதிகளில் காணப்படும் பற்றைகளுக்குள் சட்டவிரோதமாக வெட்டப்படும் கால்நடைகளின் கழிவுகளால் எழும் துர்நாற்றத்தால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

**தென்மராட்சி கிழக்கு கரம்பகம் பகுதியில் மக்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் மீள்குடியமர்த்தப்பட்டனர். அந்தக் குடியிருப்புகளை அண்டிய பற்றைப் பகுதியில் இரவோடிரவாக இனந்தெரியாதோர் கால்நடைகளைக் கொண்டு வந்து வெட்டி விட்டு அதன் கழிவுகளை அந்த இடத்திலேயே கைவிட்டுச் செல்கின்றனர்.**

தென்மராட்சி கிழக்கு கரம்பகம் பகுதியில் மக்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் மீள் குடியமர்த்தப்பட்டனர்.
அந்தக் கிராமத்தின் குடியிருப்புகளை அண்டிய பற்றைப் பகுதியில் இரவோடிரவாக இனந்தெரியாதோர் கால்நடைகளைக் கொண்டுவந்து வெட்டி விட்டு அதன் கழிவுகளை அந்த இடத்திலேயே கைவிட்டுச் செல்கின்றனர்.
அந்தக் கழிவுகளிலிருந்து எழும் துர்நாற்றம் கிராம மக்களால் சகிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தனர்.
இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.
எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதியில் கட்டாக் காலியாக அலையும் மாடுகளாக இருக்கலாம் என்றும்- அந்தப் பகுதியில் மாடுகளுக்கு கால்வாய் நோய் பரவும் அபாயம் காணப்படுவதால் மாடுகளை வேறு இடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டாம் என்றும் கால்நடை வைத்தியர் பணிமனையால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சட்ட விரோதமாக மாடுகளைப் பிடித்து கொலை செய்து, அந்த இறைச்சியை வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்படலாம் என்றும் தெரிவித்தனர். (வ-9)

## அமைதியான சமூகத்தை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

### யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதியான பேராயர் தெரிவிப்பு



கொழும்புத்துறையில் மக்களுடன் சந்திப்பு



குருநகர் யாகப்பர் ஆலயத்தில் திருப்பலியின் போது..

போரால் சின்னாபின்னாபடுத்தப்பட்ட வியட்நாம் நாட்டைச் சேர்ந்த ஆயராகிய நான் போரின் தாக்கங்களையும், பின் விளைவுகளையும் நன்கு அறிவேன்.
அன்பு, சமாதானம், நீதி என்பவற்றைக் கடைப்பிடிப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் அமைதியான சமூகத்தை உருவாக்க முடியும்.
பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் அருட் கலாநிதி மேதகு உவான் ரொற் யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொண்டு நேற்று இங்கு வருகை தந்த போது இவ்வாறு தெரிவித்தார்.
இலங்கைக்கான பிரதிநிதியாக அண்மையில் நியமனம் பெற்ற பேராயரின் யாழ்ப்பாண மறை மாவட்டத்துக்கான முதலாவது பயணம் இதுவாகும்.
குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நேற்று ஞாயிறு இவருக்கான வரவேற்பும் திருப்பலி நிகழ்வும் இடம்பெற்றன.
பேராயருடன் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். யாழ்.ஆயரின் பிறந்த தினம் நேற்று என்பதும் குறிப்பிடத்தக்கது.
பேராயர் யாழ்ப்பாணத்தின் சில பங்கு ஆலயங்களையும் சந்தித்து கலந்துரையாடி, நிலைமைகளை அறிந்து கொண்டார். கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய மக்களையும் சந்தித்து வழிபாடு கலந்துரையாடல்களை மேற்கொண்டார். (வ-135)

## அங்கீகாரமற்ற மருந்துப் பாவனை குறித்து அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜுலை 14
போலியாகத் தயாரிக்கப்பட்ட, இறக்குமதி செய்யப்பட்ட, உரிய முகவர்களினூடாக விநியோகிக்கப்படாத ஆயுள்வேத மருந்துகள் விநியோகத்தில் உள்ளதாக அங்கீகாரம் பெற்ற மருந்து விநியோக நிறுவனங்கள் அறிவித்துள்ளன. இது தொடர்பில் ஆயுள்வேத மருந்துகளை கொள்வனவு செய்யும் ஆயுள்வேத மருத்துவர்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு தரத்தை உறுதிப்படுத்தி கொள்வனவை மேற்கொள்ளுமாறு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.
ஒவ்வொரு வைத்தியரும் அக்கறை கொள்ளும் போது மட்டுமே இந்தப் போலிகளை இனங்காணமுடியும்.
எனவே, ஒவ்வொருவரும் இவ்விடயம் தொடர்பில் தங்கள் மேலான கவனத்தைச் செலுத்தி தரமான சுதேச மருத்துவ சேவைகளை உறுதிப்படுத்துமாறும் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ஒ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ராஜ தந்திரமா அல்லது ராஜபக்ஷ தந்திரமா?

கச்சதீவுக்கான உரிமை, இலங்கைத் தமிழர் மற்றும் தமிழ்நாடு மீனவர் பிரச்சினை. இந்த மூன்றும் தமிழ்நாடு மக்களையும், அரசியல் கட்சிகளையும் தேர்தல் காலத்தில் அதிகம் பேச வைத்த விடயங்கள்.

தேர்தல் முடிந்து பாரதீய ஜனதாவும் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. ஆனால் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்களும் எதிர்பார்த்தது போல் காரியங்கள் நகர்வதைக் காணோம்.

இலங்கைத் தமிழர் தொடர்பாகவும் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்புத் தொடர்பாகவும் ஏற்கெனவே இருநாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனா–ராஜீவ் காந்தி உடன்பாடு என்ற வகையில் இருந்து வருகின்றது. அதன் அடிப்படையிலேயே அரசமைப் பில் 13 ஆவது திருத்தம் ஒன்று இணைத்துக் கொள்ளப் பட்டது. இந்த ஒப்பந்தத்தில் காணப்படும் அதிகாரப் பகிர்வு கள் போதுமானவையாக இல்லை. அதைவிட மேலான விரிவான அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அதற்கான உடன்பாடு ஒன்றையே இலங்கைத் தமிழர்கள் விரும்புகிறார்கள். இது ஒன்றும் புதுமையான விடயமுமல்ல. இரு தரப்பு தலைவர்களும் மனம் வைத்து முயன்றால் சாத்தியப்பட முடியாததுமல்ல.

ஆனால் இலங்கையில் போர் முடிந்த கையோடு 13 ஆவது திருத்தத்துக்கு மேலாகவும் உரிமைகள் பகிர்வதற்கு தாம் உடன்படுவதாக சர்வதேசத்துக்கும் இந்தியாவுக்கும் இலங்கைத் தலைவர்கள் உறுதியளித்திருந்தார்கள்.

ஆனால் 13 ஆவது திருத்தத்தை பலவீனப்படுத்தவும் அதில் உள்ள சில அம்சங்களை அகற்றிவிடவும் கூட முயற்சிகள் இடம்பெற்றுள்ளன. அவை இன்னும் முற்றுப் பெறவும் இல்லை. எனவேதான் 13 ஆவது திருத்தத்தையும், அதற்கு மேலாக வழங்குவதாகக் கூறியவற்றையும் நிறைவேற்றுமாறு இந்திய காங்கிரஸ் அரசு கோரியது. அதையே இப்போதைய மோடி அரசும் வற்புறுத்தும் என்றும் தெரிகிறது. அதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன. ஆனால் கொடுத்த வாக்குறுதிகளை கிடப்பில் போடுவதற்கு பெயர் பெற்ற இலங்கை அரசு அவ்வாறான முயற்சியில் இந்தியா தொடர்ந்து ஈடுபடாமல் இருக்கச் செய்வதற்கான உத்திகளை இப்போது பிரயோகிக்கத் தொடங்கியிருக்கிறது.

இந்திய மீனவர்களும் தமிழ்நாடு அரசும் அங்குள்ள கட்சிகள் பலவும் கச்சதீவை இந்தியா மீட்டெடுத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதால் அதில் மத்திய அரசு அக்கறை காட்டத் தொடங்கினால் நிலைமை மோசமாகலாம். எனவேதான் அப்படியான ஒரு நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க திருகோணமலையில் சீன விமான பராமரிப்பு நிலையம் ஒன்றை நிறுவ சீன தேசிய– விண்வெளி தொழில்நுட்ப இறக்குமதி– ஏற்றுமதி கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் ஒன்றை இலங்கை செய்து கொண்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

"நீ அதைச் செய்தால் நான் இதைச் செய்வேன்" என்ற வகையில் இது இருப்பதாகக் கருத இடமுண்டு. 1987 ஆம் ஆண்டின் இருநாடுகளுக்கும் இடையிலான உடன்பாட்டுக்கு இது முற்றிலும் மாறான செயல் என்று இந்தியத் தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பது ஒரு புறமிருக்க அண்மையில் இந்தியாவுக்குச் சென்று இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜுடன் இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நடத்திய பேச்சுக்களின் போது இந்த விடயமும் கலந்துரையாடலில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இலங்கைத் துறைமுகங்கள் திருகோணமலை உட்பட இந்திய நலன்களுக்கு இடையூறாக இருக்கும் வகையில் இராணுவ ரீதியில் பயன்படுத்த அனுமதிக்கலாகாதென்ற ஒப்பந்த வாசகத்துக்கு இது மாறானது என்று இந்தியத் தரப்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்கலாம்.

எதுவானாலும் இந்தியாவின் புதிய அரசு இலங்கை விடயத்தில் மிக எச்சரிக்கையாகவே செயற்படுவதற்கு இந்த விடயம் விழிப்பைத் தந்திருக்க முடியும். இலங்கைத் தமிழர் விடயம் இருநாடுகளுக்குமிடையிலான ராஜதந்திரப் போருக்கு வழிவகுக்கின்றது.

இது விரைவில் முற்றலாம். இல்லையெனில் பிசுபிசுத்தும் போகலாம். இந்தச் சூழ்நிலையில் மாத இறுதியளவில் இந்தியத் தலைநகர் டில்லிக்குச் செல்லவிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் எதனைச் சாதித்துக் கொண்டு வருவார்கள் என்பதைக் காத்திருந்து பார்ப்போம்.

# இலங்கையின் பிடிக்குள் சிக்கியுள்ள ஆஸி. அரசு

சேரலாதன்

ஆஸ்திரேலியா நடுக்கடலில் வைத்து படகுகளில் காணப்பட்டவர்களைப் பலவந்தமாகக் கைது செய்ததும் அவர்களில் 41 பேரை இரகசியமான முறையில் எவருக்கும் தெரிவிக்காது இலங்கையிடம் ஒப்படைத்ததும் மனித உரிமை ஆர்வலர்களின் கடுமையான கண்டனங் களுக்கு ஆளாகியுள்ளன. ஆரம்பத்தில் வள்ளங்களைக் கைப்பற்றியமை தொடர்பாக எதுவுமே கூறாதிருந்த ஆஸ்திரேலியா கபடத்தனமான வகையில் படகுகளில் இருந்த 41 பேரை இலங்கையிடம் ஒப்படைத்த செயல் அந்த நாட்டின் மீதான மதிப்பை சர்வதேச அளவில் வெகுவாகப் பாதித்துவிட்டது.



அண்மைக் காலமாக இலங்கையிலிருந்து படகுகளில் ஏறி ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோருவதற்கு முயல்பவர்களின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் பெருமளவு புகலிடக் கோரிக்கையாளர்கள் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளமை ஆஸ்திரேலிய அரசை சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது. ஆனால் இலங்கை அரசுக்கு ஆஸ்திரேலியாவின் செயல் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஏனென்றால் புகலிடக் கோரிக்கையாளர்கள் விடயத்தில் இலங்கை அரசு ஆஸ்திரேலியாவின் நல்ல பிள்ளையாகவே நடந்து கொள்கின்றது.

நடுக்கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக ஆஸ்திரேலிய கடற்படையினரால் அந்த நாட்டின் சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் இவர்களை ஓரிடத்தில் அடைத்து வைத்ததுடன் சிறிதளவு, உணவு மற்றும் குடிதண்ணீரை வழங்கியுள்ளனர். தாம் அங்கு நாயிலும் கேவலமாக நடத்தப்பட்டதாக தடுத்து வைக்கப்பட்டவர்களில் ஒருவர் தெரிவித்தார். இந்த நிலையில் ஆஸ்திரேலிய படகில் சென்ற 153 பேரை நடுக்கடலில் தடுத்து வைத்துவிட்டு 41 பேரை இலங்கையிடம் ஒப்படைத்தது. இவர்களில் சிறுவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் நீதிமன்ற விசாரணைகளை எதிர் கொண்டு வருகின்றனர்.

அண்மைக் காலமாக இலங்கையிலிருந்து படகுகளில் ஏறி ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோருவதற்கு முயல்பவர்களின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் பெருமளவு புகலிடக் கோரிக்கையாளர்கள் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளமை ஆஸ்திரேலிய அரசை சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது. ஆனால் இலங்கை அரசுக்கு ஆஸ்திரேலியாவின் செயல் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஏனென்றால் புகலிடக் கோரிக்கையாளர்கள் விடயத்தில் இலங்கை அரசு ஆஸ்திரேலியாவின் நல்ல பிள்ளையாகவே நடந்து கொள்கின்றது.

இதேவேளை- இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை நடுக்கடலில் தடுத்து வைத்தமையானது ஆழ்கடல் திருட்டுக்கு ஒப்பானதென ஆஸ்திரேலிய நாட்டின் முன்னாள் பிரதமர் பிரேஸர் தெரிவித்துள்ளார். ஆனால் ஆஸ்திரேலிய அரசு இதற்கெல்லாம் செவி சாய்ப்பதாகத் தெரியவில்லை. மேலும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று எந்தவித அறிவிப்பும் வெளியிடாமல் இலங்கைக்கு வருகை தந்த ஆஸ்திரேலிய நாட்டுக் குடிவரவு- குடியகல்வுத்துறை அமைச்சர் ஸ்கொட் மொரிசன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ஆகியோருடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டதோடு தமது அரசின் சார்பாக இரண்டு அதிவேக ரோந்துப் படகுகளை இலங்கைக்கு வழங்கியுள்ளார். இதை புகலிடக் கோரிக்கையாளர்கள் விடயத்தில் இலங்கை அரசு வெளியிட்டு வரும் ஆதரவுக்கான சன்மானம் என்றே கருத முடியும். மேலும், யாழ்ப்பாணத்துக்கு இரகசியமாகச் சென்ற அவர் தமிழர் தரப்பினர் எவரையும் சந்திக்காது அரசுப் பிரதிநிதியான ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியுடன் மாத்திரமே கலந்துரையாடிவிட்டுச் சென்றுள்ளார். இவரது இந்தச் செயல் இலங்கைத் தமிழர்கள் மீது அவர் கொண்டுள்ள காழ்ப்புணர்வை வெளிப்படையாகவே எடுத்துக் காட்டிவிட்டது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது ஆஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகியவற்றுடன் இணைந்து கொள்ளவில்லை என்பதுடன் இலங்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நடந்து கொண்டமை இங்கு கவனத்துக்குரியது. போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை விட தனது நாட்டுக்குள் புகலிடக் கோரிக்கையாளர்கள் எவரும் வரக்கூடாது என்பதில் ஆஸ்திரேலிய அரசு அதிக அக்கறையுடன் செயற்படுகின்றது என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

தற்போது ஆஸ்திரேலியாவை ஆட்சி செய்பவர்கள் அந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் அல்ல. இவர்களின் மூதாதையர்கள் பிரிட்டனிலிருந்து நாடு கடத்தப்பட்டு இங்கு குடியேற்றப்பட்டவர்களே. அந்த நாட்டின் பூர்வீகக் குடிமக்கள் இந்தக் குடியேறிகளால் பல்வேறு வகையிலும் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்ட நிலையில் ஒதுங்கி வாழ் கின்றனர். இவர்களுக்கான உரிமைகள் எதுவும் இங்கு வழங்கப்படவில்லை. உரிமைகளை இழந்து, நாட்டின் மூத்த குடிகள் என்ற அந்தஸ்தைப் பறிகொடுத்து காட்டுவாசிகள் போன்றே அவல வாழ்வு வாழும் இந்தப் பூர்வீகக் குடி மக்கள் இன்னமும் இருண்டதொரு யுகத்திலேயே தமது வாழ்வைத் தொலைத்து வருகின்றனர். இவர்களைக் கண்டு கொள்ளாத ஆஸ்திரேலிய அரசு வேறு நாடுகளில் அவலங்களை எதிர்கொள்ளும் மக்களிடம் அனுதாபத்தைக் காட்டுமென எதிர்பார்க்க முடியாது. ஆனால் ஆஸ்திரேலிய அரசு நாகரிகமற்ற வகையில் கேவலமாக நடந்து கொள்வதை எவருமே ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கையில் நீடித்து இடம்பெற்ற கொடிய போர் இங்கு வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கையைப் பெரிதும் சீரழித்துவிட்டது. பல்லாயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டமை ஒருபுறமிருக்கப் பலர் காணாமற் போயுள்ளனர். மதிப்பிடமுடியாத அளவுக்கு சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. போர் ஓய்ந்து இங்கு சமாதானம் நிலவுவதாகக் கூறினாலும்; தமிழர்களின் வாழ்வு போராட்டம் நிறைந்ததாகவே மாறியுள்ளது. காணிப் பறிப்பு, சொந்த இடங்களில் குடியமர முடியாத நிலை, குடியமர்ந்தும் வசதி குறைந்த வாழ்க்கை, கெடுபிடிகள், அச்சுறுத்தல், கட்டுக்கடங்காத கும்பல்களின் அட்டகாசம், பொருளாதாரப் பிரச்சினை, சமூக வாழ்வியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், முகம் தெரியாதவர்களின் குடியேற்றம் என்பனவெல்லாம் ஒன்று சேர்ந்து தமிழர்களை வாட்டி வதைக்கின்றன. இதிலிருந்து விடுபட்டுச் செல்வதையே அவர்கள் பெரிதும் விரும்பி நிற்கின்றனர். இந்த நிலையில்தான் வெளிநாடுகளில் புகலிடம் கோருவதற்கு அவர்கள் முனைகின்றனர். ஆஸ்திரேலியா நோக்கிய பயணமும் இதனால்தான் நிகழ்கின்றது. ஆனால் ஆஸ்திரேலிய அரசு இங்கு பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள மக்களைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காது நடந்து கொள்கின்றமை அதன் கபட வேடத்தை தோலுரித்துக் காட்டுகின்றது. மேலும், இந்த உலகிலுள்ள நாகரிக சமூகத்திலிருந்து அது ஒதுங்கி நிற்பதையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

ஆஸ்திரேலியாவின் புதிய அரசு பதவி ஏற்றுக் கொண்டதிலிருந்து அந்த நாட்டின் தோற்றத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. மனித உரிமைகளை மதிக்க வேண்டும், மனிதாபிமானத்தை எந்த நிலையிலும் மீறக்கூடாது என்பவற்றிலிருந்து அந்த நாடு விலகி நிற்பதையே இன்று காண முடிகின்றது.

தற்போதைய படகுகள் கைப்பற்றப்பட்ட விடயத்தில் அந்த நாடு தனது நற்பெயரைப் பாழ்படுத்தியுள்ளது. ஆஸ்திரேலியர்கள் மனிதாபிமானமற்றவர்கள், இரக்கமற்றவர்கள் என்று அனைத்துலக சமூகத்தினர் வெறுக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது.

ஆகவே ஆஸ்திரேலியர்கள் இனியாவது தம்மைச் சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. இதனை அவர்கள் புறமொதுக்குவதற்கு முயல்வார்களாயின் அனைத்துலக நாடுகளால் புறம்தள்ளப்பட்டு விடும் நிலையை அவர்களால் தடுக்கவே முடியாது என்பதைக் கூறவே தேவையில்லை.

# தமிழ் மக்களின் சனத்தொகையில் பெரும் வீழ்ச்சி

பீ.எ. அந்தோனிமார்க்



இலங்கையில் கடந்த 30 வருடங்களுக்குப் பிறகு 2013ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குடிசன மதிப்பின் பிரகாரம் இலங்கையின் குடிசனத் தொகை 20,277,597 ஆகும். இந்த தரவுகள் வழமையான வசிப்பிடங்களை அடிப்படையாகக் கொண்டே மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையில் தொடர்ந்து இடம் பெற்ற இனக் கலவரங்கள், போர் இவற்றினால் பல லட்சக் கணக்கான மக்கள் இறந்துள்ளார்கள். பல ஆயிரக் கணக்கான மக்களை இன்னும் காண வில்லை. உயிருடன் இருக்கிறார்களா? என்பது கேள்விக்குறியாகும். இருந்த போதும் இனச் சுத்திகரிப்பானது 1956 ஆம் ஆண்டு, 1958 ஆம் ஆண்டு, 1977 ஆம் ஆண்டு, 1983 ஆம் ஆண்டு, 1990 ஆம் ஆண்டு, 2009 ஆம் ஆண்டுகளில் நடந்தது போன்று இன்னமும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 1987 ஆம் ஆண்டு உலக சனத்தொகை 500 மில்லியன் ஆகும். இந்த ஆண்டில்தான் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP) இந்தத் தினத்தை உலக சனத்தொகைத் தினமாக பிரகடனப்படுத்தியது. 2011 ஆம் ஆண்டு உலக சனத்தொகை 700 மில்லியனாக உயர்ந்தது. தொடர்ந்து 2025 ஆம் ஆண்டு 800 மில்லியனாகவும் 2043 ஆம் ஆண்டு 900 மில்லியனாகவும் 2083ஆம் ஆண்டு 1000 மில்லியனாகவும் உயரும் என புள்ளி விவர ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். ஒவ்வொரு வருடமும் 75 மில்லியன் மக்கள் பிறக்கிறார்கள் எனவும் 56 மில்லியன் மக்கள் இறக்கிறார்கள் எனவும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இதன்படி 19 மில்லியன் மக்கள் வருடா வருடம் அதிகரித்து வருகிறார்கள்.

இலங்கையில் கடந்த 30 வருடங்களுக்குப் பிறகு 2013ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குடிசன மதிப்பின் பிரகாரம் இலங்கையின் குடிசனத் தொகை 20,277,597 ஆகும். இந்த தரவுகள் வழமையான வசிப்பிடங்களை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி 9 மாகாணங்களுக்கும் உரிய 25 நிர்வாக மாவட்டங்களில் 331 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 14,022 கிராம சேவகர் பிரிவுகள் கணக்கெடுக்கப்பட்டன. மொத்த சனத்தொகையில் 3,418 பேர் எந்த விதமான வீடுகளும் அற்றவர்களாகித் திறந்த வெளிகளில் வாழ்கிறார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகூடிய சனத்தொகை மேல் மாகாணத்தில் 5,837,294 ஆகக் காணப்படுகிறது. மொத்த சனத்தொகையில் அது 28.8 வீதமாகும்.

ஆகக் குறைந்த சனத்தொகை வடமாகாணத்தில் 1,060,023 ஆகும். அது 5.2 வீதமாகும். கிழக்கு மாகாணம் 1,547,377 ஆகும். அது 7.6 வீதமாகும். மாவட்ட அடிப்படையில் ஆகக் கூடிய சனத்தொகை கொழும்பு மாவட்டம் 2,323,826 ஆக கொண்டுள்ளது. அது 11 வீதம் ஆகும். ஆகக்குறைந்த சனத்தொகை முல்லைத்தீவு மாவட்டம் 92,228 கொண்டுள்ளது. அது 5 வீதமாகும். இந்தக் கணக்கெடுப்பில் சனத்தொகை ஆகக் குறைந்த மாவட்டங்களாக வடமாகாணத்தில் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மற்றும் வவுனியா என்பன அறிவிக்கப்பட்டுள்ளன. தற்போது நடைபெற்றுவரும் இராணுவ ஆக்கிரமிப்பு அதன் மூலம் செயற்படுத்தப்படும் சிங்களக் குடியேற்றம், காணி அபகரிப்பு போன்றவற்றை எண்ணிப்பார்க்கும் போது தமிழர் தாயகம் கபளீகரம் செய்யப்பட்டு குடிப்பரம்பல் மாற்றப்பட்டு தமிழர் தாயகம் என்ற குடியுரிமை பறிக்கப்பட்டு தனிச் சிங்கள நாடாக மாற்றப்பட்டு விடுமோ என்ற ஐயம் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் நிலவுகின்றது. மேலும் சனத்தொகை அதிகரிப்பின் காரணமாகப் பல்வேறு தேவைகளும் அதிகரிக்கின்றன. நீர், உணவு, இருப்பிடம், சுகாதாரம், மருத்துவ வசதிகள் என்பன அவற்றில் சிலவாகும். 1.2 மில்லியனுக்கு அதிகமான மக்களும் உலகில் இன்னும் நீர்வசதி இல்லாமல் இருக்கிறார்கள். நீர் குறித்த பிரச்சினைகள் காரணமாக தினமும் உலகில் 3,800 சிறுவர்கள் இறப்பதாகத் தகவல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளன. இலங்கையிலும் நீர்ப்பற்றாக்குறை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வன்னி மாவட்டம், அனுராதபுரம் போன்ற மாவட்டங்களில் அதிக வறட்சியினால் நீர்ப்பற்றாக்குறை காணப்படுகிறது. தூய்மையற்ற நீரைப் பருகுவதன் மூலம் இந்த மாவட்டங்களில் பலர் சிறுநீரக நோயினால் (Kidney) பாதிக்கப்பட்டுள்ளார்கள். சனத்தொகையின் இரட்டிப்பான வளர்ச்சியினால் குடிதண்ணீருக்கு மட்டுமல்ல விவசாயத் தேவைக்கும் அதற்கு அடுத்ததாக கைத்தொழில்களுக்கு நீர்த் தட்டுப்பாடு அதிகரித்து வருகின்றது.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற போர் நடவடிக்கை முடிவடைந்து 5 ஆண்டுகள் கழிந்தும் பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் சொந்தக்கிராமங்களில் மீள் குடியேற முடியாது இருக்கிறார்கள். இவர்களின் காணிகளிலும் வீடுகளிலும் இராணுவம் குடியிருக்கிறது. சிலர் தற்காலிகக் கொட்டில்களிலும் தறப்பாள்களிலும் வாழ்கிறார்கள். இவர்களுக்குரிய நிரந்தர வீட்டு வசதி, தண்ணீர் வசதி, மலசலகூட வசதிகள் ஒன்றும் இல்லை. வல்லரசு நாடுகளும் ஐ.நாட்டுச் சபையும் இணைந்து உலக சனத்தொகை தினமான இன்றாவது இலங்கை தமிழ் மக்களின் குடியுரிமை, மனித உரிமை, ஜனநாயக உரிமை, காணி உரிமை, கடல் உரிமைகளை வழங்கி நாட்டில் சாந்தியும் சமாதானமும் சகவாழ்வும் நிலவ உதவி செய்ய வேண்டுமென தமிழ் பேசும் மக்கள் கேட்டு நிற்கிறார்கள்.

# வளர்ந்துவரும் இளைஞர் வன்முறை



பி.முத்துலிங்கம், ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்

போரின்போது வன்முறை சூழலில் சொல்ல முடியாத உயிர் இழப்புக்கள், பொருள் இழப்புக்களைச் சந்தித்த எமது சமூகம்,போர் முடிவுக்கு வந்த பின்னரும் அதன் தொடராக வன்முறைகள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக வளர்ந்து வரும் மனித வன்முறைகளுக்கான காரண காரியங்கள் என்ன? இவற்றைக் குறைப்பதற்கு கிராம, பிரதேச ரீதியாக எவ்வகையான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தலாம், ஏன் செயற்றிட்டங்கள் தோல்வியடைகின்றன என்பன ஆய்வுக்கு உரியவை. சமூகத்தில் நிலவும் வறுமை, வேலைவாய்ப்பின்மை, பொருள்களின் விலை அதிகரிப்பு, நுகர்வுப் பொருளாதாரம், சமூக, குடும்ப ஒழுக்கப் பிறழ்வுகள், கலாசார பிறழ்வுகள் என்பனவே பிரதான காரணங்களாகும்.




திருமணமான ஒருவன், அதே குடும்பத்தைச் சேர்ந்த இன்னொரு பெண்மீது ஆசை வைக்கின்றான். அங்கு குடும்ப ஒழுக்க நியமங்கள் மீறப்படுகின்றன. இறுதியில் கொலை வெறியனாக மாறுகின்றான்.

அச்சுவேலி முக்கொலை சம்பவத்தைப் பார்க்கும்போது திருமணமான ஒருவன், அதே குடும்பத்தைச் சேர்ந்த இன்னொரு பெண்மீது ஆசை வைக்கின்றான். அங்கு குடும்ப ஒழுக்க நியமங்கள் மீறப்படுகின்றன. இறுதியில் கொலை வெறியனாக மாறுகின்றான். அங்கு அவனிடம் அன்பு, கருணை, காருண்யம், இரக்கம், மனிதாபிமானம் காணப்படவில்லை. ஆலயங்கள், சமூக நிறுவனங்கள் இவ்வாறான மனிதப் பண்புகளை வளர்க்க தவறிவிட்டன என்றே சொல்ல வேண்டும்.

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கை இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இடைக்கால நிர்வாக சபையை பொறுப்பேற்கும் ஒரு சூழ் நிலையில் பிரபாகரன் ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியில் "போரினால் பாதிக்கப்பட்ட போராளிகளின் நலன்களைக் கவனிப்பதே தனது கடமை" எனக் குறிப்பிட்டார். அவ்வாறே மாகாண சபையும் அரசியல் தீர்வை முன்னெடுப்பதோடு முன்னாள் போராளிகள், இறுதிப்போரால் பாதிக்கப்பட்ட மக்கள், பெண்கள், சிறுவர்கள் தொடர்பாக பெரிய செயற்றிட்டம் ஒன்றைத் தயாரித்து அரசு மற்றும் புலம்பெயர் தமிழர்களின் உதவியோடு நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லாவிடில் வெளியார் தலையீடுகளும், தொடர் வன்முறைகளும் தவிர்க்க முடியாத வையாகிவிடும். பாடசாலைகளில் கல்வியோடு, ஒழுக்கம் போதிக்கப்படவேண்டும். புகைப்பழக்கம், மது பாவனை, போதைவஸ்து பாவனை என்பவற்றுக்கு எதிராக மாணவர்கள், ஆசிரி யர்கள், ஊர்வலங்கள் நடத்துதல் பாராட்டத்தக்கது.

ஆலயங்கள் உட்கட்டுமானங்கள், திருவிழாக்கள் போன்றவற்றுக்கான செலவைக் குறைத்து, அந்த நிதியை சமூகம் சார்ந்த கல்வி, பொருளாதார மேம்பாட்டுக்காக முதலீடு செய்யலாம். அகில இலங்கை இந்து மாமன்றம், கருணைப் பாலம் போன்ற அமைப்புக்கள் அத்தகைய செயற்றிட்டங்களை முன்னெடுப்பது பாராட்டுக்குரியது. கிராமங்கள் தோறும் உள்ள கலை, பண்பாட்டு மன்றங்கள், அறநெறிப் பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள் என்பன இளைஞர்கள், யுவதிகளை வன்முறையற்ற பாதையில் வழிப்படுத்த வேண்டும். நீண்ட காலமாக நிலவி வந்த நிலப்பிரபுத்துவ முதலாளித்துவக் கட்டமைப்பு மூன்று தசாப்த ஆயுதப் போராட்டத்தால் ஆட்டம் கண்டுள் ளது. எனவே புதியதொரு சமூக கட்டமைப்பை வடிவமைப்பதன் மூலமே வன்முறையை ஒழித்து உற்பத்தியையும், பண்பாட்டையும் மேம்படுத்தலாம்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: முக்கிய முடிவுகளும், மாற்றங்களும் வரும். நீண்டகால மாக முயற்சித்த பல விடயங்கள் சாதகமாக கூடிவரும். தனமும், சொத்து சேர்க்கையும் உண்டு. மாணவர்கள் மேற்படிப்புக்காக வெளிநாடு செல்லும் யோகம் உள்ளது.

**இடபம்**: வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. வேலை தொடர்பாக அலைச்சல், செலவுகள் இருக்கும். வெளிநாடு செல்ல வேண்டும் என்ற உங்களது நீண்ட நாள் ஆசைக்கு முயற்சி நிறைவேறும். தெய்வீக நாட்டம் அதிகரிக்கும்.

**மிதுனம்**: ஆலயத் திருப்பணி, கோயில் கும்பாபிஷேகம், குலதெய்வ வழிபாடு போன்றவற்றில் பங்கேற்பீர்கள். பெண்களுக்கு குடும்பத்தில் பொறுப்புகளும், வேலைச்சுமையும் கூடும். வயிறு தொடர்பான உபாதைகளை அலட்சியப்படுத்தாதீர்கள்.

**கடகம்**: நிலம், வீடு போன்றவற்றை விற்பதற்கும், வாங்குவதற்கும், மாற்றி அமைப்பதற்குமான சூழ்நிலைகள் ஏற்படும். உத்யோகத்தில் முன்னேற்றமான அம்சங்கள் உண்டாகும். கடன்கள் கிடைக்கும்.

**சிங்கம்**: விரும்பிய இடமாற்றமும் உண்டு. புதிய முதலீடுகள் செய்வீர்கள். கூட்டுத் தொழிலில் இருப்பவர்கள் சகிப்புத்தன்மை யுடன் இருப்பது நல்லது. உங்கள் எண்ணங்களும், திட்டங்களும் செயல் வடிவம் பெறும்.

**கன்னி**: எதிர்ப்புகள் மறையும். உங்களுக்கு எதிராக காய் நகர்த்தியவர்கள் தோல்வி அடைவார்கள். உங்களுக்குத் தெளிவான சிந்தனை வரும். முக்கிய இடங்களுக்கு குடும்பத்துடன் ஆன்மிக சுற்றுலா சென்று வருவீர்கள்.

**துலாம்**: தந்தையுடன் ஏற்பட்ட மனக் கசப்புகள் மறையும். அவர் மூலம் முக்கிய உதவிகள் கிடைக்கும். சொந்த இடத்தில் வீடு கட்டும் யோகம் உண்டு. மருத்துவ செலவுகள் படிப்படியாக குறையும். சிகிச்சையில் இருப்பவர்கள் குணமடைவார்கள்.

**விருச்சிகம்**: சகோதர உறவுகளால் அலைச்சல், பயணங்கள், செலவுகள் இருக்கும். மாணவர்கள் கல்வியில் சிறந்த பெறு பேறுகளைப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**தனுசு**: பெண்களின் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். வழக்கு தொடர்பாக ஏற்பட்ட தடைகள் நீங்கி நல்ல் சாதகமான தீர்ப்பு வரும். உத்யோகம் சாதகமாக இருக்கும். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**மகரம்**: சம்பள உயர்வு பற்றிய தகவல் வரும். இழுத்தடித்து வந்த விவகாரங்கள் நல்லபடியாக முடியும். வியாபாரம் இரட்டிப்பாகும். கொடுக்கல், வாங்கல் சீராக இருக்கும். வேலையாள்கள் ஒத்து ழைப்பார்கள்.

**கும்பம்**: முக்கிய விடயங்களில் குடும்பத்தினரின் ஆலோசனை களை கேட்டு செயற்படுவது முக்கியம். வேலை விடயமாக பெரிய நிறு வனத்தில் இருந்து அழைப்பு வரும். பணப் பற்றாக்குறை காரணமாக தடைப்பட்டு நின்ற கட்டட வேலைகள் மீண்டும் இனிதே தொடங்கும்.

**மீனம்**: குடும்பத்தில் சகிப்புத் தன்மையுடனும், விட்டுக்கொடுத்தும் செல்வது நல்லது. கடல் கடந்து செல்வதற்கான யோகம் வந்துள்ளது. பூர்வீக சொத்தில் இருந்துவந்த தடைகள் நீங்கும். உத்தியோகத்தர் களுக்கு நல்ல பெயர் கிடைக்கும்.

## நாளை

**ஆனி-31 செவ்வாய்க்கிழமை | 15.07.2014**

திதி: திருதியை மு.ப.10.35 வரை
நட்சத்திரம்: அவிட்டம் பி.ப.02.32 வரை
சுபநேரம்: 10.30-12.00 வரை
இராகுகாலம்: 03.00-04.30 வரை
சங்கடஹர சதுர்த்தி

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## மன இயலின் முக்கியத்துவம்

நாம் நமது வாழ்விலேயே இதை எப்போதும் பார்க்கிறோம். நமது நல்லியல்புகளை எதிர்த்துச் சிலவற்றைச் செய்து விடுகிறோம்; பின்னர் நம்மால் எப்படி இதை நினைக்க முடிந்தது, செய்ய முடிந்தது என்று வியக்கிறோம்; நம்மை நாமே நிந்திக்கிறோம். மீண்டும்மீண்டும்அதையே செய்கிறோம். மீண்டும் மீண்டும் அதற்காகத் துன்பம் அனுபவிக்கிறோம். நம்மை நாமே கண்டித்துக்கொள்கிறோம். நாம் விரும்பியதால் தான் அதைச் செய்ததாக எண்ணுகிறோம். ஆனால் நாம் அதை விரும்பவில்லை, விரும்புவதற்காகப் பலவந்தப்படுத்தப்பட்டோம். மீண்டும் மீண்டும் வற்புறுத்தப்படுகிறோம். நம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நமது மனத்துக்கும் பிற மனங்களுக்கும் நாம் அடிமைகள்; நாம் நல்லவர்களாயிருக்கலாம். கெட்டவர்களாயிருக்கலாம் அதிலொன்றும் பெரிய வித்தியாசமில்லை. நாம் இங்கு மங்குமாக அலைக் கழிக்கப்படுகிறோம். நம்மால் அதைத் தடுக்க முடிவதில்லை. நான் சிந்திக்கிறேன், நான் செய்கிறேன், என்றெல்லாம் கூறுகிறோம். ஆனால் உண்மையில் அப்படியில்லை. நாம் சிந்திக்கிறோம். ஏனெனில் சிந்தித்தே தீர வேண்டும். நாம் செய்கிறோம். ஏனெனில் செய்தே ஆக வேண்டும். நாம் நமக்கும் பிறருக்கும் நாம் அடிமை.

# காற்றின் வேகம், திசையை அறிய உதவும் அப்பிளிக்கேஷன்




ஸ்மார்ட் கைபேசிகளின் உதவியுடன் காற்றின் வேகம், திசை என்பவற்றை துல்லியமாக அறிந்துகொள்ளக் கூடிய வகையில் அப்பிளிக்கேஷன் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. Vaavud Smartphone Wind Meter எனப்படும் இந்த அப்பிளிக்கேஷன் ஆனது 2013ம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் பிற்பகுதியில் உருவாக்கப்பட்டு நிதி திரட்டலுக்காக Kickstarter இணையத்தளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கின்றது. சுமார் 20,000 பவுண்ட்ஸ் களை எதிர்பார்க்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டுள்ள இந்த அப்பிளிக்கேஷன் இன்னும் ஓரிரு மாதங்களில் அறிமுகம் செய்யப்படும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | | 9 | 8 | | 2 | | |
| | | 6 | 1 | | 7 | | | |
| 9 | | 4 | | 5 | | | 8 | |
| 6 | | | | | | | 2 | 7 |
| | 2 | 7 | | 9 | | 5 | 1 | |
| 4 | 1 | | | | | | | 3 |
| | 6 | | | 1 | | 7 | | 5 |
| | | | 7 | | 9 | 8 | | |
| | | 9 | | 2 | 8 | | 3 | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 4 | 9 | 2 | 5 | 7 | 1 | 8 |
| 9 | 8 | 5 | 1 | 7 | 4 | 2 | 3 | 6 |
| 1 | 2 | 7 | 8 | 3 | 6 | 9 | 5 | 4 |
| 3 | 4 | 6 | 2 | 5 | 1 | 8 | 9 | 7 |
| 7 | 5 | 8 | 6 | 9 | 3 | 1 | 4 | 2 |
| 2 | 1 | 9 | 4 | 8 | 7 | 5 | 6 | 3 |
| 4 | 7 | 2 | 5 | 6 | 9 | 3 | 8 | 1 |
| 5 | 6 | 3 | 7 | 1 | 8 | 4 | 2 | 9 |
| 8 | 9 | 1 | 3 | 4 | 2 | 6 | 7 | 5 |



இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்படும் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையேயான தடகளப் போட்டிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம்

## கரப்பந்து தொடர் முடிவுகள்

யாழ்ப்பாணம் ஜீலை 14

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 49ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அவற்றில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் கலைவாணி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

மீசாலை சீமா விளையாட்டுக் கழக அணிக்கும் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத் தில் மீசாலை சீமா விளையாட்டுக் கழக அணி 2:1என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

உடுப்பிட்டி சிவகுமாரன் விளையாட்டுக் கழக அணிக்கும் மீசாலை சுடர்ஒளி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமாரன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

பருத்தித்துறை, ஜூலை 14

பருத்தித்துறை தீபஜோதி விளையாட்டுக் கழகம் தனது 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 26ஆம் திகதி சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் மற்றும் கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளன.

அதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 20ஆம் திகதி தமது பதிவுகளைக் கழகத்தில் மேற்கொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ற-422)

# கிண்ணம் வென்றது ஹென்றியரசர்

வலி.வடக்கு, ஜூலை 14

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் இராஜதுரை ஞாபகார்த்தமாக கல்லூரி சமூகத்தால் முதல் தடவையாக நடத்தப்பட்ட வட மாகாணப் பாடசாலை அணிகளின் 19 வயதுப் பிரிவினருக்கிடையில் உதைபந்தாட்டத் தொடரில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதின.

இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாக காணப்பட்ட போதிலும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் முதல் பாதி ஆட்டத்தில் தொடர்ந்து இரு கோல்களைப் பெற்றுக்கொண்டு, ஹென்றியரசர் கல்லூரி அணியை இக்கட்டான நிலைமைக்குத் தள்ளியது.





ஆனாலும் சுதாரித்துக் கொண்ட ஹென்றியரசர் கல்லூரி அடுத்த சில நிமிடங்களில் இரண்டு கோல்களைப் பெற்று முதல்பாதி ஆட்டத்தில் சமநிலையுடன் முடித்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் மிகவும் நிதானமாகவும் தடுத்து ஆடுவதிலும் அதிக அக்கறையுடன் விளையாடினார்கள். ஹென்றியரசர் கல்லூரிக்கு கோல் பெறும் வாய்ப்புக்கள் கிடைத்த போதும் அதனைத் தவறவிட்டார்கள். இரண்டாம்பாதிஆட்டம்இருஅணிகளும் கோல்கள் பெறாத நிலையில போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

அதையடுத்து வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சம நிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 4:3 என்ற கோல்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று இராஜதுரை ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தையும் பணப் பரிசையும் தட்டிச் சென்றது. (ற-86,23)



# வசந்தஸ்ரீ அணியினர் கரப்பந்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 14

தெல்லிப்பழை பிரதேச இளைஞர் சம்மேளனமும், யாழ்.மாவட்ட கரப் பந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்திய மின்னொளியிலான கரப்பந்துச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது.

கடந்த வெள்ளிக்கிழமை இளவாலை மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை ஸ்ரீபாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. ஆட்ட நாயகனாக சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ராயுவும், தொடர் ஆட்ட நாயகனாக அதே கழகத்தைச் சேர்ந்த டனீத்தும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-23)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

தும்பளை கருணையுள்ளம் விண்மீன்நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் 2ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.



அவற்றில், இன்று திங்கட் கிழமை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 14

மன்னார் உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் முதற் தர அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதில் பணங்காட்டு கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் சென். சேவியர் கல்லூரி அணி மோதவுள்ளது. (ற-23)

# சாதனை நாயகனுக்கு அவமரியாதை



சாதனைகள் படைத்த பிரேஸில் அணியின் முன்னாள் அணித் தலைவருக்கு அவமரியாதை ஏற்பட்டது. பிரேஸில் அணிக்காக அதிகமான போட்டிகளில் பங்கேற்றவர் கபு.

1990 முதல் 2006 வரை விளையாடிய இவர், 1994, 1998, 2002 உலக கிண்ணத் தொடர்களின் இறுதிப் போட்டிகளில் விளையாடிய வீரர் என்ற வரலாறு படைத்துள்ளார்.

இத்தனை பெருமை படைத்த ஜாம்பவான் கபு, உலக கிண்ணத் தொடர் அரையிறுதியை காண பெலோ ஹரிஜான்டே வந்தார்.

இப்போட்டியில் பிரேஸில் அணி, ஜேர்மனியிடம் 1-7 எனப் பரிதாபமாக வீழ்ந்தது.

இதையடுத்து, பிரேஸில் வீரர்களை தேற்ற உடைமாற்றும் அறைக்குச் சென்றுள்ளார்.

ஆனால் உடனடியாக அறையை விட்டு வெளியே செல்லுமாறு பிரேஸில் உதைபந்தாட்டக் கூட்டமைப்பின் தலைவர் ஜோஸ் மரியா மரின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கபு கூறுகையில், வீரர்கள் அறைக்குள் முன் பின் அறிந்திராத யாரும் வருவதை, ஜோஸ் மரியா விரும்பவில்லை. ஆனால் நான் வீரர்களுக்கு ஆறுதல் தெரிவிக்கவே சென்றேன். ஏனெனில் 1998 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் தோற்றதால், அதன் வேதனை எங்களுக்குத் தெரியும். உடைமாற்றும் அறையில் இருந்து மோசமான முறையில் வெளியேறியது வியப்பாக உள்ளது என்று தெரிவித்துள்ளார். (த)



# ஆர்ஜென்ரீனா அணிக்கு 7 கோடி ரூபா அபராதம்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ள ஆர்ஜென்ரீனா அணிக்கு இரண்டரைக் கோடி ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச உதைபந்தாட்டச் சங்கத்தின் ஒழுங்கு நடவடிக்கை குழு, இந்த அபராதத் தொகையை விதித்துள்ளது. ஒவ்வொரு போட்டிக்கும் முன்பாகவும் சம்பந்தப்பட்ட அணியைச் சேர்ந்த வீரர்கள் பேட்டி கொடுக்கவேண்டும் என்பது நியதி. போட்டியை எதிர்கொள்ள எப்படி தயாராகுகிறார்கள்? வியூகங்கள் என்ன? உள்ளிட்ட விடயங்களை ரசிகர்களும் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இந்த ஏற்பாட்டை உதைபந்தாட்டச் சங்கம் செய்கிறது. ஆனால் நைஜீரியா, சுவிற்சர்லாந்து, பெல்ஜியம், நெதர்லாந்துக்கு எதிரான ஆட்டங்களுக்கு முன்பாக பேட்டி அளிப்பதற்கு வீரர்களை ஆர்ஜென்ரீனா நிர்வாகம் அனுப்பவில்லை.

அந்த அணியின் பயிற்சியாளர் அலெஜான்ட்ரோ சபெல்லா மட்டுமே செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

இதையடுத்து ஊடக மற்றும் சந்தைப்படுத்தல் விதிமுறைகளை மீறியதற்காக இவ்வளவு பெரிய தொகையை ஆர்ஜென்ரீனாவுக்கு அபராதமாக சர்வதேச உதைபந்தாட்டச் சங்கம் 7 கோடி ரூபா விதித்துள்ளது. (த)

# பிரேஸில் பயிற்சியாளரின் உத்திகள் மீது விமர்சனம்

உதைபந்தாட்ட வரலாற்றில் பிரேஸில் வீரர்கள், ரசிகர்களின் மனதில் ஆறாத வடுவான ஜேர்மனிக்கு எதிரான அரையிறுதித் தோல்விக்குப் பிறகு உத்தியோகபூர்வ பயிற்சியாளர் ஸ்கொலாரி செய்ததாக சில தவறுகள் இப்போது அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஆட்டம் தொடங்க 6 மணி நேரம் இருந்தபோது ஸ்கொலாரி அணித் தேர்வில் மாற்றங்கள் செய்துள்ளார் மற்றும் உத்திகளையும் மாற்றியுள்ளார்.


ஜேர்மனியின் பலமான நடுக்கள வீரர்களான பாஸ்டியன் ஷ்வெய்ன்ஸ்டெய்ஜர், சமி கெடிரா, மற்றும் டொனி குரூஸ் ஆகியோரைக் கவிழ்க்க, பிரேஸில் அணியில் லூயி குஸ்தாவோ, பெர்னாண்டினோ, பாலினியோ ஆகியோர் தயார் செய்யப்பட்டிருந்தனர். ஆனால் கடைசி நேரத்தில் பாலினியோவை விடுத்து பேர்னாட் என்ற ஒரு வீரரை அனுப்பினார் ஸ்கொலாரி.


பேர்னாட்டை சேர்க்கும் திட்டம் முதலில் இல்லை. மேலும் திடீரென பாலினியோவை இறக்காததும் அதிர்ச்சியளிக்கத் திணறி வரும் பிரெட்டை களமிறக்கியதும் வீரர்கள் மத்தியில் அதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் உறுதியான பிரேஸில் வீரர் தியாகோ சில்வா இடத்தில் தாந்தே என்ற வீரரை இறக்கியதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. காரணம், அவர் உலகக் கிண்ணத்துக்கு முன்னதாக 3 மாதங்களாக கழகங்களுக்கோ, பிரேஸிலுக்கோ எந்த ஆட்டத்திலும் ஆடவில்லை. டேவிட் லூயிஸை அணித் தலைவராக்கியதை சிலர் விமர்சிக்க, களத்தில் அவர் அவ்வளவாக சௌகரியமாக உணராத பகுதியில் நிறுத்தப்பட்டார். தடுப்பணையின் மையத்தில் இடது புறம் அவர் தடுப்புப் பணியில் ஈடுபட்டிருந்தார். இது அவருக்குப் பழக்கமில்லாத ஒரு பகுதி என்று தற்போது கூறப்படுகிறது.

எல்லாவற்றையும் விட பேர்னாடைக் களமிறக்கியது பெரும் தவறு என்றே நிபுணர்கள் கருதுகின்றனர்.

சாக்குப் போக்கான காரணங்களைக் கூறி ஸ்கொலாரியை பலிக்கடாவாக்கி வெளியேற்ற முயற்சிகள் நடப்பதாகவும் சில தரப்பினர் வாதிடுகின்றனர். (த)





# நெய்மாரின் முதுகெலும்பை முறித்தவருக்கு பாதுகாப்பு

நெய்மரை காயப்படுத்திய கொலம்பிய வீரருக்கு தொடர்ந்து கொலை மிரட்டல் வந்த நிலையில் அவருக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காலிறுதி ஆட்டத்தில் பிரேஸில், கொலம்பியா அணிகள் மோதின. இந்த போட்டியின் போது பிரேஸில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மரின் முதுகில் கொலம்பியா வீரர் ஜுனிகா முழங்காலால் இடித்து தள்ளியதில் அவரது முதுகெலும்பு முறிந்தது. அதைத் தொடர்ந்து நெய்மர் உலகக்கிண்ண போட்டியில் இருந்து விலகியதால் பிரேஸில் அணியின் கிண்ணக் கனவும் கலைந்து போனது.

இந்த நிலையில் நெய்மரின் காயத்துக்கு காரணமான ஜுனிகாவுக்கு ரசிகர்களிடம் இருந்து மிரட்டல் வந்த வண்ணம் உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதைத் தொடர்ந்து ஜுனிகாவுக்கு சிறப்பு பாதுகாப்பு அளிக்க கொலம்பியா உதைபந்தாட்டச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (த)

# இத்தாலி வீரரின் தோள்பட்டையில் கடித்தவருக்கு கிடைத்த அதிர்ஷ்டம்



லிவர்பூல் அணியில் விளையாடி வந்த லூயிஸ் சுவரேஸ் பார்சிலோனா அணிக்காக விளையாடவுள்ளார்,

5 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் விளையாடுவதற்காக 75 மில்லியன் பவுண்ஸ் வழங்கப்பட்டுள்ளது.

லிவர்பூல் அணிக்காக விளையாடி வந்த சுவாரேசை, பார்சிலோனா அணி 75 மில்லியன் பவுண்ஸ் கொடுத்து வாங்கியுள்ளது. இதனை லிவர்பூல் உறுதி செய்துள்ளது.

இது குறித்து சுவாரேஸ் கூறும்போது,

கனத்த இதயத்துடன் லிவர்பூல் அணியில் இருந்து வெளியேறுகிறேன். ஸ்பெயினில் புது வாழ்க்கை, புதிய சவால் காத்திருக்கிறது.

என் மீதும் என் குடும்பத்தினர் மீதும் லிவர்பூல் மற்றும் இந்த நகர மக்கள் மற்றும் ரசிகர்கள் வைத்துள்ள அன்பை எப்போதும் மறக்கமாட்டேன் என்றார். (த)

# உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம் ஜீலை 14

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல் இரவு ஆட்டங்களாக நடைபெற்று வருகின்றன.

அவற்றில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணிக்கும் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா 2 கோல்களைக் பெற்றதையடுத்து ஆட்டம் சம நிலையில் முடிந்தது. (ற-23)

## மரண அறிவித்தல்



### கந்தையா இராசரத்தினம் (பெற்றோல்)

புன்னாலைக் கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் நேற்று(13.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- நல்லம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்- செல்லம்மா தம்பதியரின் மருமகனும், விக்டோரியாராணியின் அன்புக் கணவரும், விஷ்ணுறஞ்சன், விஷ்ணுகரன் (கனடா), விஷ்ணுகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகிர்தா, பிரதீபா ஆகியோரின் மாமனாரும், லக்சனாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக ஈவினை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். T.P. 0776873036, 0779116415

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### இலட்சுமணன் தேவராசா (தேவன்)

*(காங்கேசன்துறை சீமேந்துக் கூட்டுத்தாபன பாதுகாப்பு சார்ஜன்ட்)*

கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் V.M Road பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சு மணன் தேவராசா (தேவன்) நேற்று (13.07.2014) ஞாயிற் றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலட்சுமணன்- சின்னம்மா தம்பதிய ரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான மயில்வாகனம்- நல்லம்மாவின் அன்பு மருமகனும்.மகாலக்ஷ்மியின் (குடும்பநல உத்தியோகத்தர்), அன்புக் கணவரும், துவாரகனின் (பழைய உயர்தர மாணவன் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் - விஞ்ஞானப் பிரிவு), பாசமிகு தந்தையும், பாலசுப் பிரமணியம், நாகேஸ்வரி, காலஞ்சென்ற சிவராமலிங்கம், மற்றும் வள்ளி யம்மை, சரஸ்வதி (முன்பள்ளி ஆசிரியர்), கமலாதேவி (ஆசிரிய ஆலோசகர் கிளி.வலயம்).புவனேஸ்வரி (ஆசிரியர் யா/செங்குந்தா கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரி, நாகலிங்கம், தேவதாசன், வன்னியசிங்கம், குகானந்தராசா (அதிபர், கிளி/ கனகபுரம் ம.வி.), கணேசலிங்கம் (RDA- யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சிதம்பரநாதன் (மாவட்ட நீதிமன்ற முதலியார், பருத்தித்துறை), பாலச்சந்திரன், இராமச்சந்திரன், (வைத்தியர்- குருநாகல்) , மாயசந்திரன், பிறேமச்சந்திரன், சுபேரச்சந்திரன், குமரச்சந்திரன், ஜெயச்சந்திரன், ஹரிச்சந்திரன் (MAகொழும்பு சீமெந்து கூட்டுத்தாபனம்), அன்னலட்சுமி, தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற நாகலிங்கம், மணிவண்ணன் ஆகியோரின் சகலரும், உருத்திரபூபதி, கிருஷ்ணலீலா, தவமணி, றஞ்சனா, நில்கா, காமாட்சி, நந்தசீலி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நர்த்தகி (பல்கலைக்கழகம்), சங்கீதா (Trainee EA Galgamuwo), கௌசல்யா, (உயர்தர மாணவி), மகிந்தன் (தனியார் பஸ் சாரதி), கஜந்தன் (சாரதி- மீன்பிடிப்பு போக்குவரத்து அமைச்சு, மாகாண சபை), தனஞ்சன், மாலினி ஆகியோரின் சித்தப்பாவும்,சாம்பவி, (உள்ளக பயிற்சி ஆசிரியர் யா/இந்து மகளிர் கல்லூரி), பிரியங்கா (நுண்கலைப்பீட மாணவி), மாதங்கி (உயர்தர மாணவி), லக்சிகரன் (மாணவன்) , சியாமினி,அருந்ததி, றுசாந்தன், விருத்திகா, சங்கீர்த்தன், சோபனா, கிருஷ்ண பிரசாத், காஞ்சனா, அருண் பிரசாத், தேனுரோஜன், தேனுவா[illegible]ன், நிஜா, சுபாஜினி, றஜீ,சுபத்திரா, முகுந்தன் (வைத்தியர்- நியூசிலாந்து) ஆகியோ[illegible] மாமனாரும், விஷ்னுசரன், அட்சரன், கஸ்மீரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவி[illegible]தவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்[illegible]

இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள் அனை[illegible]ம் ஏற்றுக்[illegible]கொள் ளவும்.

V.M றோட்,
பருத்தித்துறை

தகவல்:
தே.மகாலக்ஷ்மி(மனைவி)
தே.துவாரகன் (மகன்)
077 2793136

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் இராசரத்தினம்

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் விளானை களபூமி காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இராசரத்தினம் நேற்று (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், விளானை களபூமி காரைநகரைச் சேர்ந்த காலஞ் சென்ற வர்களான முத்துக்குமாரு- கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானசௌந்தரயம்மாவின் அன் புக் கணவரும், தவரஞ்சனா, சத்தியசீலன் (கனடா), நிரஞ்சனா (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், இலட்சுமணன் (ஆசிரியர்,யாழ். இந்துக் கல்லூரி), உமா (கனடா), சிறிகாந்த (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,லவன் (3 ஆம் ஆண்டு பொறியியல் பீடம்,பேராதனை பல்கலைக்கழகம்), கௌசியன், ஆருரன், மகிழினி (கனடா), ராகுலன் (கனடா), சுபிட்சா (கனடா),சாரங்கி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், தனலட்சுமி (இந்தியா), இராசகுமாரி (இந்தியா), கதிரமலைராசா (குஞ்சுக்கிளி- கனடா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (17.07.2014) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

442,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாண[illegible].
077 3144866 ,021 222 502[illegible]

தகவல்:
சு. இலட்சுமணன்

## ஓய்வு பெறுகிறார் சைமன் காடிச்



ஆஸ்திரேலிய அணியின் ஆரம்ப வீரர் சைமன் காடிச் '20/20' ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

38 வயதான சைமன் காடிச், 2010ஆம் ஆண்டுக்கு பின் சர்வதேச ஆட்டங்களில் விளை யாட முடியவில்லை. உள்ளூர் ஆட்டங்களில் மட்டுமே பங்கேற்றார்.

இதுவரை இவர் 56 டெஸ்ட்(4188 ஓட்டங்கள்), 45 ஒருநாள் (1324ஓட்டங்கள்), 118 '20/20' (2483ஓட்டங்கள்) ஆட்டங்களில் விளையாடி உள்ளார்.

இந்த நிலையில் அவர் '20/20' ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார். இதுகுறித்து காடிச் கூறுகை யில்,

"ஒட்டுமொத்த 20/20 போட்டிகளில் இருந்து விடை பெறுவது கடினமான முடிவு. கடந்த 2012ஆம் ஆண்டு முதல் தர போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற போது எப்படி இருந்ததோ அதேபோல தற்போதும் இருக்கிறது. இருப் பினும் எனது கிரிக்கெட் வாழ்க்கையை வெற்றியுடன் முடிப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இனிவரும் நாள்களை எனது குடும்பத்தி னருடன் கழிக்க முடிவு செய்துள்ளேன்" என்று தெரிவித்துள்ளார்.

கடந்த பிக் பாஷ் '20/20'யில் இவரது தலை மையிலான பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி சம்பி யன் பட்டம் வென்றிருந்தது. (ற)

## றொனால்டோ தான் சிறந்த வீரர்: குளோஸ் புகழாரம்



பிரேஸில் அணியின் வீரர் றொனால்டோ தான் இன்னும் சிறந்த வீரராக இருக்கிறார் என்று புகழாரம் சூட்டியுள்ளார் ஜேர்மனி வீரர் மிரோஸ்லாவ் குளோஸ்.

உலகக் கிண்ணத்தில் அதிக கோல்கள் அடித்த வீரரின் பட்டியலில் றொனால்டோ முதலிடத்தில் இருந்தார். ஆனால் அவரது சாதனையை ஜேர்மனி வீரர் குளோஸ் முறியடித்துள்ளார். அது மட்டுமல்லாது 4 உலகக் கிண்ணத்தில் பங்கேற்ற வீரர் என்ற பெருமையையும் பெற்றார். இவர் 136 ஆட்டங்களில் விளையாடி 71 கோல்கள் அடித்துள்ளார்.


இந்த சாதனை பற்றி குளோஸ் கூறுகையில், "றொனால்டோ சிறந்த வீரராக இருக்கிறார். அவரை விட கலக்கலான வீரர் இன்னும் வரவில்லை. என்னைப் பொறுத்த வரையில் அவர் ஒரு முழுமையான உதைபந்தாட்ட வீரர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## வேலையாள் தேவை

பாம் ஒன்றில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு ஆள் தேவை.

தொடர்பு: 021 7912997

## ஆச்சார்ய அபிஷேக அருளாசி வாழ்த்துகள்



14.07.2014 அன்று பொலி கண்டி வைரவசுவாமி ஆல யத்தில் குருவாக ஆச்சார்ய அபிஷேகம் பெறுபவராகிய

**சிவஸ்ரீ சண்முக சத்தியேந்திராக்குருக்கள்**

அவர்களை குருத்துவப்பணி மேலோங்கி சிறப்புடன் வாழ கந்தவனப் பெருமா னையும் பத்திரகாளி அம் பாளையும் பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

பிரதமகுரு
சிவப்பிரம்மஸ்ரீ ச. வைத்தியநாதக்குருக்கள்
(துரை ஐயா குடும்பத்தினர்)
கந்தவனம் தேவஸ்தானம்
பத்திரகாளி தேவஸ்தானம்

## மரண அறிவித்தல்



### இளையவி சுப்பிமணியம்

கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளையவி சுப்பிரமணியம் நேற்று (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவி -சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் தவமணிதேவியின் அன்புக் கணவரும், சுமதி, ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரகுமார், அருணோதயன் ஆகியோரின் மாமனாரும்,சங்கவியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1211 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
சுமதி (மகள்)

## மரண அறிவித்தல்



### திருமதி றெஜினா கனகம்மா பரம்சோதி

(ஓய்வுநிலை யாழ். போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தரும் பரிஜின் டிசைன் குறூப் உரிமையாளரும்)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் இல.100 அம்மன் வீதி,திருநெல்வேலி மேற்கை வசிப்பிடமா கவும் கொண்ட திருமதி றெஜினா கனகம்மா பரம்சோதி நேற்று (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தை- தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆசைமுத்து, ராஜா, நல்லம்மா, சின்னத்தம்பி, சின்னப்பு, கியூபேட், இராஜ துரை,பூமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற நாகலிங்கம் பரம்சோதியின் மனைவியும், மனோகரதாஸ் (பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்,மருத்துவ்பீடம் யாழ். பல்கலைக்கழகம், மற்றும் வருகை நிலை விரிவுரையாளர் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி கொக்குவில்) அவர்களின் பாசமிகு தாயாரும், திருமதி ஸ்ரீசாந்தினி (ஆசிரியை.யாழ். மத்திய கல்லூரி)யின்.அன்பு மாமியாரும், தர்மதா (University Of Wolverhampton- Student), நர்மதா (மாணவி- யாழ். இந்து மகளிர் கல்லூரி A/L 2015),மிதுன்பரிசித் (மாணவன், யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி), மேருஜன் பரதன் (மாணவன், யாழ்.மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2014) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 100 அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்: பரம்சோதி
மனோகரதாஸ் (மகன்)

PAREGIN
DESIGN GROUP

## குளங்களை புனரமைக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சி மாவட்டத்தில் மலையாளபுரம், பாரதிபுரம்; கிருஷ்ணபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள சிறு குளங்களைப் புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள சிறு குளங்களின் கீழ் தற்போது 180 ஏக்கர் வரையிலான நிலம் உள்ளது. இதில் வருடாந்தம் காலபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் குறித்த குளங்களைப் புனரமைப்பதன் மூலம் இவற்றின் கீழான பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகள் நன்மையடைய முடியும் எனவும், இதைவிட செய்கைப் பண்ணக்கூடிய நிலங்களையும் பயிர்ச்செய்கைகளுக்கு உட்படுத்தி பல குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் எனவும் கிராம மட்ட அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (க-55)

# சிறப்பான வகையில் இயங்கும் அல்வாய் கடனுதவுச் சங்கம்

## புதிய தலைவர் பெருமிதம்

வடமராட்சி, ஜூலை 14

யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களில் எமது சங்கமே மிகக் கூடுதலான சேமத் தொகையையும், கூடுதலான அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது. இந்தச் சங்கத்தைத் தொடர்ந்தும் வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் செல்ல அங்கத்தவர்கள் ஒத்துழைத்து உறுதுணை வழங்க வேண்டும்.

இவ்வாறு அல்வாய் வடக்கு, நக்கீரன் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட கூட்டுறவாளர் மு.நவநீதன் தெரிவித்தார்.

இந்தச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் குச்சம் ஞான வைரவர் ஆலயத்துக்கு அருகில் உள்ள மண்டபத்தில் வ.சர்வேஸ்வரன் தலைமையில் யாழ். பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.தயாளன், யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் செ.இலகுநாதன், சமாச இயக்குநர் சபை உறுப்பினர் கோ.குணசிங்கம் ஆகிய சிறப்பு விருந்தினர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் புதிய தலைவராகத் தெரிவான மு.நவநீதன் மேலும் பேசுகையில்; இருநூறுக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களை, குறிப்பாக அதிக எண்ணிக்கையான அங்கத்தவர்களைக் கொண்ட எமது சங்கம் அதிக இலாபத்தைப் பெற்று அதி கூடுதலான தொகையை அங்கத்தவர்களுக்கு கடனாக வழங்கி வருகின்றது. இதன் மூலமாக எமது அங்கத்தவர்கள் வாழ்வாதார உதவிகளைப் பெற்று வருகின்றனர்.

அத்துடன் எமது சங்கம் நக்கீரன் முன்பள்ளியையும் நிர்வகித்து வருகின்றது. இது தவிர அங்கத்தவர் ஒருவர் மரணமடைந்தால் அவரின் குடும்பத்துக்கு தலா 5 ஆயிரம் ரூபா சகாய நிதியாக வழங்குகின்றது- என்றார்.

நிகழ்வில் கல்விச் சாதனையாளர்கள், மூத்த அங்கத்தவர்கள் ஆகியோருடன் கடந்த ஆண்டு கலாபூஷணம் விருது பெற்ற ந.இராமநாதனும் கௌரவிக்கப்பட்டார்.

புதிய நிர்வாக சபைத் தெரிவில் கூட்டுறவாளர் மு.நவநீதன் தலைவராகவும், அ.அகிலன் உபதலைவராகவும், ந.கிருஷா செயலாளராகவும், ந.மாதுரி பொருளாளராகவும், வி.தர்சினி, வ.சர்வேஸ்வரன், ரா.தனுஷா ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் ஏகமனதாகத் தெரிவாகினார்கள். (க-173)

## நெஞ்சக் கதவைக் கொஞ்சம்........

### வாழவிடா வரலாற்றுத் தவறுகள்

வறுமையில் நலிந்திருக்கும் மக்கள் மலிந்திருக்கும் மீன் பாடும் கிழக்குச் சீமையில் மாதாந்தம் 200 மில்லியன் ரூபாவுக்கு மேலாக மதுபானம் விற்பனையாகிறது என்ற தகவலை மேவி நிற்கிறது "வேறு மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரங்களும்கூட அந்த மண்ணில் கால் பதிக்க முயல்கின்றன" எனும் தகவல். இந்த மாவட்டத்தின் வறுமை நிலைக்கு மதுவும் ஒரு காரணியாகும் என்பதை ஏற்றுக் கொள்ளாதவர், "ஓர் இனத்தை அழிப்பதற்கு ஆயுதங்களும் கருவிகளும்தான் தேவை என்றிட முடியாது" என்பதையும் ஏற்றுக் கொள்ளமாட்டார். பட்ட காலில்தான் படுமாம்.

தண்ணி, புகை பாவிக்காத மாப்பிள்ளைகளுக்கு தனிமதிப்பு இருந்த அந்த நாள்களில் கொழும்புத்துறையில் ஒரு சாராயக் குதமும், யாழ்.பிரதம தபாற்கந்தோரின் வலப்பக்கமாக அதன் விற்பனை நிலையமும் இருந்தன. தினமும் கபில நிறப் போத்தல் சாராயமும் மாதத்தின் முதலாம் திகதி வெள்ளைப் போத்தல் சாராயமும் விற்பனை செய்யப்பட்டன. கிராமங்களில் இலையான் கலைக்கும் தேநீர்க் கடைகளிலும், கொஞ்சம் சண்டித்தனப் போக்கானவர் வீடுகளிலும் கள்ளச் சாராயம் விற்றே சீவியம் நடந்தது. அந்த அளவுக்கு சட்டக் கட்டுப்பாடுகள் மதுபானக் கடைகளை மட்டுப்படுத்துவதில் இறுக்கமாக இருந்தன.

இங்கு சில விளையாட்டுப் போட்டிகளில் இளைஞர்களுக்கு பரிசுப் பொருளாக வழங்கப்பட்டும், சிலரது மங்கல நிகழ்வுகளையொட்டி கண்டும் காணாததுபோல் பரிமாறியும் மது பாவனைக்கு சமூக அந்தஸ்தைப் பெற ஒத்திகை பார்க்கப்படுகிறது. 20 கோடி ரூபாவுக்கு மதுபானம் விற்பனையாகும் ஒட்டிப்பிறந்த சகோதர மாவட்டத்தின் சாதனையை முறியடிப்பதுபோல் எமது மாவட்டமும் வேதனையைச் சுமப்பதற்குத் தயாராகி வருகிறதா? காலம் எமது ஆளுமையை ஓரம் கட்டிவிட, நாங்கள் காசைக் கரியாக்கவில்லை; காசுதான் எங்களைக் கரியாக்கிக் கொண்டிருக்கிறது. சிந்திக்க மறந்த - மறுத்த இனம் சீரழிந்ததுதான் வரலாறு.

செல்வ வேலாயுதம்

## யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல் - 2014

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின்
பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.
(விண்ணப்பங்களுடன் தகைமை சான்றிதழ்களின்
பிரதியினை இணைத்து அனுப்பிவைக்கவும்)

1. பதவி: அதிபர் (Principal) - ஒப்பந்த அடிப்படை
   - தகைமைகள்:
     - I. டிப்ளோமா (சுதேச மருத்துவம்)
     - II. ஆயுள்வேத பாரம்பரிய பின்னணியினைக் கொண்டிருத்தல்
     - III. ஆயுள்வேத மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்
     - IV. சுதேச மருத்துவக் கல்வி வழங்கலில் முன் அனுபவம் 05 வருடங்கள்
     - V. நோயாளர் கவனிப்பில் முன் அனுபவம் 5 வருடங்கள்
   - **வயது எல்லை** - 28.07.2014 அன்று 30 வயதுக்கு குறையாமல் 60 வயதுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
   - மாதாந்த சம்பளம் ரூபா 21,020/=
2. பதவி: பதிவாளர் (Registrar) - ஒப்பந்த அடிப்படை
   - தகைமைகள்:
     - I. முகாமைத்துவம் தொடர்பான சேவையில் 15 வருடங்கள் முன் அனுபவம்
       அல்லது பட்டதாரியாக இருப்பதுடன் முகாமைத்துவ சேவையில் 05 வருட முன் அனுபவம் இருக்கவேண்டும்.
   - **வயது எல்லை** - 28.07.2014 அன்று 67 வயதுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
   - மாதாந்த சம்பளம் ரூபா 17,460/=
3. பதவி: வருகை தரு போதனாசிரியர் (Instructor)- ஒப்பந்த அடிப்படை
   - தகைமைகள்:
     - I. பட்டதாரி அல்லது டிப்ளோமா (சுதேச மருத்துவம்)
     - II. ஆயுள்வேத பாரம்பரிய பின்னணியினைக் கொண்டிருத்தல்
     - III. ஆயுள்வேத மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்
   - **வயது எல்லை** - 28.07.2014 அன்று 30 வயதுக்கு குறையாமல் இருக்கவேண்டும்.
   - மாதாந்த சம்பளம் ரூபா 15,800/=

ஆயுள்வேத பாரம்பரிய பின்னணியினைக் கொண்டிருத்தல் என்பதனை அந்தப் பிரிவு ஆயுள்வேத பாதுகாப்பு சபையினாலும், குறித்த பிரதேச ஆயுள்வேத சமூக மருத்துவ உத்தியோகத்தரினாலும் இல்லாதவிடத்து குறித்த பிரதேச அரச ஆயுள்வேத வைத்தியசாலையின் மருத்துவப் பொறுப்பதிகாரியினால் உறுதிப்படுத்தவேண்டும்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை 28.07.2014 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பிரிவு கிராம சேவை உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் - 2014"** எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**விண்ணப்பம் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**
தலைவர்,
வட இலங்கை சுதேச மருத்துவ சபை,
லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி,
மின்சார நிலைய வீதி,
சுன்னாகம்.

(49661) (45.6)

## சமய சந்நிதி

அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன்னை ஆலயத்தின் திருவிழா நாளை மறுதினம் 16ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

◆ ◆ ◆

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சந்தண முதலிச்சிபுலம் முருகமூர்த்தி ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 25 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (க-9)

◆ ◆ ◆

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி ஸ்ரீ துர்க்கை அம்பாள் ஆலய பெருந் திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 24 ஆம் திகதி இரவு சப்பறத் திருவிழாவும், 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-9)

## தொங்கிய நிலையில் சடலம்

இரவு படுக்கைக்குச் சென்றவர் காலையில் வீட்டுக்கு முன்னாள் உள்ள மாமரத்தில் தொங்கிய நிலையில் சடலமாககாணப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த பத்மநாதன் ஏகாந்தரூபன் (வயது-43) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (க-9)

## குடிதண்ணீருக்கு அலையும் மக்கள்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியில் வசிக்கும் 64 குடும்பங்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன. சிவநகர் கிராம அலுவலர் பிரிவில் தற்போது 428 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்த நிலையில் ஆனந்தபுரம் செபஸ்தியார் ஆலயத்தை அண்மித்த பகுதிகளில் கடல் நீர் உட்புகுந்து உவர்த்தன்மை காணப்படுவதால் நன்னீர் கிணறுகள் உவரடைந்துள்ளன. இதனால் இந்தப் பகுதியை அண்டிய பகுதிகளில் வாழும் சுமார் 64 குடும்பங்கள் தற்போது குடிதண்ணீரைப் பெறுவதில் பெருமளவு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன. இந்தக் குடும்பங்கள் சிவநகர் கிருஷ்ணர் ஆலயத்தை அண்மித்த பகுதியிலும் இரணைப்பாலையை அண்மித்த பகுதிகளிலும் தமக்கான குடிதண்ணீரைப் பெறவேண்டியுள்ளது. (க-55)

## பணியாளர்கள் தேவை

- சாட்டட் எக்கவுண்டன் (கணக்காளர்)
- எக்கவுண்ட் கிளாக்
- எழுதுவினைஞர்

மேற்குறித்த பதவிகளுக்கு
வெற்றிடமுண்டு.
30 யூலை 2014 ஆம் திகதிக்கு
முன்பாக தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: பிள்ளையார் அரிசி ஆலை,
பிறைவேற் லிமிட்டெட்,
யோகபுரம், மல்லாவி,
077 954 9582, 021 206 0708

(41318) (4.5.6.)

## இடமாற்றத்தை முன்னிட்டு.....

யாழ். நகரம் காணாத மிக மிக மலிவு விற்பனை!
இருப்பகற்றலை முன்னிட்டு சில தினங்கள் மட்டுமே



- பட்டு சாறிகள் - 2250/=
- சல்வார் - 800/=
- இந்தியன் ஸ்கேட் - 300/=
- இந்தியன் ரொப் - 750/=
- சேட் - 250/=
- ஜீன்ஸ் - 650/=

மேலும் அனைத்து ஆடைகள் மற்றும்
பான்சி பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு
பொருள்கள் அனைத்தும் குறித்த விலையிலிருந்து
பாதி விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 221 9393

(24991)(10.6.3)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டமளிப்பு நேற்று



களுவாஞ்சிக்குடி, ஜூலை 14
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது வெளிவாரிப் பட்டங்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வு காலை ஒன்பது மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரையும் நல்லையா மண்டபத்தில் இரண்டு அமர்வுகளாக நடை பெற்றுள்ளது.

முதலாவது அமர்வில் 225 கலைமாணிப் பட்டங்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இரண்டாவது அமர்வில் 203 கலைமாணிப் பட்டங்களும் 5 நிர்வாக மாணிப் பட்டங்களும், ஒரு விஞ்ஞானமாணிப் பட்டமும், திருகோணமலை வளாகத்திலிருந்து ஒரு விஞ்ஞான முகாமைத்துவமாணிப்பட்டமும் வழங்கப்பட்டன.

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் உயர்கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் பி.ரனேபுர பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். (ற)



# பாடசாலை மாணவருக்கு பயன் தரும் பழ மரங்கள்

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் வழங்கியது

கொழும்பு, ஜூலை 14
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் புவி வெப்ப மயமாதலைக் குறைக்கும் செயற்பாட்டின் கீழ் அதன் மட்டக்களப்புக் கிளை தெரிவு செய்யப்பட்ட 5 பாடசாலைகளுக்கு பயன்தரும் நல்லின பழமரக் கன்றுகளை வழங்கியது. இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட காந்திபுரம் கலைமகள் வித்தியாலயம், தும்பங்கேணி கண்ணகி வித்தியாலயம், களுமுந்தன்வெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, திக்கோடை கணேசா வித்தியாலயம், மண்டூர்-40 அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு ஒவ்வொரு பாடசாலைக்கும் 10 பழ மரக் கன்றுகள் வீதம் 50 பழ மரக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்போது பாடசாலை மாணவர்களுக்கு சூழலைப் பாதுகாக்கும் துண்டுப்பிரசுரங்களும், மரங்களின் பயன்கள் தொடர்பான சுவரொட்டிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் நிறைவேற்று உத்தியோகஸ்தர் வி.பிறேமகுமார், முதலுதவி இணைப்பாளர் சீ.கஜேந்திரன் உட்பட போரதீவுப்பற்று பிரிவுத்தொண்டர்களும் கலந்து கொண்டனர். (ற)


**நவாலி அட்டகிரி கந்தசாமி தேவஸ்தானம்**
**பூங்காவனத் திருவிழா - 2014**

இன்று திங்கட்கிழமை (14.07.2014) காலை 9 மணிக்கு அபிஷேகமும் தொடர்ந்து பூசை வழிபாடும். பிற்பகல் 4.00 மணிக்கு பூங்காவனத்திருவிழா ஆரம்பமாகும்.

பின் வள்ளி திருமணமும் தொடர்ந்து சுவாமி வீதி உலா (விசேட தவில்- நாதஸ்வர இசையுடன்) இடம்பெறும்.

**இன்றைய விசேட நிகழ்வாக இரவு 7.00 மணிக்கு தவில் - நாதஸ்வர இசை மழை நிகழும்**

நாதஸ்வரம்
* அளவையூர் கலாபூசணம் M.B பாலகிருஸ்ணன் - நாதஸ்வரமேதை
* தொல்புரம் - R. சிவகுமார் - நாதஸ்வர இளவரசன்
* ஈழநல்லூர் -P.S. பாலமுருகன் -நாதகான வினோதன்
* இந்திய - பெங்களூர் -B.S ரமேஷ்பாபு - நாதகோகிலம்

தவில்
* இந்தியா கோவிலூர் கலைமாமணி - கே.ஜி.கலியாணசுந்தரம் - காஞ்சிகாமகோடி ஆஸ்தான வித்துவான்.
* யாழ்-என்.நந்தகுமார் - நாத இளவல்
* ஈழநல்லூர் P.S செந்தில் - லயநாதபாலன்
* தொண்டமானாறு எஸ்.துளசிகரன் - தவில் இளவல்

சிறப்பு நிகழ்ச்சியாக சக்ஷபோன் (Sakksa Pone) கான மழை முதன்முறையாக நவாலி மண்ணில் தென்னிந்திய சிறப்பு கலைஞர்கள் வழங்கும் இசை நிகழ்வு

சக்ஷபோன் கான மழையில்:-
இந்திய ஜி.கே. ஜெயராம - நாதகலா சக்ஷபோன்
P.G. சிவராஜ்

**கிராபிக்ஸ் - அனிமேஷன் - மல்டிமீடியா**
Graphics
Animation
Multimedia
Web Design
Special Effects
3D Max, MAYA
Media Technology
July 19th & 20th
(Sat & Sunday)
CSC ASIAN COMPUTER EDUCATION
2G, ஸ்ரான்லி வீதி,
T.P : 021-222 5677

**தவறிவிட்டது**
ஏ9 வீதியில் இருந்து மிருசுவில் ஊடாக வரணி சென்ற வேளையில் மணிப் பர்ஸுடன் முக்கிய ஆவணங்கள் தவறிவிட்டன.
தொடர்பு: 077 714 4175 (41320)(4.8.3)

**கருத்தரங்கு**
க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான தேசிய ஊடகமான அறிவுத்தேடல் சஞ்சிகையின் இதழாசிரியர் பா.பானுசந்தரால் யாழ் மாணவர்களுக்கான வணிகக்கல்விக் கருத்தரங்கு நாளை (15.07.2014) இடம்பெறவுள்ளது.
சிங்கள மொழியில் இருந்து மொழி பெயர்க்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்படும்.
அனுமதி மட்டுப்படுத்தப்பட்டது.
உங்கள் பதிவுகளுக்கு இதழாசிரியரின் 071 949 4227 என்ற எண்ணை அழையுங்கள்.

**வாடகைக்குண்டு**
காரியாலய இடவசதி உண்டு.
சுன்னாகம்(K.K.S ROAD) நூல் நிலையத்திற்கு அருகில் புதிய PETROL செற்றுக்கு முன்பாக (WITH ATTACH BATH ROOM) MOBILE OUTLETS & TUTION CENTRE இற்கும் உகந்தது.
தொடர்பு: 077 941 9341

**துயருறுகின்றோம்**
எமது வித்தியாலயத்தின் அதிபர்
திருமதி கமலாசனி யோகநாதன் அவர்களின்
அன்பு மாமியார்
**வனதலட்சுமி பத்மநாதன்**
அவர்களின் மறைவால் துயருறுகின்றோம்
உளமுருகி உமை நினைக்கின்றோம்
உள்ளவரை எமக்காக வாழ்ந்தவரே
மனைசிறக்க வாழ்ந்த மகாலக்சுமியே
மண்வாழ்வை முடித்தாயோ மறையாது கவலை.
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
பாடசாலைச் சமூகம்
யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் மீசாலை
(43687) (7.6.3)



**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**
**கூறுவிலை கோரல்**
எமது சங்கத்தின் ஹை-ஏஸ் வாகனத்தில் கீழ்வரும் திருத்த வேலைகள் மேற்கொள்ள இருப்பதால், திருத்துநர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.
1. ரிங்கர் வேலை
2. பெயின்ரிங் வேலை
3. வயறிங் வேலை
4. சீற்/கவட் திருத்த வேலை
5. மூன்று பழைய கதவுகளுக்குப் பதிலாக புதிய கதவுகள் மாற்றுதல்
6. பவர் (Buffer) மாற்றுதல்
குறித்த வாகனத்தை சங்க அலுவலகத்தில் 15.07.2014 - 22.07.2014 வரை பி.ப. 3.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை பார்வையிட்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/14990) (7.6.3)
தி.செல்வமனோகரன்
செயலாளர்.

**காணி விற்பனைக்கு**
யாழ்.மாநகரசபைக்குட்பட்ட எல்லையில் பூநாறி மரத்தடிச்சந்தி, செல்வமஹாலுக்கு அருகில் 1½ பரப்பளவு காணி விற்பனைக்குண்டு.
(49967) (12.3.6) தொடர்பு:077 078 4453

**அறைகள் வாடகைக்கு**
கொழும்புத்துறை, 28. விபுலானந்தர் வீதியில் உள்ள வீட்டில் அறைகள் வாடகைக்குண்டு.
மாணவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், வங்கி அலுவலர்கள் விரும்பத்தக்கது.
யாழ்.கச்சேரி, சென் ஜோன்ஸ், சுண்டுக்குளி, தொழில்நுட்பக் கல்லூரிக்கு அண்மையானது.
தொடர்பு: (49968) (12.3.6)
072 605 1078/021 492 5202



**Opening Ceremony**
**14 July 2014**
அன்புடையீர்,
நாம் புதிதாக ஸ்தாபித்துள்ள
Lava Hospitals
Unique Dental Care
(No.561 Palaly Road Thirunelvely)
(பரமேஸ்வரா சந்திக்கு அருகில்)
ஆனித் திங்கள் 30 ஆம் நாள்
(2014 July 14ஆம் திகதி திங்கட்கிழமை)
காலை 9.15 முதல் 10.40 வரையுள்ள சுபநேரத்தில்
Dr. V.Sutharshan (Vs) MBBS (Col) Ms (Col) MRCS (UK)
PGC in medical Education (UK) Consultant Surgeon TH.Jaffna.
அவர்களால் வைபவ ரீதியாக
திறந்துவைக்கப்படும்
இந் நிகழ்வில் அனைவரையும்
கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.
**Lava Hospitals**
**UNIQUE DENTAL CARE**
**பற்சிகிச்சை நிலையம்**
561, Palaly Road. Thirunelvely, Jaffna.
0094 2122 12599

**கடை வாடகைக்கு**
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் நியூ மார்க்கற்றுக்கு முன்னால் எல்லா விதமான வியாபாரத்திற்கும் ஏற்ற கடை வாடகைக்கு உண்டு. (சி/14989) (7.6.3)
தொடர்பு: 077 467 0284

**விற்பனைக்கு**
தலை முள் அகற்றப்பட்டு, சுகாதார முறைப்படி, உப்புக்குறைந்த, காயவிடப்பட்ட வெளி நாடுகளுக்கான கட்டா ஊர்க் கருவாடு விற்பனைக்குண்டு.
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
பெ.செபஸ்ரியன்,
சில்லாலை கிழக்கு, பண்டத்தரிப்பு.
(49966) (12.3.6) தொடர்பு:077 256 7072

# ஊவாவிலும் அரசுக்கு மக்கள் சிவப்பு எச்சரிக்கை காண்பிப்பர்

## ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 14

மேல் மற்றும் தென்மாகாண சபைத் தேர்தலின்போது தெற்கு மக்கள் அரசுக்கு சிவப்பு எச்சரிக் கையை விடுத்தனர். எனவே, ஊவா மாகாணத்தில் வாழும் மக்கள் இதை விட அபாயகரமானதொரு எச்சரிக்கையை வாக்குரிமை மூலம் அரசுக்கு விடுப்பார்கள் என நம்புகின்றோம் என்று தெரிவித்துள்ளது ஜே.வி.பி.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் பெலவத்தையிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. அதன்போது ஊவா மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

" நாட்டில் அடுத்து நடைபெறவுள்ள தேசிய தேர்தலை நிர்ணயிப்பதற்குரிய முன்னாயத்த நடவடிக்கையாகவே ஊவா மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுகின்றது. 2009 இல் ஊவா தேர்தல் நடத்தப்பட்ட பின்னரே அவசரமாக ஜனாதிபதித் தேர்தலும் நடத்தப்பட்டது. இதனால், இந்த தேர்தலானது பல வழிகளும் முக்கியத்துவம் பெறுகின்றது.

குறிப்பாக 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது, தனது இரண்டாவது பதவிக்காலத்தின்போது நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக மஹிந்த சிந்தனையூடாக மக்களுக்கு ஜனாதிபதி உறுதியளித்தார். எனினும், அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

அத்துடன், ஊவா மாகாண மக்களை இன்று வறுமை வாட்டி வதைக்கின்றது. தோட்டப் பகுதி மக்களுக்கு வீட்டுரிமை வழங் கப்படவில்லை. நீர், சுகாதாரம், வீதியென எவ்வித வசதிகளும் தோட்டப் பகுதிகளுக்கு செய்துகொடுக்கப்படவில்லை. இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே அரசு தேர்தலுக்கு சென்றுள்ளது. ஆகவே, மக்கள் அரசு மீது இருக்கும் வெறுப்பை தேர்தலூடாக வெளிப்படுத்துவார்கள் என நம்புகின்றோம்.

ஜே.வி.பியின் சார்பில் பதுளை மாவட்டத்துக்கான வேட்பாளர் குழுவின் தலைமைப்பொறுப்பு சமந்த வித்யாரத்னவுக்கும், மொனராகலை மாவட்டத்துக்குரிய பொறுப்பு ஆர்.எம். ஜயரத்னவுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில் பலமான தொரு வெற்றி ஊவாவில் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது"- என்று தெரிவித்தார். (ற)

# பிரதேசசபை உறுப்பினரின் வழக்கு யாழ். மேல் நீதிமன்றால் தள்ளுபடி

யாழ்ப்பாணம், ஜூலை 14

வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினரால் யாழ். மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட உறுதிகேள் எழுத்தாணை மற்றும் தடை எழுத்தாணை என்பன தகுந்ததாக அமையவில்லை என்பதனால் மேல்நீதிமன்றினால் அவை நிராகரிக்கப்பட்டு தள்ளு படி செய்யப்பட்டது.

யாழ். மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை கட்டளைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் கதிரவேலு கௌரிகாந்தனால் இந்த வழக்கு சட்டத்தரணி மூலமாகக் கடந்த 17 ஆம் திகதி தாக் கல் செய்யப்பட்டது.

குறித்த உறுப்பினர், தன்னை சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து கடந்த மே மாதம் 26 ஆம் திகதியிலிருந்து நீக்குவதாக வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கவுள்ளது என்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும், அந்த அறிவித்தல் சட்டவலுவற்றதென்றும், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்படி எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு அப்பால் அமைந்துள்ளது என்றதுமான அடிப்படையில் அறிவித்தலைப் புறந்தள்ளுவதான உறுதிகேள் எழுத்தாணை ஒன்றை வழங்குமாறும், அறிவித்தலைப் பிரசுரிக்கக்கூடாதென தடை செய்வதான தடை எழுத்தாணையை வழங்குமாறும், அதனை இரண்டாம் எதிர்மனுதாரரான யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் எடுக்கக்கூடாது எனத் தடை செய்வதான இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை மீயுயர் நீதிமன்ற விதிகளின் கீழ் வழங்குமாறும், வழக்குச் செலவு மற்றும் நீதிமன்று கருதும் பிறநிவாரணங்களை வழங்குமாறும் கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் எதிர்மனு தாரர்களாக தேர்தல்கள் ஆணையாளர் (பத்தரமுல்லை), யாழ். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர், வலி.தென்மேற்குப் பிரதேசசபைத் தவிசாளர், அதன் செயலாளர், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் செயலாளருமான மாவை சேனாதிராசா, கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அதனைப் பரிசீலித்த மேல்நீதிமன்று அவை தகுந்ததாக அமையவில்லை என்று தெரிவித்து வழக்கை நிராகரித்துத் தள்ளுபடி செய்தது. (ற-4)

# தொடர்ச்சிகள்

## 13ஆவது

கட்சியின் தலைவராகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமாக விளங்கிய அமிர்தலிங்கத்தின் நினைவு நாள் நிகழ்வுகள், மார்ட்டின் வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போதே தெரிவித்ததாவது,

"தமிழ் மக்களின் பிரச்சினை சர்வதேசமயப்படுத்தியதில் முதன்மையானவர் அமிர்தலிங்கம். இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்பது தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்பவர்களது கருத்துக்களை உள்ளடக்காது இரு அரசுகளினால் திணிக்கப்பட்ட ஒன்று. இது தொடர்பில் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், இரா.சம்பந்தன் ஆகியோர் அப்போதே, 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் தீர்வாகாது என்பதை இந்தியாவுக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

எமக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வே தேவை. இதனை நான் சொல்வதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் சமஷ்டித் தீர்வு முன்வைக்கப்பட்டது. இதனை அப்போதைய சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட எரிக்சொல்ஹெய்ம் முன்வைத்திருந்தார். அவர் இந்தியாவிடம் கேட்டு, அவர்களின் அனுசரணையுடனேயே சமஷ்டியை முன்வைத்திருந்தார்.

அப்படியானால் இந்தியா 13 ஆவது திருத்தத்தையும் தாண்டி அதிகாரப் பரவலாக்கத்துக்கு தயாராகவே இருந்திருக்கின்றது. எனவே இந்தியாவுடனான பேச்சின்போது, 13 ஆவது திருத்தத்தில் இருந்து ஆரம்பிக்காமல், சமஷ்டி அடிப்படையில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். சமஷ்டியை தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டுபிடிக்கவில்லை. 1949 ஆம் ஆண்டிலிருந்து தமிழரசுக் கட்சியே அதனை முன்னிறுத்தி வந்தது.

தற்போது வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது சாத்தியமற்றதாகவே உள்ளது. ஏனெனில், கிழக்கு மாகாணத்தில் இனவிகிதாசாரம் மாற்றியமைக்கப்பட்டு விட்டது. அதனால் கிழக்கு மாகாணத்திலிருந்து வரக்கூடிய கோரிக்கைகள் அபாயகரமானதாக இருக்கும்.

சுவிஸ் நாட்டில் உள்ளதைப் போன்று, மாவட்ட மட்ட சுயாட்சியைக் கொண்ட ஒரு சமஷ்டி அடிப்படையிலான தீர்வே எமக்குத் தேவை"- என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா,

"நாம் மாகாணசபைத் தேர்தலின் போது, சமஷ்டியையே எமது அரசியல் தீர்வாக முன்வைத்து மக்களிடம் வாக்கு கேட்டிருந்தோம். அதனை மக்கள் ஏற்றுக் கொண்டு வாக்களித்துள்ளனர். தற்போது தமிழரசுக் கட்சியைத் தடை செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஏற்கனவே இரு தடவை தமிழரசுக் கட்சி தடை செய்யப்பட்டிருந்தது. இவற்றுக்கு நாம் ஒரு போதும் பயப்பட போவதில்லை.

தற்போது எமது பிரதேசத்தில் இலங்கை அரசினால் திட்டமிட்ட ரீதியில் இனஅழிப்பு செய்யப்பட்டு வருகின்றது என்பதை நிரூபிக்க தேவையான ஆதாரங்களை நாம் திரட்ட வேண்டும். அத்துடன் நில ஆக்கிரமிப்பு, பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் தொடர்பிலான ஆதாரங்களையும் திரட்ட வேண்டும்" - என்று தெரிவித்தார். (ற-5,21)

## மீனவர்

கும் பிரச்சினைகள் என்பவற்றை முன்வைத்தே இந்தக் கண்டனப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பேரணிக்கு மீனவ அமைப்புகளும் ஆதரவு தெரிவித் துள்ளதுடன், பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களும் பங்கெடுக்கவுள்ளன.

இந்தநிலையில் மாவட்ட கிராமிய கடற்தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவரும், கடந்த மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தவருமான நா.பொன்னம்பலம் என்பவர், "இங்குள்ள மீனவர்களுக்கு எந்தவொரு பிரச்சினைகளும் இல்லை, இந்தப் போராட்டம் தேவையில்லை" என்று யாழ். நகர பொலிஸ் நிலையத்தில் நேற்று பத்து முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளார். இந்த முறைப்பாடுகள் இன்று நீதிமன்றில்சமர்ப்பிக்கப்படும்என்று தெரியவருகின்றது. (ற-5)

## சம்பந்தனின்

பறை, மற்றும் கை கழு வும் இடங்களைச் சோதனையிட்டனர்.

சில நிமிடங்கள் கழித்து, அந்த அதிகாரி இரா. சம்பந்தனிடம் வந்து மரியாதை செய்து, நன்றி தெரிவித்து விட்டுச் சென்றார் - என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## சந்திரசிறியின்

திலக மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இராணுவ ஆளுநர் பதவியானது ஜனநாயக நாட்டிற்கு ஆரோக்கியமல்ல. உண்மையில் வடக்கில் ஆளுநராக சந்திரசிறியை மீண்டும் நியமித்தமையானது அரசின் பிழையானதொரு செயற்பாட்டையே சுட்டிக்காட்டுகின்றது. 1988 ஆம் ஆண்டு முதன் முதலாக வடமாகாண சபை நிறுவப்பட்டபோது அங்கு ஆளுநராக மேஜர் நளின் செனவிரத்ன என்பவரே பதவி வகித்தார்.

அப்போது அந்தப் பதவி நியாயமானது என்றே கூறவேண்டும். ஏனெனில், அப்போதே நாட்டில் போர் சூடுபிடிக்க ஆரம்பமானது. அத்தோடு, இந்திய இராணுவத்தினரின் வருகையும் அக்காலக்கட்டத்திலேயே ஓங்கியிருந்தன.

ஆனால், தற்போதைய அமைதியான சூழ்நிலையில் இராணுவ ஆளுநர் பதவி தவறானதே. இலங்கை பிரச்சினை தொடர்பில் தென்னாபிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளும் கவனம் செலுத்தும் இந்நிலையில், சந்திரசிறியின் பதவி நீடிப்பானது இலங்கையின் இராஜதந்திர செயற்பாட்டிற்கும் குந்தகத்தை விளைவிக்கக் கூடும்.

இராணுவ ஆட்சி நிலவும் பாகிஸ்தானில்கூட ஆளுநராக சிவிலியன்கள் நியமிக்கப்படும்போது ஜனநாயக நாடான இலங்கையில் இராணுவ ஆளுநர் பதவியானது பிழையான ஒன்று என்றே மீண்டும் தெரிவிக்க வேண்டும். வடக்கின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டே சந்திரசிறிக்கு பதவி நீடிக்கப்பட்டது என்பதே இவ்விடயத்தில் அரசின் நிலைப்பாடாயின், ஆளுநராக முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வாவை நியமித்திருக்கலாம்.

அதனால், வடக்கின் நிலவரம் குறித்து அரசுக்கு அச்சமும் ஏற்பட்டிருக்காது, அங்குள்ள மக்களும் சரி, அரசியல்வாதிகளும் சரி, சிவில் ஆளுநர் ஒருவரே பதவி வகித்துள்ளார் என நிம்மதியாக இருந்திருப்பார்கள். இவற்றையெல்லாம் விடுத்து அரசு தற்போது செய்துள்ள இச்செயற்பாடானது சர்வதேசத்திற்கு தவறானதொரு முன்னுதாரணத்தையே காண்பிக்கின்றது" என்று தெரிவித்துள்ளார். (ற-சி)

## சவாரி

அவர் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சவாரிப் போட்டியில், ஒலிபெருக்கி பயன்படுத்துவதற்கு அனுமதி கோரி கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் பொலிஸாருக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை அல்லது நேற்று முன்தினம் அனுமதி வழங்கப்படலாம் என்று தெரிவித்திருந்தனர் என்றும், இறுதி நேரத்தில் மேலிடத்திலிருந்து அனுமதி கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவித்து போட்டி நிறுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை, வேறு ஒரு நாளில் இதற்குரிய அனுமதி வழங்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ற-5)

## பிரெஞ்

குடிதண்ணீர் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குகிளிநொச்சி விவசாயிகளிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பி இருக்கும் நிலையில் இந்தத் திட்டத்திற்கான தனது நிதியை ஏ.எவ்.டி நிறுத்திவிடப்போவதாக செய்திகள் வெளியாகி இருந்தன. ஆனால் அப்படியான எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று 'இலங்கை மற்றும் மாலைதீவுக்கான திட்ட அலுவலர் பெரெரா லெகொக் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் இரணைமடு குளத்தில் இருந்து தண்ணீரை அகத்துறிஞ்சுவதற்கான வசதிகளைச் செய்வது, பளை வரைக்கும் தண்ணீர் விநியோகக் குழாய்களைப் பொருத்துவது மற்றும் பளையில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பது ஆகிய வேலைகளுக்கே ஏ.எவ்.டி. கடனுதவி வழங்க இருந்தது என்று தெரிவித்த லெகொக், இரணைமடு குளத்தைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கும் குடிதண்ணீர் திட்டத்தைச் செயற்படுத்துபவர்களுக்கும் இடையில் எட்டப்படப்போகும் உடன்படிக்கைக்காகத் தாம் காத்திருக்கின்றனர் என்று தெரிவித்தார்.

அந்த முடிவு தெரிந்த பின்பே திட்டத்திற்கு கடனுதவி வழங்குவதா அல்லது திட்டத்தில் இருந்து வெளியேறுவதா என்ற இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். அதுவரைக்கும் தாம் காத்திருப்பார்கள் என்றும் தெரிவித்தார். (உ)

## இலங்கை

முயற்சி பயனளிக்கவில்லை. நிலுவையில் உள்ள தமது பயணத் துக்கான கோரிக்கையை, இலங்கைக் காவும் மற்றும் சில நாடுகளின் அரசுகள் ஏற்றுக்கொள்ள ஊக்குவிப்பதாக,அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அளுத்கமவில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக, இலங்கை அரசிடம் விடுத்திருந்த அவசர கோரிக்கை ஒன்றில், குற்றவாளிகளை நீதிக்கு முன் நிறுத்த உறுதியான நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் மத சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்தவும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இவ்வாறான சம்பவங்களின் போது பொறுப்புகூறச் செய்தலை உறுதிப் படுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டை அரசு வெளிப்படுத்த வேண்டும் என அவர் கோரியிருந்தார். (ற-சி)

## சீன விமான

கான இந்த நிலையம், 40.3 மில்லியன் டொலர் செலவில் அமைக்கப்படவுள்ளது. உள்நாட்டிலேயே விமானங்களைத் தயாரிக்கும் திட்டத்தையும் உள்ளடக்கிய இந்த திட்டத்தில், சீனப் பணியாளர்களுக்கு, வெள்ளைக் கடற்கரையில் (மாபிள் பீச்) வதிவிடத் தொகுதி ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த முடிவு, 1987 இல் கையெழுத்திடப்பட்ட இந்திய-இலங்கை அமைதி உடன்பாட்டை மீறும் செயல் என்று இந்தியத் தரப்பு கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## இ.போ.ச -

இதனால் மத்திய பஸ் நிலையத்தில் மீண்டும் இருதரப்புக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இ.போ. ச. நிர்வாகிகள்யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். (ஐ-106)

## 17ஆம் திகதி

தெரிவிக்கையில்;

இரணைமடு குடிதண்ணீர் திட்டத்துக்கென ஆசியா அபிவிருத்தி வங்கி உதவ முன்வந்த நிதி, அந்தத் திட்டத்தில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக திருப்பி அனுப்பப்பட இருக்கிறது. இதனை தடுத்து நிறுத்தி அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும், அல்லது வேறு மாற்று திட்டங்களை முன்வைக்குமாறும் ஏற்கனவே நாம் வடமாகாண சபையிடம் கோரியிருந் தோம். இந்த நிலையில் இரண் டாம் கட்டமாக கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளோம் - என்றார். (ஐ)

## ஆலயச் சூழலில் மது விற்றோருக்கு நீதிமன்றால் தண்டம்

மன்னார், ஜூலை 14

மடு திருவிழா காலத்தில் மது வரித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட விசேட கடமையின்போது மதுவரி குற்றச் செயல்களில் ஈடுபட்ட 6 பேருக்கு நீதிமன்றத்தினால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட மது தொடர்பான திணைக்களப் பொறுப் பதிகாரி தர்மலிங்கம் நந்தகுமார் தெரிவித்தார்.

கடந்தவாரம் மன்னார் மடு தேவாலயத்தின் திருவிழாவை முன்னிட்டு மது தொடர்பான குற்றச் செயல்களை அவதானிக்கும் பணியில் மன்னார் மாவட்ட மதுவரித் திணைக்களம் ஈடுபட்டிருந்தது. இதன்போது கசிப்பு மற்றும் கள், அரச சாரயம் என்பவற்றை ஆலயச் சூழலில் வைத்து விற்பனை செய்த 6 பேரை உத்தியோகத்தர்கள் கைது செய்தனர்.

அவர்களுக்கு எதிரான வழக்கு கடந்த 9 ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்டபோது கசிப்பு வைத்திருந்த இருவருக்கு தலா 15 ஆயிரம் ரூபாவும், அரச சாராயம் வைத்திருந்த மூவருக்கு தலா 5 ஆயிரம் ரூபாவும், கள் வைத் திருந்த ஒருவருக்கு தலா 1500 ரூபாவும் தண்டப்பணமாக விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (வ-14)

# மனித உரிமையை பாதுகாக்கும் வகையில் இலங்கை பிரச்சினையில் முடிவெடுக்குக

## இந்தியப் பிரதமருக்கு ராமதாஸ் வலியுறுத்து

சென்னை, ஜூலை.14

இலங்கை போர்க்குற்ற விசாரணைக்கு ஆதரவளிக்க மத்திய அரசு மறுப்பதா? என்று ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ள ராமதாஸ் இலங்கைப்பிரச்சினையில் முந்தைய காங்கிரஸ் அரசின் நிலைப் பாட்டை புறந்தள்ளிவிட்டு, மனித உரிமையை பாதுகாக்கும் வகையிலான நிலைப் பாட்டை பிரதமர் மோடி மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசாரணைக்கு இந்தியா ஆதரவளிக்காது என்று வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அறிவித்திருக்கிறார். இலங்கைக்கு ஆதரவான இந்தியாவின் இந்த நிலைப்பாடு அதிர்ச்சியளிக்கிறது.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜை வெள்ளிக்கிழமை டில்லியில் சந்தித்துப் பேசினார். அதன் பின் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளரிடம், இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமை சபையின் போர்க்குற்ற விசாரணையை இந்தியா ஆதரிக்குமா? என்று கேட்டபோது, "இலங்கை மீதான போர்குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தக் கோரும் தீர்மானம் ஐ.நா. மனித உரிமைப் சபையயில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அதில் இந்தியா பங்கேற்கவில்லை. அதுமட்டுமன்றி, இலங்கைக்கு நிபுணர் குழுவை அனுப்பி விசாரிக்க வேண்டும் என்று தீர்மா னத்தில் இடம்பெற்றிருந்த ஒரு பிரிவை எதிர்த்து இந்தியா வாக்களித்துள்ளது. எனவே, இந்தப் பிரச்சினையில் எங்களின் நிலைப்பாடு தெளிவாக இருக்கிறது. இந்த விசாரணையை ஆதரிக்க மாட்டோம் என்று பதிலளித்திருக்கிறார். இலங்கைக்கு ஆதரவான இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை பீரிஸிடம் சுஷ்மா சுவராஜும் தெரிவித்து விட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.



இலங்கைப் பிரச்சினையில் முன்னைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் நிலைப்பாட்டையே தங்களின் நிலைப்பாடாக வெளியுறவு அமைச்சரும், செய்தித் தொடர்பாளரும் உறுதி செய்திருப்பது மிகுந்த ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் அளிக்கிறது. இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை தொடர்பான தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் முந்தைய இந்திய அரசு நடுநிலை வகித்தபோது அதை தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. ஐ.நா. குழுவின் விசாரணையை இலங்கையில் நடத்த ராஜபக்ஷ மறுத்து விட்ட நிலையில், அந்த விசாரணை சென்னையில் நடத்த மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தி வந்தது. இத்தகைய சூழலில் இந்தியா இப்படி ஒரு நிலைப்பாட்டை மேற்கொண்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

உலகின் எந்தப் பகுதியில் மனித உரிமை மீறல்கள் நடந்தாலும் அதைத் தட்டிக் கேட்பது தான் இந்தியா போன்ற ஜனநாயக நாடுகளின் கடமையாக இருக்க வேண்டும். கடந்த காலங்களில் இந்தக் கடமையை இந்தியா சரியாகவே செய்திருக்கிறது. இலங்கைப் பிரச்சினையிலும் இக் கடமையை இந்திய அரசு சரியாகச் செய்ய வேண்டும் என்பது தான் உலகெங்கும் உள்ள தமிழர்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்து சுதந்திரமான, நேர்மையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள், கனடா போன்ற நாடுகள் ஐ.நா. உள்ளிட்ட பன்னாட்டு அரங்குகளில் கடந்த பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகின்றன.

இலங்கையில் எந்தத் தவறும் செய்யாத ஒன்றரை லட்சம் அப்பாவித் தமிழர்களை படுகொலை செய்த ராஜபக்ஷ அரசு, அதன்பின் 5 ஆண்டுகளான பின்னரும் தண்டிக்கப்படவில்லை.

அதே நேரத்தில், இராணுவத்தைக் குவித்து தமிழர்களை அச்சுறுத்துவது, சொத்துக்களை பறிப்பது, தமிழக மீனவர்களைக் கைதுசெய்து கொடுமைப்படுத்துவது போன்ற மனித உரிமைக்கு எதிரான செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

இலங்கைப் போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான அரசு தான் நீதி பெற்றுத் தரும் என்று தமிழ்நாட்டு மக்கள் நம்பு கிறார்கள். எனவே, இலங்கைப் பிரச்சினையில் முந்தைய காங்கிரஸ் அரசின் நிலைப்பாட்டை புறந்தள்ளிவிட்டு, மனித உரிமையை பாதுகாக்கும் வகையிலான நிலைப்பாட்டை பிரதமர் மோடி மேற்கொள்ள வேண்டும்; இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணையை சென்னையில் நடத்த அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்"- என்றுள்ளது. (வ)

## ஆஸியில் மீண்டும் பெரிய ஆர்ப்பாட்டம்

நடுக்கடலில் ஆஸ்திரேலிய அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் 153 பேரின் நிலை தொடர்பாக அறிய மேலும் ஒரு பெரிய ஆர்ப்பாட்டத்தை அகதிகளுக்காகச் செயற்படும் அமைப்பான Refugee Action Coalition Sydney ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி ஒரு மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் 153 பேர் தொடர்பாக அறிவதற்கு மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன.

இந்தியாவில் இருந்து கடந்த மாதம் தமது பயணத்தைத் தொடங்கிய புகலிடக் கோரிக்கையாளர்கள், சுங்கப் படகில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை ஆஸ்திரேலிய அரசாங்கம் கடந்த வாரம் நீதிமன்றத்தில் உறுதி செய்திருந்தது.

அவர்கள் குறித்த விவரங்களைத் தருமாறு கோரி, மனித உரிமைகள் அலுவலகம் இவ்வாரம் முற்பகுதியில் அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தது. சர்வதேச சட்டத்தின் கீழான கடப்பாடுகளின் பின்னணியில், ஆஸ்திரேலியா புகலிடக் கோரிக்கையாளர்களை எவ் வாறு நடத்துகிறது என்பது பற்றி நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அகதிகள் தொர்டர்பான உண்மையான நிலைமையை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் எனக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)



யாழ்.வேம்படி வீதி நான்காம் குறுக்கு வீதிச் சந்தியில் சேதமடைந்து பள்ளமாகக் காணப்படுவதால் இந்த வீதியூடாகப் பயணிப்போர் மிகுந்த போக்குவரத்துக் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். அந்த வீதி மேலும் சேதமடைந்து போக்குவரத்து தடைப்படாமல் இருப்பதைத் தவிர்க்க உடனடியாக இந்த வீதியைத் திருத்த உரியவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இந்த வீதியூடாகப் பயணிப்போர் தெரிவித்துள்ளனர். (வ-51)

## கிளிநொச்சி மாவட்டத்தில் 25 பாடசாலைகளில் முறைப்பாட்டுப் பெட்டிகள்

கிளிநொச்சி, ஜூலை 14

மாணவர்களுக்கு ஏற்படும் துஷ்பிரயோகங்களை தெரியப்படுத்தக்கூடிய முறைப் பாட்டுப் பெட்டிகள் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 25 பாடசாலைகளில் இன்று திங்கள் தொடக்கம் வைக்கப்படவுள்ளன.

மகிழ்ச்சியும் கவலையும் என்னும் முறைப்பாட்டுப் பெட்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்றது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் கல்வி அமைச்சுடன் இணைந்து இந்தத் திட்டத்தை கிளிநொச்சி



மாவட்டத்தில் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் என்.கௌரிதாசன் தலைமையில் நடைபெற்ற பெட்டிகள் வழங்கும் நிகழ்வில் கிளி.மாவட்டத்தைச் சேர்ந்த 25 பாடசாலைகளின் அதிபர்களும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கு ஏற்படும் துஷ்பிரயோகங்கள் தொடர்பான விவரங்களை இந்தப் பெட்டியில் மாணவர்கள் போடலாம் என்றும் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமைகளில் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள், பாடசாலைகளில் சிறுவர் விவகாரங்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள், மாணவப் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் பெட்டி திறக்கப்பட்டு முறைப்பாடுகள் இருப்பின் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களுக்கு பாடசாலைகளில் வீடுகளில் ஏற்படும் துஷ்பிரயோகம் தொடர்பான விவரங்களை எழுதிப் பெட்டியில் போடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## யானைத் தந்தங்களுடன் ஒருவர் கைது

யானைத் தந்தங்கள் இரண்டை விற்பனை செய்யமுற்பட்ட ஒருவர் சாலியவெவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் படி போலி நுகர்வோர் ஒருவரை ஏற்பாடு செய்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் புக்களிலேயே குறித்த நபர் சிக்கியுள்ளார்.

சந்தேகநபரால் ஆறு இலட்சம் ரூபாவுக்கு குறித்த யானைத் தந்தங்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (வ)

# வங்குரோத்து நாடாக மாறுகின்றது இலங்கை

## அனுரகுமார திஸாநாயக்க குற்றச்சாட்டு

அம்பாறை, ஜூலை 14

எமது நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்தடைந்த, சமூக ரீதியாக சீரழிந்த சட்டம் இருட்டறையான குடும்ப ஆட்சி கொடிகட்டிப் பறக்கின்ற நீதி நேர்மையில்லாத ஜனநாயகம் அதன் இறுதி மூச்சு விடுகின்ற, தேசிய மற்றும் மத முரண்பாடுகள் அதிகரிக்கின்ற நாடாக மாறியுள்ளது - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க.



மக்கள் விடுதலை முன்னணியின் 7ஆவது தேசிய மாநாட்டின் போது முன்வைக்கப்பட்ட கொள்கைத் திட்டம் சம்பந்தமாக மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று முன்தினம் அம்பாறை நகர மண்டபத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

"நாட்டின் தற்போதைய நிலைமையில் அழுத்தங்களுக்கு உள்ளான பொதுமக்களிடையேயும், பல்வேறு மக்கள் பிரிவினரிடமும், ஜனநாயகம், நல்லாட்சியை நேசிக்கின்ற முற்போக்கு சக்திகளுக்கிடையேயும் நாட்டில் ஒரு மாற்றம் பற்றிய தேவை எழுந்துள்ளது.

நெருக்கடிக்கு உள்ளான இலங்கை சமூகம் மாற்றத்தை கோரி நிற்கின்றது. சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார ரீதியாக நெருக்கடிக்கு உள்ளான இலங்கை சமூகத்திற்கு தேவையான மாற்றம் என்ன?, அது தனிநபர் மாற்றம் அல்ல. அதற்குப் பதிலாக தற்போதுள்ள சமூக, பொருளாதார, அரசியல் சரித்திரத்தின் விரிவான மாற்றமே தேவைப்படுகின்றது.

அரசின் வீண்விரயம், ஊழல், மோசடி, கொள்ளையிடல், நிதி மோசடி மற்றும் அரச நிறுவனங்களின் நஷ்டம் ஆகியவற்றினால் நாடு பொருளாதார ரீதியாகப் பெரும் அழிவைச் சந்தித்துள்ளது.

தற்போதைய எமது நாட்டுக்கு தேவை நவீன சோஷலிச கொள்கை அடிப் படையிலான மக்கள் நேயமுள்ள ஆட்சியுடனான புதிய சமூகமாகும். அவ்வாறான சமூகத்தைக் கட்டியெழுப்ப பொய்யான வாக்குறுதிகளினால் முடியாது. அதனை செய்ய முடியாத் தெளிவான தும் நிலையான கொள் கைகளை நடைமுறைபடுத்து வதன் மூலமாகும். நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக பிரதானமான ஐந்து துறைகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் எமது நோக்கு கொள்கை திட்டத்தை மக்கள் முன்வைக்கின்றோம்"- என்று தெரிவித்தார். (ற)

# 10 அம்சத் திட்டத்துடன் களமிறங்கும் சந்திரிகா

## கொழும்பு ஊடகம் கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 14



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 10 அம்சங்களை உள்ளடக்கிய கொள்கைத்திட்டத்துடன் அரசியலில் மீண்டும் நுழைய உள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. கொழும்பு ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளதுடன், சந்திரிக்கா இது குறித்து விரைவில் அறிவிப்பை வெளியிடுவார் எனவும் குறிப்பிட்டுள்ளது.

"அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட விரும்புகிறாரா என்பது தெரியாது. ஆனால் அவர் இரு பிரதான கட்சிகளினது பிரமுகர்களுடனும் இது குறித்து ஆராய்ந்துள்ளார், தற்போதைய அரசு குறித்து அதிருப்தியிலிருக்கும் பல மூத்த அமைச்சர்களுடனும் அவர் இது குறித்து பேசியுள்ளார் என்றும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ற)

# ஸ்ரீசண்முக இந்து மாணவியர் இருவரின் நூல்கள் வெளியீடு



திருகோணமலை, ஜூலை 14

திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி மாணவிகளான செல்வி அபிநயா அபிராம் எழுதிய 'திருகோணமலை பரம்பரை', செல்வி அருள்சுலக்ஷிகா எழுதிய 'இராணியாக மாறிய பாம்பு' ஆகிய இரண்டு நூல்களின் வெளியீடு நேற்றுமுன்தினம் காலை கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் பிரதிச் செயலாளர் சி.தண்டாயுதபாணி பிரதம விருந்தினராகவும், திருகோணமலை வலயக் கல்வி பணிப்பாளர் ந.விஜேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்கள்.

மாணவிகள் இருவரையும் கல்லூரி அதிபர் திருமதி சுலோசனா ஜெயபாலன் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தார். ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி இன் ரறக்ட் கழகத்தினர் ஏற்பாட்டில் இந்த வெளியீட்டு விழா நடைபெற்றது. (ற)

# சப்ரகமுவ பல்கலை மூடப்பட்டது



கொழும்பு, ஜூலை 14

பலத்த காற்றுடன் கூடிய வானிலை நிலவுகின்றதை அடுத்து சப்ரகமுவ பல்கலைக்கழகம் நேற்று முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படும் என பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சந்தன ஸ்ரீ உடவத்த அறிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் தொடக்கம் வீசும் பலத்த காற்றின் காரணமாக மாணவர்களின் விடுதிகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் உபவேந்தர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் பல்கலைக்கழகங்களில் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன என்றும், மின்னல் தாக்கம் அல்லது வேறு இடர்கள் ஏற்படும் பட்சத்தில், மாணவர்கள் சிறந்த மனநிலையில் பரீட்சையை எதிர்கொள்ள முடியாது என்பதை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் பேராசிரியர் சந்தன ஸ்ரீ உடவத்த சுட்டிக்காட்டியுள்ளதுடன், எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# ஊவா மாகாண சபை தேர்தலுக்காக எம்.பி. பதவியை துறக்கிறார் ஹரின்

கொழும்பு, ஜூலை 14

எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத் துவத்துடன் நடத்தப்படும் பேச்சு 90 வீதம் பூர்த்தியடைந்து விட்டது என்றும் கூறியுள்ள அவர், அடுத்த வாரம் இது சம்பந்தமான இறுதி முடிவை எடுக்க முடியும் என்றும், இது கட்சி தன்னிடம் விடுத்த கோரிக்கை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டுமாயின், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலக வேண்டும் அதற்கு மாற்று ஏற்பாடுகள் கிடையாது. ஊவா மாகாண சபைத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் வெற்றி பெற முடியும் என எதிர்பார்க்கின்றேன்.

தேர்தலை இலக்கு வைத்து அரசு இலவசங்களை வழங்கும் செயற்பாடு ஒன்றை ஆரம்பித்துள்ளது. ஜனாதிபதியின் புதல்வர்களுடன் தான் இரவு களியாட்ட விடுதிகளுக்கு சென்றதை சாட்சியங்களுடன் உறுதிப்படுத்தினால் நான் அரசியலில் இருந்து ஒதுங்கி விடுகின்றேன். ஜனாதிபதியின் புதல்வர் நாமல் ராஜபக்ஷவை சில றகர் போட்டிகளில் தவிர வேறு எங்கும் தனியாக சந்தித்தில்லை"- என்றும் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றில் நடந்த விவாதத்தின் போது, அரசைக் குற்றம் சுமத்தும் ஹரின் பெர்ணான்டோ, இரவு நேரங்களில் ஜனாதிபதியின் புதல்வர்களுடன் இரவு விடுதிகளுக்கு சென்று மதுபானம் அருந்துகின்றார் என்று வட மேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர குற்றம் சுமத்தியிருந்தார். (ற)

# மாற்று மக்கள் முன்னணி; ஆலோசிக்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 14

மாற்று மக்கள் முன்னணி ஒன்றை உருவாக்குவது குறித்து ஜே.வி.பி கவனம் செலுத்தி வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்துக் கூறிய ஜே.வி.பி.யின் பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத்,



"ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினரை இணைத்துக் கொண்டு ஒரு புதிய மாற்று மக்கள் முன்னணியை உருவாக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது"- என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"அரசு மற்றும் பிரதான எதிர்க்கட்சியின் அரசியல் நடவடிக்கைகளுக்கு சவால் விடுக்கும் வகையில் புதிய மாற்று மக்கள் முன்னணி உருவாக்கப்படும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் புழுதடைந்தஜனாதிபதிமுறைமை ஒன்றையே பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

மக்கள் பிரச்சினைக்கு தீர்வு காண மாற்று அரசியல் திட்டமொன்றை உருவாக்க வேண்டியது அவசியமானது. இந்த இலக்கை அடையும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற கட்சிகளின் உறுப்பினர்களின் ஆதரவு இதற்காக பெற்றுக் கொள்ளப்படும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# சீனன்குடா விமான பராமரிப்பு நிலையம் பீரிஸிடம் கேள்வி எழுப்பினாராம் சுஸ்மா

புதுடில்லி, ஜூலை 14

சீனன்குடாவில் விமானத்தள பராமரிப்பு நிலையத்தை அமைக்க சீன நிறுவனத்துக்கு, இலங்கை அரசு அனுமதி அளித்தமை தொடர்பில் வெளிவிவிகார அமைச்சர் ஜி.எல். பீரிசிடம், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் கேள்வி எழுப்பியுள்ளார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.



கடந்த வெள்ளிக்கிழமை புதுடில்லியில் நடந்த சந்திப்பின் போது இதுகுறித்து சுஸ்மா சுவராஜ் கேள்வி எழுப்பியிருந்தார் என்று புதுடில்லி அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதுபற்றி முறைப்படி அறிவிக்கப்படாத போதும், சீனாவின் தேசிய வான் தொழில்நுட்ப கூட்டுத்தாபனத்துக்கு சீனன்குடாவில் விமானத் தள பராமரிப்பு நிலையத்தை அமைக்க இலங்கை அரசு அனுமதி அளித்துள்ளமை குறித்து பீரிசிடம் சுஸ்மா சுவராஜ் பிரச்சினை எழுப்பியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப் படையிடம் உள்ள 34 சீனத் தயாரிப்பு விமானங்களைப் பராமரிப்பதற்கான இந்த நிலையம், 40.3 மில்லியன் டொலர் செலவில் அமைக்கப்படவுள்ளது. உள்நாட்டிலேயே விமானங்களைத் தயாரிக்கும் திட்டத்தையும் உள்ளடக்கிய இந்த திட்டத்தில், சீனப் பணியாளர்களுக்கு, வெள்ளைக் கடற்கரையில் (மாபிள் பீச்) வதிவிடத் தொகுதி ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த முடிவு, 1987ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட இந்திய - இலங்கை அமைதி உடன்பாட்டை மீறும் செயல் என்று இந்தியத் தரப்பு கூறியுள்ளது. (ற)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.